ஜனாதிபதிக் கனவைக் கைவிடாதவரை
**மகிந்தவால் தலை தூக்க முடியாது**
பக்கம் 12

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 210 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 09, வியாழக்கிழமை 23.06.2016


## மங்கள – ஹுசேன் ஒஸ்லோவில் சந்திப்பு



ஒஸ்லோ, ஜூன் 23
வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசேனை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பக்.23

# தவறான அணுகுமுறையில் அரசின் நீதிச் செயற்பாடுகள்

## சிவில் சமூகப் பிரதிநிதிகள் குற்றச்சாட்டு

“தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் கலாசாரம் காரணமாக இலங்கையில் மீண்டும் மீண்டும் வன்முறைகள் இடம்பெறுகின்றன. இந்தக் கலாசாரத்துக்கு முடிவு காணப்படாமல், நிலைமாறுகால மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் வெற்றியளிப்பது கடினம்.”

கொழும்பு, ஜூன் 23
இலங்கை அரசு நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளில் தவறான அணுகுமுறையைப் பின்பற்றுகின் றது. பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையைத் தாமதிக்கின்றது. அதே நேரம் உண்மை ஆணைக் குழுவை அமைப்பதற்கும் முயன்று கொண்டிருக்கின்றது.
இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளனர் சிவில் சமூகப் பிரதிநிதிகள்.
இலங்கையிலுள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் 70 பேர் கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.
அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு 17 மாதங்கள் கடந்துள்ளன. ஆனாலும் தண்டனையிலிருந்து தப்பித்துக்

பக்.24

# சிறுவர் துன்புறுத்தல் – துர்நடத்தையில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனை

## அதற்காக புதிய சட்டங்களை வகுக்க வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 23
சிறுவர் உழைப்பைச் சுரண்டி, சிறுவர் துன்புறுத்தல்களில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கக்கூடிய அதிகபட்ச தண்டனை, அவ்வாறு செயற்படுபவர்கள் தொடர்பாக சமூகத்துக்கு வெளிப்படுத்துவதே யாகும். சிறுவர் துர்நடத்தைகள் – துன்புறுத்தல்களில் இருந்து எமது பிள்ளைகளைப் பாதுகாக்க சட்ட திட்டங்கள் வகுக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
உலக சிறுவர் தொழிலுக்கு எதிரான தினம் நேற்று. இதனை முன்னிட்டு கொழும்பு பண்டார நாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்

பக்.24

# கொத்துக்குண்டு விவகாரத்தால் அரசு கடும் கொதிப்பு

## இராணுவம் பயன்படுத்தியதற்கு ஆதாரம் வேண்டுமாம்

கொழும்பு, ஜூன் 23
இராணுவத்தினர் தான் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தினார்கள் என்பதை எப்படிச் சொல்ல முடியும்? அதனை தமிழீழ விடுதலைப் புலிகளும் பயன் படுத்தியிருக்கலாம்தானே. இதுவரை காலமும் வெளிவராத தகவல் – போர் முடிந்து 7 வருடங்களின் பின்னர், ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறும் வேளையில் ஏன் வெளியிடப்பட வேண்டும்.
இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார் அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன.
இலங்கை அரசின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் நோக்கிலேயே இந்த விவகாரங்கள் இப்போது சொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.
அமைச்சரவை

பக்.23

## பாலியல் குற்றம் செய்யும் ஆசிரியர்களைப் பதவி நீக்குங்கள்

### வலியுறுத்தி யாழ்.நகரப் பாடசாலை மாணவர் போராட்டம்



யாழ்ப்பாணம், ஜூன் 23
யாழ்ப்பாண நகரப் பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவிகளுடன் பாலியல் துர்நடத்தையில் ஆசிரியர் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டிய மாணவர்கள், நேற் றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களை இடமாற்றம் செய்யாமல் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.
போராட்டத்தையடுத்து குற்றச்சாட்டுக்குள்ளான ஆசிரியர் நேற்று நண்பகல் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
துர்நடத்தைச் சம்பவத்தை மூடி மறைத்த குற்றச்சாட்டில், அந்தப் பாடசாலை அதிபர் மற்றும் சில ஆசிரியர்கள் விசாரணை வளையத்தினுள் உள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(விரிவு 8 ஆம் பக்கம்)

## வற் வரி அதிகரிப்பை அனுமதிக்க முடியாது

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 23
நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி பெறுமதி சேர் வரி (வற்) வீதத்தை அதிகரிப்பதற்கு அரசு

பக்.24

முச்சந்தி முரளி



குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் பாருங்கோ...

# கடத்தப்பட்ட வர்த்தகர் நேற்றுக் காலை விடுவிப்பு

வவுனியா, ஜூன் 23
வவுனியாவில் நேற்றுமுன்தினம் இரவு கடத்தப்பட்டார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்ட பிரபல வர்த்தகர் நேற்றுப் புதன்கிழமை காலை விடுவிக்கப்பட்டார்.
வவுனியாவில் எஸ்.எஸ்.ஆர். என்ற பெயரில் வர்த்தக நிலையம் மற்றும் அரிசி ஆலை என்பவற்றை நடத்திவரும் குறித்த வர்த்தகர், நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் அவரது வர்த்தக நிலையத்தில் இருந்து வீடு நோக்கி சென்றபோது, இனந்தெரியாத நபர்களினால் வெள்ளைவானில் கடத்தப்பட்டார் என வவுனியா பொலிஸார் தெரிவித்திருந்தனர்.
கடத்தல் சம்பவத்தை அடுத்து வவுனியா பொலிஸார் தீவிர தேடுதல்

பக்.24

## காணாமற்போனோருக்கு அலுவலகம் நிறுவும் சட்டவரைவு நாடாளுமன்றில்

### முன்வைத்தார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜூன் 23
காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்காக தனி அலுவலகம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான சட்டவரைவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைத்தார்.
நாடாளுமன்றம் நேற்று பிற்பகல்

பக்.24

# பாலியல் துன்புறுத்தல்களை ஒருபோதும் மறைக்காதீர்கள்

## பாதிக்கப்படுபவருக்காக ஒத்துழையுங்கள் என்கிறார் யாழ். மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூன் 23
பாலியல் துன்புறுத்தல் – துர்நடத்தைச் சம்பவங்களை மறைக்கவோ அல்லது அதனைச் செய்தவர்களை பாதுகாப்பதற்கோ ஒத்துழைப்பு வழங்கக் கூடாது. பாதிக்கப்பட்டவர்களுக்காக அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார். யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.
யாழ். நகருக்கு அண்மையாகவுள்ள பாடசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாலியல் துர்நடத்தைச் சம்பவம் தொடர்பில்

பக்.24

Digitized by Noolaham Foundation.

# பாடசாலையை தாரைவார்த்தால் எம் சந்ததிகள் எப்படிக் கற்கும்?

## கௌதாரிமுனை கிராம மக்கள் பரிதாபக் குரல்


இராணுவக் கட்டடம்.




பாடசாலையின் தற்போதைய நிலை.

கிளிநொச்சி, ஜூன் 23
போரால் அழிவடைந்த கௌதாரி முனை அ.த.க பாடசாலையை மீள ஆரம்பிக்காது இராணுவத்தினருக்குத் தாரை வார்த்துக் கொடுத்தால் எம் சந்ததிகள் எப்படிக் கற்க முடியும். தற்போது பாடசாலை வளாகத்தில் இராணுவத்தினர் தமக்குப் புதிய கட்டடம் அமைத்துள்ளனர். இவ்வாறு கிளிநொச்சி கௌதாரி முனையைச் சேர்ந்த மக்கள் குற்றஞ்சாட்டினர்.

கௌதாரிமுனை அ.த. க. பாடசாலை போரால் அழிவடைந்துள்ளது. பாடசாலை வளாகத்துக்குள் இராணுவத்தினருக்கான சிவில் அலுவலகம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

"இந்தப் பாடசாலை போரால் முற்றாக அழிந்தது. போரின் பின்னர் பாடசாலை இயங்க வைக்கப் படவில்லை. அதனால் எமது பிள்ளைகள் அயல் கிராமத்தில் உள்ள பாடசாலைக்கே செல்கின்றனர். பாடசாலையை இயங்க வைக்க எவரும் முயற்சிக்க வில்லை. பலமுறை பலரிடம் இது குறித்துக் கூறினோம். தீர்வு கிடைக்கவில்லை. தற்போது இராணுவத்தினர் அங்கு தமக்கு அலுவலகம் ஒன்றை அமைத்துள்ளனர். அது விரைவில் திறக்கப் படவுள்ளது. அதன் பின்னர் பாடசாலையை ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது. எமது பரம்பரைகள் பாடசாலையைத் தேடி வேறு கிராமங்களுக்கு அலைய வேண்டும்" – என்று கிராம மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

"எமது கிராமத்தில் இந்தப் பாடசாலை மட்டும்தான் உண்டு. இதில்தான் நாங்கள் கற்றோம். பாடசாலையை இயக்கினால் இராணுவத்தினர் தாமாக வெளியேறி விடுவார்கள். பாடசாலையை வேண்டுமென்றே இராணுவத்தினரிடம் தாரைவார்ப்பது போன்று உள்ளது அதிகாரிகளின் செயற்பாடு" – என்று தெரிவித்தனர் கிராமத்தில் உள்ள மூத்தோர்.

"100க்கும் குறைந்தளவு மாணவர்களே கௌதாரி முனையில் உள்ளனர். அங்கு பாடசாலையை இயக்கினால் அவர்களே கல்வி கற்பார்கள். கௌதாரிமுனைக்கு அருகில் இயங்கு நிலையில் உள்ள விநாசி ஓடை பாடசாலையிலும் குறைந்தளவு மாணவர்கள்தான் கல்வி கற்கின்றார்கள். அதனால் இந்தப் பாடசாலையை ஆரம்பிக்காது இந்த மாணவர்களையும் அவர்களுடன் இணைத்துள்ளோம்.

மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமையே இந்த பாடசாலை இயங்காமைக்குக் காரணம். பாடசாலையில் இருந்த இராணுவத்தினர் அங்கிருந்து சென்று விட்டார்கள். இப்போது மீண்டும் வந்து அலுவலகம் அமைக்கின்றனர். இது தொடர்பாக மேலதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது" – என்று பூநகரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-101,21)

## வவு. பட்டதாரிகள் சங்கத் தலைவர் சுதந்திரக் கட்சியில் பதவி பெற்றார்

வவுனியா, ஜூன் 23
வவுனியாவில் புதிய கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளது என்று தெரிவித்த வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்க தலைவர் ம.ஆனந்தராஜா சிறிலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் பதவியை பெற்று கொண்டுள்ளார்.

அவருக்குக் கடந்த வாரம் ஜனாதிபதியால் இந்த நியமனம் வழங்கப்பட்டது.

வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்கத் தலைவர் கடந்த காலங்களில் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு ஆதரவாக செயற்பட்டார் என்று அமைச்சரின் ஆதரவாளர்கள் கூறினர்.

தேர்தல் காலங்களில் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அமைச்சர் ரிசாத் வழங்கினார் என்றும், தேர்தல்கள் முடிந்த பின்னர் அந்த வாக் குறுதிகள் நிறைவேற்றப் படவில்லை என்றும் ஆனந்தராஜா குற்றஞ்சாட்டுகிறார்.

அமைச்சரிடம் இருந்து விலகி மக்களுக்கான உதவிகளை வழங்குவதற்கு புதிய கட்சி உருவாக்கப்படும் என்றும், 'அகில இலங்கை மக்கள் முன்னணி' என்று அதற்குப் பெயரிடப்பட வுள்ளது என்றும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் 'உதயனி'டம் தெரிவித்திருந்தார்.

எனினும் கடந்த வாரம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்க இணைப்பாளராக நியமனம் பெற்றார்.

"வன்னி மாவட்டத்தில் முதல் தடவையாக தமிழர் ஒருவரை சிறிலங்கா சுதந்திர கட்சியின் வன்னி மாவட்ட பட்டதாரிகள் சங்க இணைப்பாளராக தெரிவு செய்ய வேண்டும் என்ற நோக்குடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திசாநாயக்க மேற்கொண்ட முயற்சியால் இந்த நியமனம் வழங்கப்பட்டது. தனிப்பட்ட விருப்பத்திற்காக இந்த நியமனத்தைப் பெற்றுக்கொள்ள வில்லை" – என்று ஆனந்தராஜா தெரிவித்தார்.

வன்னி மாவட்டத்திலுள்ள வேலையில்லா பட்டதாரிகளில் முதல் 300 பேரைத் தெரிவுசெய்து குறுகிய காலத்திற்குள் அரச நிரந்தர வேலையைப் பெற்றுக் கொடுக்க பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் உடனடியாக வன்னி மாவட்ட சிறிலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றும் வவுனியா மாவட்ட பட்டதாரிகள் சங்க தலைவர் ம.ஆனந்தராஜா தெரிவித்தார். (ற-21)

## புங்குடுதீவு மாணவியின் தாயை மிரட்டியவருக்குப் பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23
புங்குதீவு மாணவி வித்தியாவின் தாயாருக்கு அச்சுறுத்தல் விடுத்தமைக்காக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரை பிணையில் செல்ல அனுமதிக்க முடியாது என்று ஊர்காவற்றுறை நீதிவான் தெரிவித்தார்.

"அவரைப் பிணையில் விடுவிக்க இந்த நீதிமன்றுக்கு அதிகாரமில்லை மேன்முறையீட்டு நீதிமன்றில்தான் மனுத்தாக்கல் செய்யவேண்டும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிவான் எதிர்மனுதாரருக்கு நேற்றுத் தெரிவித்தார்.

வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவியின் தாயாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவி கூட்டுவன்புணர்வு வழக்கில் பிரதான சந்தேகநபர்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் நபர்களில் 9 ஆவது சந்தேக நபரான சுவிஸ் குமாரின் தாயார் மீதே குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

வித்தியாவின் தாயாரை அச்சுறுத்தியமை மற்றும் அநாகரிகமான வார்த்தைகளைப் பயன்படுத்தியமை என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அதையடுத்து சுவிஸ் குமாரின் தாயார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி சட்டத்தரணி மூலமாக ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

அதனைப் பரிசீலனைக்கு எடுத்த நீதிவான் வழக்கில் பாதிக்கப்பட்ட தரப்பினரை அச்சுறுத்தும் சம்பவத்துக்குப் பிணையில் விடுவிக்கும் அதிகாரம் சட்டப் பிரிவின்படி நீதிவான் மன்றத்துக்கு இல்லை. விரும்பினால் அடுத்த முறை சட்டப் பிரிவுடன் சமர்ப்பணம் செய்யுங்கள். அதனைப் பரிசீலித்து சட்டத்தில் ஏதாவது இடமிருந்தால் பிணையில் விடுவிக்கிறேன். இல்லையேல் மேன்முறையீட்டு நீதிமன்றில் தான் பிணைக்கான மனுத்தாக்கல் செய்ய வேண்டும் – என்றார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவருக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டால் உரிய மருத்துவரிடம் காண்பிக்குமாறு சிறைச்சாலைத் தரப்புக்குப் பணித்தார். இந்த வழக்கு எதிர்வரும் 5ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ற-4)

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 23
அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் கொழும்பு கல்வி அமைச்சுக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வெளிநாட்டில் பயிற்சிகளை முடித்து இலங்கை வந்துள்ள விசேட வைத்திய நிபுணர்களின் 300 பிள்ளைகளுக்கு இன்னும் பாடசாலைகளில் அனுமதி வழங்கவில்லை என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

[illegible] முறைக்கு அமைய [illegible]வர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலைகளைப் பெற்றுக்கொடுக்கும் கொள்கை உள்ளது. ஆனால் மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு அந்தச் சிறப்புரிமையை வழங்கவில்லை" என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நளிந்த ஹேரத் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலே மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ற-5)

## விபத்தில் நீதிவான் காயம்

மன்னார் நீதிவான் ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா பயணித்த கார் விபத்துக்குள்ளானது. நீதிவான் உட்பட 3 பேர் காயமடைந்து மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று நீதிமன்றத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் – மன்னார் பிரதான வீதியில் இலுப்பைக் கடவை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து நடந்துள்ளது. நீதிவான், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரான பொலிஸ் உத்தியோகத்தர், நீதிவானின் உதவியாளர் ஆகிய மூவருமே காயமடைந்துள்ளனர். (ற-4,56)

## தங்கூசி வலை மீன்பிடியை நிறுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 20
தடைசெய்யப்பட்ட தங்கூசி வலையைப் பயன்படுத்தி மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதை உடனடியாக மீனவர்கள் நிறுத்தவேண்டும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரமேஷ்கண்ணா அறிவுறுத்தினார்.

சட்டவிரோத தங்கூசி வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கைதுசெய்யப்படுவர். அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய தலைவர்களுக்கு நடந்தவை அரசுக்கு ஒரு பாடமாக அமையட்டும்

## முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23

தமிழர்களின் பணிவான கோரிக்கைகளை ஏற்க மறுத்து, தான்தோன்றித்தனமாக இறுமாப்புடன் செயற்பட்ட அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்ட கதி என்ன என்பதனையும் நன்கு அறிய வேண்டும். தம்மை உலகப் பெருந்தலைவர்கள் என்று பிதற்றிக் கொண்ட பலர் இன்று இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்பட்டுள்ளமை இந்த அரசுக்கு ஒரு பாடமாக அமையட்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில், தேசிய விதவைகள் பட்டயத்தினை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சலாவப் பகுதியில் ஆயுதக் கிடங்கில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு இடர்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு விரைந்து உதவிகளை நல்க வந்திருப்பது பாராட்டப்படக் கூடியது. இது அரசின் கடமையுமாகும். எதிர்பாராத இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டு பாதிக்கப்படுகின்ற மக்களுக்கான உதவிகள் விரைந்து வழங்கப்படவேண்டும்.

ஆனால் வட பகுதியில் போரினால் பாதிக்கப்பட்ட இலட்சோப இலட்சம் மக்கள் உறவுகளை இழந்து, உடல் அங்கங்களை இழந்து, வீடுகளை இழந்து, வாசல்களை இழந்து, பிள்ளைகளை இழந்து, இன்னல்படுகின்றார்கள். ஆகக் குறைந்தது அவர்களின் மிக மிக அடிப்படைத் தேவையாக கருதப்படக்கூடிய உணவுத் தேவைக்கு கூட எந்தவொரு உதவியையும் அரசு வழங்காது தாமதித்து வருவதை நாம் ஏற்க முடியாது.

ஒற்றுமையாக இருப்போம் எம்முடன் இணைந்து செயற்படுங்கள் என்று நேசக்கரம் நீட்டுகின்றார்கள். நாங்கள் மறுக்கவில்லை. நீங்கள் தமிழ் மக்களை நோக்கி அவர்களின் குறைகளைக் களையும்நோக்கில் ஓர் அடி முன்னோக்கி வாருங்கள் நாம் பத்து அடி உங்களை நோக்கி வருகின்றோம் எனத் திரும்பத் திரும்ப கூறி வருகின்றோம்.

நடந்தவற்றை மறப்போம் புதிய நல்லுறவை சிருஷ்டிப்போம் என்கின்றார்கள். எப்படி மறப்பது? மறக்கக் கூடிய விதத்திலா தமிழர்களுடன் உறவுகள் பேணப்பட்டுவந்துள்ளன? மேடைபோட்டுநீலிக் கண்ணீர் வடிப்பது மட்டும் உதவியாக அமைந்து விடாது. நீங்கள் கூறுகின்ற விடயங்களுக்கு செயல் வடிவம் கொடுங்கள் என்று அரசை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சகல வசதிகளுடனும் இருந்த மக்களில் எத்தனை ஆயிரம்பேர் அகதி முகாம்களில் ஏதிலிகளாக இன்று கிடக்கின்றார்கள். பொது மக்களின் காணிகளை விடுகின்றோம் என்கின்றார்கள். எமது மக்களும் இலவு காத்த கிளியாக தவங்கிடக்கின்றார்கள். இது எப்போது நிறைவேறப் போகிறது என்று எமக்கும் தெரியாது அரசுக்குந் தெரியாது. இவ்வாறான செயற்பாடுகளே எம்மைச் சினமடைய வைக்கின்றன. எனினும் எமக்கு ஒரு மன ஆறுதல். அரசு கவனிக்காவிட்டால் என்ன எங்கள் இரத்த உறவுகளைப் பாதுகாக்க நாங்கள் உதவ முன்வருகின்றோம் என எத்தனையோ வெளிநாட்டு உறவுகள் மற்றும் உள்ளூர் கொடையாளிகள் முன் வந்துகொண்டிருக்கின்றார்கள். இவர்களின் உதவிகள் ஆனைப் பசிக்கு சோளம் பொரி என்பது எமக்குத் தெரியும். ஆனால் அந்த உதவியாவது கிடைப்பதாக உள்ளதே என்பது ஒரு மன ஆறுதல். இவ்வாறான உதவிகளுடன் நாம் மெல்ல மெல்ல எழுவோம்.

தற்போதைய அரசுக்கு ஓர் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலம் இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்குவதற்கான திட்டங்களை விரைந்து செயற்படுத்துவார்களேயாயின், அவர்கள் அழியாத் தலைவர்களாக எம்மவர்களாலும் ஏன் இலங்கையிலுள்ள ஒட்டு மொத்த சமூகங்களாலும் போற்றி கௌரவிக்கப்படுவதுடன் இவர்களின் பெயர்கள் எமது முன்னைய உலகப் பெருந் தலைவர்களின் பெயர் வரிசைகளில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும் என்பதில் ஐயம் இல்லை.

மாறாக எமது பணிவான கோரிக்கைகளை ஏற்க மறுத்து தான்தோன்றித் தனமாக இறுமாப்புடன் செயற்பட்ட அரசியல் தலைவர்களுக்கு ஏற்பட்ட கதி என்ன என்பதனையும் அவர்கள் நன்கு அறிவார்கள் - என்றார்.

(வ-5)

**காணவில்லை**

நாவலர் றோட் நல்லூர் பகுதியில் மண் நிற மாடு ஒன்று 14.06.2016 அன்று மாலை காணவில்லை. கண்டுபிடித்து தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு இலக்கம்

077 9050185, 0778470341

**உடனடி வேலைவாய்ப்பு**

எமது ஸ்தாபனத்துக்கு

★பொதி சுமப்பவரும்
★பொருள் காட்சிப்படுத்துனரும் தேவை.

வயதெல்லை 21 - 30

நேரில் சமுகம் தரவும்.

8 am - 01 pm

**தேனு களஞ்சியம்** (நெஸ்லே)
மில் லேன், உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
T.P.No: 021 492 1258 / 077 213 1448/ 075 6420131

Galaxy Star
வெற்றி வாரம் 068 திகதி 22.06.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 08 23 40 60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 62,12,320/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2776 திகதி 22.06.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
14 26 28 70 L
போனஸ் இல.
50
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ.1,16,69,350/-
2016.06.25 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. S.S.A.R. நிலோச்குமார்
அவர்கள் அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றதையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு அவர் மேலும் பல பதவிகள் பெற்று உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.



ஆசிரியர் நலன்பேண் ஒன்றியம்
கிளி/அக்கராயன் மகா வித்தியாலயம்.

# இருவரிடம் தாபரிப்புப் பணம் பெற்று வந்த பெண் சிக்கினார்

## ஒரேநாளில் இரண்டு வழக்குகளும் நீதிமன்றில் அழைக்கப்பட்டதால்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பெண் ஒருவர் இரண்டு தடவைகள் திருமணம் செய்து அவர்களைப் பிரிந்துள்ள நிலையில், அந்த இரண்டுபேரிடமிருந்தும் அவர் தாபரிப்புப் பணம் பெற்று வருகின்றமையை ஊர்காவற்றுறை நீதிவான் நேற்றுக் கண்டறிந்தார்.

அதனால் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குறித்த பெண் முதல் ஒருவரைத் திருமணம் செய்து பின்னர் விலகி விட்டார். அவரிடமிருந்து தாபரிப்புப் பணத்தை ஊர்காவற்றுறை நீதிவான் மன்றம் ஊடாகப் பெற்று வருகிறார். இந்த நிலையில் அந்தப் பெண் வேறொருவரைத் திருமணம் செய்து அவரையும் விட்டு விலகி அவரிடமிருந்தும் நீதிமன்றம் ஊடாகத் தாபரிப்புப் பணம் பெற்று வருகிறார் என்பது நேற்றுத் தெரிய வந்தது. நேற்று இரண்டு தரப்பினருடைய வழக்குகளும் நீதிமன்றில் பண வழங்குவதற்காக வந்துள்ளன.

முதலில் ஒருவரிடமிருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட அந்தப் பெண், பின்னர் இரண்டாவது நபரது வழக்கு அழைக்கப்பட்டபோதும் அதே பெண் திரும்ப வருவதனைக் கண்ட நீதிவான் எம்.எம்.றியால், அது பற்றிக் கேள்விகேட்டபோதே சம்பவம் தெரியவந்தது. இதனையடுத்து அது பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(வ-4,101)

**திருமண நல்வாழ்த்துக்கள்**

சுபமங்கலகரமான துர்முகி வருடம் இன்று (23.06.2016)
வியாழக்கிழமை திருமண பந்தத்தில் இணையும்

திரு.திருமதி காரானசிங்கம் தம்பதியரின் அன்பு மகன் திருநிறை செல்வன்

திரு.திருமதி நற்சிங்கராசா தம்பதியரின் பாசமகள் திருநிறை செல்வி



பிரகாஷ் ஷத்தியா



தம்பதிகளை எல்லாச் செல்வங்களையும் பெற்று
பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு,

Best Wishes

இயக்குநர், ஆசிரியர்கள்,
சுடர் கல்வி நிறுவனம்.

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்**
**வைரவர் சாந்தி உற்சவம்**
**-23.06.2016-**



மேற்படி வைரவர் சாந்தி
உற்சவம்
இன்று (23.06.2016)
வியாழக்கிழமை
பிற்பகல் 5.00
மணிக்கு விசேட அபிசேகம்
நடைபெற்று பிற்பகல்
5.30 மணியளவில்
வசந்த மண்டப பூசை
ஆரம்பமாகி தொடர்ந்து
வைரவப் பெருமான்
வீதி உலா வருவார்.



**விசேட இசை நிகழ்ச்சி**

யாழ்ப்பாணம் சக்ஸபோன் சகோதரர்களின்
இசைச் சங்கமம்

| | |
|---|---|
| **சக்ஸபோன்** | **தவில்** |
| R.Y. நவரூபன் B.A. | இணுவையூர் |
| R.Y. காண்டீபன் B.F.A. | G. காண்டீபன் |
| **தபேலா** | **கடம்** |
| S. பவன் | K. ரவிசங்கர் |
| **Octopad** | **Keyboardist** |
| V. பானு | T. துவாகரன் |
| **Drummer** | **Guitarist** |
| T. காண்டீபன் | S. மயூரன் |

ஒலி பண்டத்தரிப்பு தேவன் சவுண்ட்
ஒளி பண்டத்தரிப்பு நவா ஒளி அமைப்பினர்.

வைரவர் சாந்தி உபயகாரர்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தான
தொண்டர் சபையினர்.

(C 22081)(10.17)

அனுசரணை:-
கிருபா லேனர்ஸ்
இல.226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 4353 / 0777 225292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கடலில் மீன்பிடிக்க தடை விதிக்கப்படவில்லை

## மீன்பிடி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 23

வடபகுதி கடலில் ஏனைய பிரதேச மீனவர்களுக்கு முழுமையான தடை விதிக்கப்படவில்லை. இவ்வாறு கடற்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கடல் பிரதேசத்தில் ஏனைய பிரதேச மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு தடை விதிக்கப்படவில்லை. வடக்கு – கிழக்கு கடற்பிரதேசத்தில் ஏனைய பிரதேச மீனவர்கள் தொன்றுதொட்டு மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். ஏனைய பிரதேச மீனவர்களே, தங்களுக்கு மீனவத் தொழிலைக் கற்றுத் தந்ததாக வடபகுதி மீனவர்கள் தெரிவிப்பதும் உண்டு. வடபகுதிக் கடலில் அநாவசியமாகப் பிரவேசிப்பவர்களாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுக்க வேண்டும். கடந்த காலங்களில் வடக்கு கடல் பகுதிக்குச் சென்று வந்த மீனவர்களுக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. – என்றார். (5)

பாராட்டி வாழ்த்துகிறோம்
திருவாளர் தூ. ஜீவானந்தன்
(B.A (Hons) SLPS -III P.G.Dip in Education, M.Phil



இளவாலை கன்னியர் மடம் ம.வி தனில்
இனிய தமிழ் மொழி ஆசானாய் மிளிர்ந்தீர்
தன்னிகரில்லா சேவைதனைத் தமிழுக்கு ஈந்தே
தலைமைத்துவம் மிகு அதிபராய் உயர்ந்தீர்
தற்பரன் துணையோடு நற்சேவை ஆற்றிட
நாமும் மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி பாடசாலைச் சமூகம்

பாராட்டி வாழ்த்துகிறோம்
திரு. கதிர்காமத்தம்பி சுதாகரன்
B.Com, Dip in Edu, LLB Reading



எமது பாடசாலையின் ஆங்கில பாட ஆசிரியர்
திரு. க. சுதாகரன் B.Com, Dip in Edu, LLB
Reading அவர்கள் போட்டிப்பரீட்சையில்
சித்தியடைந்து கொழும்பு D.S சேனாநாயக்க
வித்தியாலயத்தில் கௌரவ கல்வி அமைச்சர்
அகிலவிராஜ் காரியவசம்
அவர்களிடமிருந்து அதிபர் தரம் III
நியமனத்தைப் பெற்றமையை இட்டு எமது பாடசாலைச் சமூகம்
வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற்று
பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்
பாடசாலைச் சமூகம்
யா/ கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்

# விவசாயத்தில் நவீன முறைகளை பயன்படுத்தினால் இலாபமீட்டலாம்

## விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அற்புதச்சந்திரன் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு, ஜூன் 23

பழைய முறைகளைப் பயன்படுத்தி நாம் விவசாயத்தில் ஈடுபடுவதாலேயே விவசாயத்தில் அதிக லாபம் பெற முடியாதுள்ளது.

இவ்வாறு சுட்டிக்காட்டினார் முல்லைத்தீவு மாவட்ட மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன்.

நேற்றுமுன்தினம் மாங்குளம் ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழுள்ள தச்சடம்பன் கிராமத்தில் நவீன விவசாயத் தொகுதி இயந்திரங்கள், உபகரணங்கள் அறிமுக விழா நடத்தப்பட்டது. முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களம் அதை ஏற்பாடு செய்திருந்தது. ஒலுமடு விவசாயப் போதனாசிரியர் சி.பிந்துஜா தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

மாறிவரும் உலகில் விவசாயத் துறையில் பல நாடுகள் நவீன இயந்திர சாதனங்களை உபயோகிக்கின்றன. அவை மூலம் அதிகளவில் விவசாயச் செய்கையில் ஈடுபட முடிகின்றது. நேரம் மற்றும் செலவினங்களை அதிகளவில் குறைக்க முடிகின்றன.

நாம் தொடர்ந்து பழைய முறைகளையே பின்பற்றி விவசாயச் செய்கையில் ஈடுபடுகின்றோம். எம்மால் பெரியளவில் இலாபம் ஈட்ட முடியாதுள்ளது. பழைய முறைகளைப் பயன்படுத்துவதால் இளம் சமுதாயத்தினர் மத்தியில் விவசாய செய்கை தொடர்பான ஆர்வம் குறைந்து வருகின்றது. இளம் சமுதாயத்தினர் மத்தியில் விவசாயச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் இளைஞர் விவசாயக் கழகங்களுக்கு இந்த நவீன விவசாய இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றை இயக்கும் பயிற்சி வழங்கப்படுகின்றது – என்றார்.

நிலக்கடலையை பிரித்தெடுக்கும் இயந்திரம், நெல் நாற்று நடும் இயந்திரம், தாழ் நிலக் களைகளைக் கட்டுப்படுத்தும் இயந்திரம், மேட்டு நிலக் களைகளைக் கட்டுப்படுத்தும் இயந்திரம், நிலக் கடலை விதைக்கும் கருவி என்பன அறிமுகப்படுத்தப்பட்டு, இயக்கிக் காட்டப்பட்டன. நிகழ்வில் கிராம உத்தியோகத்தர், விவசாயத் திணைக்களத்தின் பாடவிதான உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ற-21,102)

# மடு ஆடி மாத திருவிழா இன்று ஆரம்பமாகிறது

மன்னார், ஜூன் 23

மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது என்று ஆலய பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தெரிவித்தார்.

திருவிழாத் திருப்பலி அடுத்த மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இன்று இடம்பெற உள்ள கொடியேற்றத்தை தொடர்ந்து எதிர்வரும் 1ஆம் திகதி வரை நாளாந்தம் காலை 6 மணிக்கு தமிழிலும், காலை 6.45 மணிக்கு சிங்கள மொழியிலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 6.15 க்கு செபமாலை மற்றும் நற்கருணை வழிபாடுகளும் இடம்பெறும். எதிர்வரும் 1ஆம் திகதி மாலை 6 மணிக்கு வேஸ்பர் ஆராதனை வழிபாடுகளுடன் நற்கருணைத் திருப்பவனியும் இடம்பெறும்.

திருவிழாத் திருப்பலி 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும்.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர், ஆயர் யோசேப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை, யாழ் மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்றாடி ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழாத் திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுப்பார்கள்.

மடுத் திருத்தலத்தின் ஆடி மாத திரு விழாவை முன்னிட்டு சுமார் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தரவுள்ள நிலையில் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சகல வித ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன – என்றும் அவர் தெரிவித்தார். (ற-56)

சீரடி சாயி மந்திர்
புனராவர்த்தன அஷ்டபந்தன
அஷ்டோத்ர (108) குண்டபக்ஷ
மஹா கும்பாபிஷேகப் பெருவிழா 26.06.2016



அன்பான அடியார்களே!
பிரதிஷ்டை :-23.06.2016(வியாழன்) இரவு 7 மணிக்கு.
எண்ணெய்க்காப்பு :- 24.06.2016 (வெள்ளி) காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணி வரை.
பால்க்காப்பு:-25.06.2016 (சனிக்கிழமை) காலை 8 மணி முதல் 10.30 மணி வரை
மஹாகும்பாபிஷேகம்:- 26.06.2016 (ஞாயிறு) காலை 8.30 மணிமுதல் 10.25 மணிவரையுள்ள சுப வேளையில்.
தொடர்ந்து ஆரத்தி, அன்னதானம் இடம்பெறும்.
மாலை 5 மணிக்கு - விசேடபூசை/ திருவூஞ்சல்/ பாபா வீதி உலா.
12 நாள்கள் மாலை 6 மணிக்கு
மண்டலாபிஷேகம் இடம்பெறும்.
அனைவரும் வருக! பாபா அருள் பெறுக.
சீரடி சாயி மந்திர்
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(C 22076)
(12,18)
T.P: 077 722 2568
077 481 5336

தேவை
யாழ் நகரில் உள்ள
அலுவலகத்திற்கு டிரைவர் தேவை.
தொடர்பு: 077 009 8336

விற்பனைக்கு
சிறியரக கல், மணல் ஏற்றும்
வாகனம் (Loader)
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 744 8617

வேலையாள் தேவை
கிளிநொச்சியில் உள்ள
தோட்டம் ஒன்றிற்கு
சமையலாள் தேவை.
வயது எல்லை 45 -55
தொடர்பு: 077 611 8365

# குருபூசை

யாழ்ப்பாணம், ஜூன் 23

இராமலிங்க சுவாமிகளின் குருபூசை இன்று முற்பகல் 10.30 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள மாகாதேவா சுவாமிகள் ஆச்சிரமத்தில் இடம்பெறவுள்ளது. பஜனை, பூசை வழிபாடுகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை சென்ற கெசாப் சீன முதலீடுகளை பார்வையிட்டார்

கொழும்பு, ஜூன் 23



அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் மற்றும், தூதரக அதிகாரிகள் குழுவினர் இரண்டு நாள் பயணமாக அம்பாந்தோட்டைக்குச் சென்றனர். சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களைப் பார்வையிட்டனர்.

மத்தல விமான நிலையம், துறைமுகம், மாகம் ருகுணுபுரபன்னாட்டு, மாநாட்டு மண்டபம், ஆகியவற்றையும் இந்தக் குழு பார்வையிட்டது. அம்பாந்தோட்டை வர்த்தக சம்மேளனப் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சு நடத்தியது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீனாவின் முதலீட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த திட்டங்கள் தற்போது முடங்கிய நிலையில் உள்ளன.

அம்பாந்தோட்டை முறைமுகம், விமான நிலையம் ஆகியவற்றை அபிவிருத்தி செய்து, ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பொருளாதார வலயம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை அரசு சீனாவுக்கு அழைப்பு விடுத் துள்ளது. (ற-5)

# போர்க்குற்ற விசாரணையை உரிய முறையில் நடத்துங்கள்

## சிவமோகன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 23

போர்க்குற்ற விசாரணைகளை உரிய முறையில் நடத்த வேண்டும். குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். அரசு அதைத் தவிர்கின்றது. குற்றவாளிகளைக் காப்பாற்றிக்கொள்ளத் துடிக்கின்றது. நீதியைக் குழிதோண்டி புதைக்கின்றது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்று, நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற்போனவர்கள் எல்லோரும் தாமாக காணாமற் போகவில்லை. சட்டத்துக்குப் புறம்பாக இலங்கை அரசின் பாதுகாப்புப் படைகள், புலனாய்வுப் பிரிவினரால் கடத்தப்பட்டனர். பின்னர் காணாமற்போகச் செய்யப்பட்டனர். ஆதாரங்கள் உள்ளன. அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் தவிக்கின்றனர்.

வெள்ளை வான் கடத்தல் தமிழ் மக்களுக்கு மாத்திரம் எதிராகச் செய்யப்படவில்லை. சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களும் கடத்தப்பட்டனர். அரசைப் பொறுப்பெடுத்தவர்கள் சட்டத்துக்கு முரணாக எதற்குச் செயற்பட்டார்கள் ?

ஐ.நா. சபைக்கு உண்மையை உரைக்க வேண்டும். செய்த குற்றங்களுக்கு பரிகாரம் தேட வேண்டும். குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். இதனைச் செய்ய வேண்டியது அரசின் கடமை. இதனை விடுத்து மூடி மறைக்க நினைக்கக்கூடாது - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ற-5)

# பிள்ளையானுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 23

முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்) எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் மா.கணேசராஜா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

2005 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மரியாள் தேவாலயத்தில் நத்தார் ஆராதனையில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கொலை செய்யப்பட்டார்.

அது தொடர்பாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதி அன்று சந்திரகாந்தன் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார். (ற-5)

## காலாவதியான மருந்துகள் கண்டுபிடிப்பு

சுமார் 10.2 பில்லியன் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மூன்று களஞ்சியங்களிலிருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தத் தகவலை நாடாளுமன்ற கோப் குழு தெரிவித்து ள்ளது.

மருந்துக் களஞ்சியத்தில் மேற்கொண்ட தேடுதலின் பின்னர், குழுவின் உறுப்பினரும் பிரதியமைச்சருமான அசோகா அபேசிங்க இதனைக் கூறியுள்ளார்.

கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கோப் குழுவின் உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவும் இந்த தேடுதலில் கலந்து கொண்டனர். இப்படியான விடயங்களை நாடாளுமன்றத்தில் வெளியிடும்போது அடிதடியில் ஈடுபட நேரும் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார். (ற-5)




பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிராம உத்தியோகத்தர்
திரு.காராளசிங்கம் கணேசலிங்கம் அவர்களுக்கு
'தேசோதயதீபம்' சர்வோதய விருது வழங்கப்பட்டது.

யாழ். மாவட்ட சர்வோதய மண்டபத்தில் 2016 தேசோதய விருது வழங்கும் விழாவில் 35 வருடங்களுக்கு மேலாக அளப்பரிய சமூக சேவையாற்றி வருபவரும். 1982 களில் தேசிய ரீதியாக நடைபெற்ற கிராமோதய சபைகளுக்கான போட்டியில் வேலணைப் பிரதேச செயலக மட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்று பத்தாயிரம் ரூபா பரிசைப் பெற்றவருமாகிய வேலணை வடக்கு கிராம உத்தியோகத்தர் கணேசலிங்கம் அவர்களுக்கு இலங்கை சர்வோதய தலைவர் கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன அவர்களால் சமூகசேவையாளருக்குரிய 'தேசோதய தீபம்' என்னும் விருதையும், சான்றிதழையும் வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காக அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இவர் மேலும் பல விருதுகள் பெற வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

கதிர்காமு - கங்கைவேணியன் - தலைவர்
வேலணைதெற்கு கமக்காரர் அமைப்பு,
6 ஆம் வட்டாரம், வேலணை.
(சே 2322) (33.16)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



அதிபர் அருட்சகோதரி ம.ஞானதர்சினி

எமது பாடசாலையில் ஏழு வருடங்களாக அதிபராகப் பணியாற்றி
அளப்பரும் சாதனைகள் படைத்து கல்விப்புலத்தின்
விடிவெள்ளியாகத் திகழ்ந்த அருட்சகோதரி ம.ஞானதர்சினி அவர்கள்
அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின்
மாகாணப்பொருளாளராகப்
பதவி உயர்வு பெறுவதையிட்டு அவரை அகமகிழ்ந்து
பாராட்டுவதோடு மேலும் பல உயர்வுகளைப் பெற வாழ்த்தி
நிற்கின்றோம்.



திரு. கந்தசாமி சசிகரன்

கடந்த 09.05.2016 தொடக்கம்
அதிபர் சேவை தரம் – III
இற்குப் பதவி உயர்வு பெற்றுள்ள எமது
பாடசாலையின் ஆசிரியர்
திரு. கந்தசாமி சசிகரன் அவர்களைப் பாராட்டுவதோடு
அவர் மேலும் பல உயர்வுகளைப்
பெற வாழ்த்துகின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்: ஆசிரியர்கள்
சென்பெனடிக்ற் வித்தியாலயம்.
(J 2333)
(14,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோருகின்றார் அளுத்கமகே

கொழும்பு, ஜூன் 23

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே ஆகியோர் எனது நற் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியுள்ளனர். அவர்கள் 500 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் டிபெண்டர் வாகனம் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டது. வாகனத்தின் இலக்கத்தகடு போலி யானது என்று ரஞ்சன் ராமநாயக்க மற்றும் ஆனந்த அளுத்கமகே இருவரும் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தனர். அதனால் தனக்கு அவர்கள் நட்டஈடு வழங்க வேண்டும் என்று மகிந்தானந்த அளுத்கமகே கோரியுள்ளார். (ற-5)

# நெஞ்சங்கள் நிறைந்த நினைவஞ்சலி

யேசுமரியை சூசை துணை



அமரர் வயித்தியான் மரிசிலின்

மண்ணகத்தாயின் மடியில் : 15.01.1915

விண்ணகத்தாயின் மடியில் : 23.06.1990

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

யேசுமரியை சூசை துணை



திருமதி திரேசம்மா மரிசிலின்

மண்ணக அன்னையின் மடியில் : 10.06.1926

விண்ணக அன்னையின் மடியில் : 15.05.1993

"தெய்வம் தொழா அள் கொழுநன் தொழு (து) எழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை"

16/1, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

எங்களை வாழ வைத்த தெய்வங்களை
அன்புடன் நினைவு கூரும்

மருமகன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

# பஸ் கட்டணத்தில் திருத்தம்வேண்டும் தனியார் பஸ் சம்மேளனம் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 23

பஸ் கட்டணத்தில் திருத்தம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தனியார் பஸ் உரிமையாளர் சம்மேளனம் தயாராகி வருகின்றது.

இவ்வாறு சம்மேளனத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன் போது தீர்வு எட்டப்படவில்லை. அதனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத்தயாராகின்றோம் என்று சம்மேளனம் தெரிவித்தார்.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பாக அரசுக்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன குறிப்பிடுகின்றார்.

பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் வரையறைகளைத் தயாரிக்க நிபுணர் குழுவைப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நியமித்துள்ளார். (ற-ஜ-5)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 08 . 05 . 1953 — இறப்பு 05 . 07 . 2015

சண்முகநாதன் ஆனந்தராசா

(சண்முகநாதன் மில் கல்வியங்காடு) திதி: திருதியை

எமக்கெல்லாம் நல்வழி காட்டிய தீபமே!
எம் குடும்ப விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
ஓராண்டு உருண்டோடி விட்டதே?
நம்ப முடியவில்லை!
உங்கள் இனிய அன்பான கதைகள்
எம் காதுகளில் ஒலிக்கின்றன.
உங்கள் சிரித்த முகம்
அன்பான பார்வைகொண்ட தோற்றம்
எம் கண்களில் தெரிகின்றது.
எம்முடன் கூடவே இருக்கின்றீர்கள்
நீங்கள் மறையவில்லை
என்றென்றும் எங்களுக்குள் வாழ்கின்றீர்கள்
நல்லூர் கந்தன் துணையிருப்பார்.



பிறப்பு 12 . 02 . 2000 — இறப்பு 13 . 07 . 2015

திதி: திரயோதசி

தயாபரன் லதுமிலன்

மூவைந்தாண்டாய் இவ்வுலகில் நீ
இன்பங்கள் அள்ளித் தந்தாய்.
லது.லது என அழைத்திட நாம் இன்முகம் காட்டியெமை
இன்புலகில் ஏற்றிட்டாய். பேரின்பம் புரிந்திட்டாய்
பேரழகன் நீ எமக்கு ஓராண்டாய் இவ்வுலகை விட்டு
எங்கையா சென்றாய் நீ?
ஏங்கித் தவிக்கின்றோம் இங்குன் இனிய முகம் தேடி.
இராப் பகலாய் துடிக்கின்றோம்
உன் பிரிவால் நாமிங்கு.

காலனும் பொறுக்கவில்லை
கைதவமும் பலிக்கவில்லை
வேலனை வேண்டியும் வேணவா ஆயிற்று
வெந்துயர் கொண்டிங்கு வேகின்றோம் நாமிங்கு
விரைந்தோடி வந்திடையா நீ
விரைந்தோடி வந்திடையா

சண்முகநாதன் மில், நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு. குடும்பத்தினர்.

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15 . 04 . 1933



இறப்பு 03 . 07 . 2007

அப்புத்துரை நேசம்மா

திதி: அபரபட்ச திருதியை

ஒன்பதாம் ஆண்டு நிறைவு நாளான இன்று
அம்மா ஆறுதல் தரும் நிழலாய் நின்று
எங்கள் எல்லோரையும்
அன்புடனும் அரவணைப்புடனும்
வளர்த்து ஆளாக்கிவிட்ட
எங்கள் குலவிளக்கே எங்கு சென்றீர்கள்
உங்கள் அழியாத நினைவுகள்
எங்களை விட்டு நீங்காது அம்மா!

அம்பகர் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்.

(J2341)(10,17)

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி

வாலாம்பிகை தியாகராஜா

திதி: 23.06.2016

வையத்துள் அறிமுகம்
01.02.1938

தெய்வத்துள் சங்கமம்
25.06.2013

மூன்றாண்டுகள் மறைந்து விட்டதம்மா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
ஆறவில்லை நம் இதயம்
எல்லாமே கனவு போல் இருக்குதம்மா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் என்றென்றும்
மனதை விட்டு அகலாது..
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

[illegible]/12, புகையிரத வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(C 22076)
(12,18)

குடும்பத்தினர்.

# 16 ஆம் ஆண்டு நினைவு தினம்



செல்வன்

பாலசுப்பிரமணியம் கோபிநாத்

(விஞ்ஞான பிரிவு மாணவன் இந்துக் கல்லூரி)

இலங்கையில் மலர்வு
05.12.1980

இந்தியாவில் உதிர்வு
20.06.1980



திதி: சங்கடஹர சதுர்த்தி (23.06.2016)

சிறுபாவம் செய்தவர்
சிறுவயதில் இறைவனடி சேர்வர்
ஆனால் உம்மை இழந்த நாம்
பெரும்பாவம் செய்துவிட்டோம்
எண்ணிரண்டு ஆண்டுகள் காலமாக உன்
காலடியைக் கேட்டுவரும் எமக்கு
உன் காட்சியை விரைவில் தா ஐயா!

உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

ஐ.பாலசுப்பிரமணியம்
வேலணை கிழக்கு, வேலணை.

(J2311)(13,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வசதி தரக்கோரி புதுக்குடியிருப்பில் ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு, ஜூன் 23
வீட்டு வசதி வழங்க வேண்டும் என்று கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்குகிடைத்துள்ளஆயிரம் வீட்டுத் திட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு 240 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புள்ளி அடிப்படையில் முன்னிலையில் உள்ள பயனாளிகளின் பெயர்கள் கிராம சேவையாளர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. தமது பெயர்கள் உள்வாங்கப்படவில்லை என்று தெரிவித்து கைவேலி கிராம மக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையரனோர் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

“2012ஆம் ஆண்டு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் வழங்கப்பட்ட தற்காலிக வீடு முழுமையாகச் சேதமடைந் துள்ளது. அண்மையில் பெய்த அடை மழையால் எமது கிராம சேவையாளர் பிரிவின் கீழ் உள்ள 12 வீடுகள்பெரும்பாதிப்படைந்துள்ளன. இதை அதிகாரிகள் அனைவரும் பார்க்கின்றார்கள், பத்திரிகைகளிலும் எமது அவலம் வெளிவருகின்றது. ஆனால் உதவிகள்தான் கிடைக்கப் பெறுவதில்லை.

எம்மையும் இந்த வீட்டுத் திட்டத்தில் உள்வாங்க வேண்டும்” – என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர்.

“எமது பிரதேச செயலகத்துக்கு 4 ஆயிரத்து 250 வீடுகள் தேவை. 240 வீடுகளே ஒதுக்கப்பட்டுள்ளன.

புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கைவேலி கிராமத்துக்கும் 16 வீடுகள் கிடைத்துள்ளன. ஒரே தடவையில் அனைவருக்கும் வழங்க முடியாது. வீட்டுத் திட்டம் கிடைக்காதவர்களுடைய முறைப்பாடுகள் பதியப்படுகின்றன. முறைப்பாடுகள் பதிவது தொடர்பாக அவர்களுக்குத் தெரிவித்தபோது அவர்களும் முறைப்பாடுகளை இன்று பதிவு செய்தனர்.

வீட்டுத்திட்டத்துக்குப்பொறுப்பான அதிகாரிகள், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்வார்கள். சரியாக இருந்தால் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு அவர்களுக்கு வீடுகள் வழங்கப்படும்” – என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

(ற-21,ரி7)

# வவுனியா பஸ் நிலையத்தில் முதியவர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூன் 23
வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் இருந்து சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.

பூவரசங்குளம் – தட்டங்குளத்தைச் சேர்ந்த சின்னையா காளிமுத்து (வயது – 65) என்பவரே சடலமாகமீட்கப்பட்டுள்ளார். இவர் மத்திய பேருந்து நிலையச் சுற்றாடலிலேயே தங்கியிருந்துள்ளார். திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிசோர் சடலத்தைப் பார்வையிட்டார். உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டது.

(ற-5-21)

# மது ஒழிப்பை வலியுறுத்தி விழிப்புணர்வுச் செயற்பாடு



வவுனியா, ஜூன் 23
மது ஒழிப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை நேற்று வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் க.பரந்தாமன் தலைமையில் விழிப்புணர்வுச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. வீதி நாடகமும் நிகழ்த்தப்பட்டது. நிகழ்வில் வவுனியா வடக்கு உதவி பிரதேச செயலாளர் செல்வி நிவேதிகா பேரின்பநாயகம், வவுனியா வடக்கு பிரதேச செயலக கணக்காளர் பா. நாகேஸ்வரபாலா, வவுனியா வடக்கு பிரதேச சபை செயலாளர் க.சத்தியசீலன், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ற-21,402)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் வேண்டாம் பணி நீக்கம் வேண்டும்

## துர்நடத்தைக்கு எதிராக பொங்கியெழுந்த மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

துர்நடத்தைச் சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் மற்றும் அதற்கு உடந்தையாகச் செயற்பட்டவர்கள் கைது செய்யப்படவேண்டும். அவர்கள் இடமாற்றம் செய்யப்படக் கூடாது. பணி நீக்கம் செய்யப் படவேண்டும். வேறிடத்திற்குச் சென்று மாணவர்களின் வாழ்க்கையை அவர்கள் சீரழிக்கக் கூடாது.

இவ்வாறு வலியுறுத்தி யாழ். நகரப்பாடசாலை ஒன்றின் மாணவர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



யாழ்.நகருக்கு அண்மையாக அமைந்துள்ள பாடசாலை மாணவ – மாணவியர் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் மாணவியை பாலியல் ரீதியான துர் நடத்தைக்கு உட்படுத்தினார் என்று கூறப்படும் சம்பவத்துக்கு எதிராகவே அவர்கள் நியாயம் கேட்டனர். பாடசாலையின் சகல வகுப்புக்களையும் சேர்ந்த மாணவர்கள் அதில் பங்கெடுத்திருந்தனர். அவர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

**பாலியல் துர்நடத்தை**

"பாடசாலையில் கல்வி கற்கும் பதின்ம வயதுச் சிறுமியை ஆசிரியர் ஒருவர் பாலியல் ரீதியான துர் நடத்தைக்கு உட்படுத்தினார். இந்தச் சம்பவம் ஒரு மாதத் துக்கு முன்னர் இடம்பெற்றது. இந்த விடயத்தை வெளியில் தெரிவிக்கக்கூடாது என்று இன்னொரு ஆசிரியர் சம்பந்தப்பட்ட மாணவியின் வீட்டுக்குச் சென்று மிரட்டியுள்ளார். மிரட்டிய ஆசிரியர், தான் அரசியல் செல்வாக்கு உள்ளவர் என்றும் கூறியுள்ளார். இந்த விடயங்கள் பாடசாலை அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. ஆனால் அவர் நடவடிக்கை எடுக்கவில்லை'' – என்று கவனவீர்ப்புப் போராட் டத்தில் ஈடுபட்டிருந்த மாண வர்கள் கூறினார்கள்.

**கைது செய்க**

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர், மிரட்டிய ஆசிரியர் மற்றும் அதிபரைக் கைது செய்யவேண்டும். அவர்களைக் கைது செய்ததை உறுதிப்படுத்தினால் மாத்திரமே கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்" என்று மாணவர்கள் திட்ட வட்டமாகத் தெரிவித்தனர்.

**பொலிஸ் குவிப்பு**

மாணவர்களின் போராட்டம் பாடசாலைக்குள்ளேயே நடந்து கொண்டிருந்தது. எனினும் பொலிஸார் பாடசாலையைச் சுற்றிக் குவிக்கப்பட்டனர். கலகம் அடக்கும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். அத்துடன் தண்ணீர் பீச்சியடிக்கும் வாகனமும் கொண்டுவரப்பட் டது. பாடசாலைக்கு வெளியே பழைய மாணவர்களும், பெற்றோர்களும் ஒன்று திரண்டதால் பதற்றம் ஏற்பட்டது.

மாணவர்களுடன் பொலிஸார் பேச்சு நடத்தினர். மாணவர்கள் எந்த விட்டுக் கொடுப்புக்கும் தயாராக இருக்கவில்லை. மூவரையும்கைதுசெய்ய வேண்டும். அது தமக்கு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர்.

**களமிறங்கிய எஸ்.எஸ்.பி.**

யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லஸ் சம்பவ இடத்துக்கு வந்தார். பாடசாலை மாணவர்களுடன் சுமுகமாக உரையாடினார். மூவரையும் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கின்றேன். இன்று (நேற்று) நண்பகல் 12.30 மணிக்கு எனது அலுவலகத்துக்கு வாருங்கள். அதற்குள் அவர்களைக் கைது செய்து விடுவேன் என்று அவர் கூறினார். மாணவர்களோ, அவர்களை இடமாற்றம் செய்யக் கூடாது. பணி நீக்கம் செய்ய வேண்டும். இடமாற்றம் செய் தால் வேறொரு இடத்தில் மாணவர்களின் வாழ்க்கையைச் சீரழித்து விடுவார்கள் என்று தெரிவித்தனர்.

**நம்பிக்கை வையுங்கள்**

பாடசாலைச் சுற்றாடலில் பழைய மாணவர்கள் – பெற்றோர்கள் திரண்டிருந்தனர். இவர்களுடனும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பேச்சு நடத்தினார். நான் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன். என்னை நம்புங்கள். நான் காசு வாங்கிக் கொண்டு செயற்படமாட்டேன். நீங்கள் கலைந்து செல்லுங்கள்" என்று பணித்தார்.

**பிள்ளைகளை அழைத்துச் சென்ற பெற்றோர்**

இந்தக் களேபரம் காரணமாக, பாடசாலைக்கு வந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர். வளர்ந்த பாடசாலை மாணவர்கள், பாடசாலை வளாகத்துக்குள் நின்றிருந்த நிலையில், ஆரம்ப வகுப்பு மாணவர்களை பெற்றோர்கள் தம்முடன் வீடுகளுக்கு அழைத்துச் சென்றனர்.









**கைது**

மாணவர்களால் குற்றஞ் சுமத்தப்பட்ட – பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்படும் ஆசிரியர் நேற்று மதியம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்தத் தகவலை, எஸ்.எஸ்.பி. ஸ்ரெனிஸ்லஸ் உறுதிப்படுத்தினார்.

**அதிபர் வரவில்லை**

பாடசாலை மாணவர்கள் போராட்டம் நடத்திய நிலையில், பாடசாலை அதிபர் மற்றும் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஆசிரியர் ஆகியோர் பாடசாலைக்கு நேற்று வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ற–5–106–422)

## முகமாலையில் மிதிவெடி அகற்றலை பார்வையிட்ட அமெ. அதிகாரிகள்

கிளிநொச்சி, ஜூன் 23

கிளிநொச்சி, முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுப் பார்வையிட்டனர். பணியாளர்களுடனும் கலந்துரையாடினர்.

இலங்கைக்கான இராஜாங்க திணைக்கள அதிகாரிகளான ஜோன் மைக்கடம்ஸ், ஜெக்கப் இன்கிலீஸ் ஆகிய அதிகாரிகளே அங்கு சென்றனர்.

அங்கு மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி



அகற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

அவர்கள் டாஸ் நிறுவனத்தால் மீட்கப்பட்ட வெடி பொருள்களையும் பார்வையிட்டனர்.

வெடிபொருள்கள் தொடர்பாகவும், அவற்றை அகற்றுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாகவும் டாஸ் நிறுவனத்தின் பணியாளர்களால் விளக்கமளிக்கப்பட்டது. (ற–21,ரி3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விட்டார் அறை செவிப்பறை கிழிந்தது

## தென்மராட்சி மாணவனின் கேட்கும் திறன் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 23
ஆசிரியர் ஒருவர் அறைந்ததால் மாணவனின் கேட்கும் திறன் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

தென்மராட்சியில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்தது என்று கூறப்படுகின்றது.

மாணவனுக்கு மோசமான காயம் ஏற்பட்டுள்ளது. காதில் இருந்து தொடர்ச்சியாக குருதி வடிந்து கொண்டிருக்கின்றது என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பவம் பற்றித் தெரிவிக்கப்பட்டதாவது:

மாணவர்கள் சிலர் பாடசாலைவிட்டு வீடு திரும்பும் போது வழியில் இருந்த மாமரத்துக்குக் கல் எறிந்துள்ளனர். மரத்தின் உரிமையாளர் அதனைப் படம் பிடித்தார். படத்தைக் காட்டி பொலிஸாரிடம்செல்லப்போவதாகப் பயமுறுத்தினார். பயந்த மாணவர்கள் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூறி மன்னிப்பும் கோரியுள்ளனர்.

வீட்டு உரிமையாளர் தான் எடுத்த படங்களை மாணவர்கள் கற்கும் பாடசாலை ஆசிரியர்களிடம் காட்டியுள்ளார். அவர்களில் ஒரு ஆசிரியர், குறித்த மாணவர்களை அழைத்து இனி இவ்வாறு செய்யக் கூடாது என்று அறிவுரை கூறி வகுப்புக்கு அனுப்பினார் ஆனால் மற்றொரு ஆசிரியர் குறித்த மாணவர்களை அழைத்து மாணவன் ஒருவனின் காதுப் பகுதியில் அறைந்தார் மாணவனின் காதில் இருந்து குருதி வடிந்ததை அடுத்து அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பில் மாணவனின் பெற்றோர் அதிபரிடம் முறையிட்டபோது சான்றிதழை எடுத்துக்கொண்டு செல்லுமாறு அச்சுறுத்தினார். குறித்த மாணவன் எதிர்வரும் டிசெம்பர் மாதம் சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளான்.

மாணவனின் கேள்தன்மை குறைந்துள்ளது என்றும், காதில் குருதி வடிந்த வண்ணம் உள்ளது என்றும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

"காயம் பெரிதாக ஏற்பட்டுள்ளது. மாணவனின் காயம் ஆறுவதற்கு 6 மாதங்கள் ஆகலாம். தொடர் சிகிச்சை பெறவேண்டும். காயம் ஆறிய பின்னர்தான் செவிப்பறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறியமுடியும்" என்று வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்தனர். (ற-4, 9)

# கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு நியமனங்கள் வழங்க அனுமதியோம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் மீண்டும் வலியுறுத்து

> "பரீட்சையில் தெரிவானவர்களைக் கொண்டே நிரப்ப வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வியமைச்சுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் பரிந்துரை செய்துள்ளார். முதலமைச் சரின் இந்த நியாயமான அணுகுமுறையை இலங்கை ஆசிரியர் சங்கம் வரவேற்கின்றது."

யாழ்ப்பாணம், ஜூன் 23
அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பை மீறி கடமைநிறைவேற்று அதிபர்களுக்கு நியமனம் வழங்குவதை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. அந்தச் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போட்டிப் பரீட்சையில் தெரிவானவர்களுக்கே அதிபர் நியமனங்கள் வழங்கப்படவேண்டும்.

வடக்கு மாகாணத்தில் நிலவும் அதிபர் வெற்றிடங்களைப் போட்டிப் பரீட்சையில் தெரிவானவர்களைக் கொண்டே நிரப்ப வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வியமைச்சுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் பரிந்துரைத்துள்ளார். முதலமைச்சரின் இந்த நியாயமான அணுகுமுறையை இலங்கை ஆசிரியர் சங்கம் வரவேற்கின்றது.

கடந்த 15ஆம் திகதி முதலமைச்சருடனான சந்திப்பின்போது போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்தவருக்கே அதிபர் நியமனம் வழங்கப்படவேண்டும் எனும் சட்டரீதியான ஆவணங்களையும் நியாயப்பாடுகளையும் தெளிவுபடுத்தியிருந்தோம். அவற்றைப் பரிசீலித்த முதலமைச்சர் மேற்கொண்ட தெளிவான முடிவையே வடமாகாணக் கல்வியமைச்சு நடைமுறைப்படுத்தவேண்டும். வடமாகாண சபையும் இதனை வலியுறுத்த வேண்டும்.

முதலமைச்சரின் பரிந்துரைகளையும் மீறி நியமனம் வழங்கப்படும் பட்சத்தில் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளுடன், சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்- என்றுள்ளது. (ற-4)

# இலவசக் கருத்தரங்குகள்



வவுனியா, ஜூன் 23
வவுனியா பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் "அறிவுச் சங்கமம்" என்னும் செயற்றிட்டத்தின் ஊடாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

வவுனியா பிரதேச செயலாளர் கா. உதயராஜாவின் வழிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் செயற்றிட்டம் கடந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் செயற்றிட்டத்தில் ஈச்சங்குளம் பகுதியில் 118 மாணவர்களும், ஆசிகுளம் பகுதியில் 196 மாணவர்களும் ஓமந்தைப் பகுதியில் 68 மாணவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

ஒவ்வொரு பகுதிகளிலுமுள்ள தரம் ஐந்து மாணவர்களின் விவரங்கள் தெரியப்பட்டு இந்தச் செயற்றிட்டம் இடம் பெற்று வருகின்றது.

புலமைச்சுடர் பிரதான வளவாளர் எஸ். கபிலன், மற்றும் கிராம உத்தியோகத்தர் திருமதி ப. உமாபதி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு செயற்றிட்டதை ஆரம்பித்து வைத்தனர். (ற-ஐ-21)

### அனுமதியின்றி ஆடு ஏற்றியவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஜூன் 23
அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தில் ஆடு ஏற்றிச் சென்ற வாகனச்சாரதிக்குச்சாவகச்சேரி நீதிமன்று 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வாகனச் சாரதி குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (ற-9)

### கஞ்சா வைத்திருந்த இருவருக்கு சிறை

யாழ்ப்பாணம், ஜூன் 23
கஞ்சா வைத்திருந்த 2 பேருக்கு யாழ்.நீதிமன்று 2மாதங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

குறித்த இருவரும் கடந்த வாரம் யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸாரால் அவர்களுக்கெதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் சி.சதீஸ்தரன் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். (ற-103)

# வீதி ஒழுங்கு விதிகள் குறித்த பயிற்சிச் செயலமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 23
வீதி ஒழுங்கு விதிகள் மற்றும் விபத்துக்களைத் தடுத்தல் தொடர்பானபயிற்சிச்செயலமர்வு இலங்கைப் போக்குவரத்துச் சபையினர் மற்றும் தனியார் போக்குவரத்துத்துறையினருக்கு நடத்தப்படவுள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சு மற்றும் வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றின் அனுசரணையுடனும் வழிகாட்டலுடனும் இந்தச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது. வடக்கின் 5 மாவட்டங்களிலும் செயலமர்வு நடைபெறவுள்ளது.

இன்று யாழ்.பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது. அதில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர், போக்குவரத்து அமைச்சின் செயலாளர், மோட்டார்போக்குவரத்து ஆணையாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-5)

# உவர் மின் நிலையம் அமைக்கப்பட்டால் தடையின்றி மின்சாரம் வழங்க முடியும்

## வவுனியா மின்சார சபை பொறியியலாளர் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 23
உயிலங்குளம் உவர் மின் நிலையத்துக்கான ஆரம்புக் கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் பொதுமக்கள் சிலருடைய எதிர்ப்பால் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், மன்னார் மாவட்டத்துக்குத் தடையின்றிய மின்சாரத்தை வழங்க முடியும்.

இவ்வாறு வவுனியா மாவட்ட மின்சார சபையின் பொறியியலாளர் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக மின் தடை ஏற்படுகின்றது. பகல் - இரவு இரண்டு நேரங்களிலும் மின் தடைப்படுகின்றது. அதனால் மக்களும் - வர்த்தகர்களும்அசௌகரியங்களைஎதிர்கொள்கின்றனர்.

வருடந்தோறும் இந்த மாதங்களில் மன்னார் மாவட்டத்தில் மின்சாரம் தடைப்படுவது வழமை. மின்சாரத்தை நாங்கள் தடை செய்வதில்லை. ஜூன் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை காலநிலை மாற்றத்தின் காரணமாக மின்சாரம் தடைப்படுகின்றது. மின்கம்பிகளில் உப்புக் காற்றுப் படிகின்றது. அதனாலேயே மின்தடை ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்க மின் கம்பிகளைக் கழுவுகின்றோம். அதனாலும் நீண்ட காலத்துக்கு அது பயன்தராது. மீண்டும் உப்புக் காற்றுப் படிந்தவுடன் மின் தடை ஏற்படும்.

மின் விநியோகத்தை மன்னாருக்குத் தடையின்றி விநியோகிக்க எம்மால் முடியும். இதற்கு உயிலங்குளத்தில் உவர்மின் நிலையம் அமைக்கப்பட வேண்டும். இலங்கை மின்சார சபை அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. மின் கோபுரங்கள் அமைக்க, அந்தப் பகுதியில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் மறுக்கின்றனர்.

அவர்கள் சம்மதித்தால், மன்னார் மாவட்டத்துக்கு மின் விநியோகத்தை நாம் தடையின்றி மேற்கொள்ள முடியும் - என்று மின்சார சபையின் பொறியியலாளர் தெரிவித்தார். (ற-ஜ-5-21)

### அலங்காரத் திருவிழா

சாவகச்சேரி, ஜூன் 23
சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பத்திரகாளி சமேத ஞான வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி பகல் விசேட சங்காபிசேகம் நடைபெற்று இரவு சுவாமி நகர வலம் வருவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநரின் தலையீட்டால் அபிவிருத்திக்குப் பாதிப்பு

## கிழக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23

கிழக்கு மாகாண அபிவிருத்திகள் ஆளுநரின் தலையீட்டால் பாதிப்படைகின்றன.

இவ்வாறு குற்றஞ் சுமத்தியுள்ளார் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட்.

கிழக்கு மாகாண சபையின் 60 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் உரையாற்றும்போது இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் கூறியதாவது:

ஆளுநரின் தலையீடு காரணமாக, கிழக்கு மாகாண சபையால் எந்த சேவையையும் சரியாகச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆளுநர் தேவையற்ற விதத்தில் தலையீடுகளை மேற்கொள்கிறார்.

ஏனைய மாகாணங்களின் முதலமைச்சர்கள், அமைச்சர்கள், உறுப்பினர்கள் அவர்களின் சேவைகளை செவ்வனே செய்து வருகின்றனர். கிழக்கில் மாத்திரம் ஆளுநரின் தலையீட்டால் சிறந்த சேவையை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நல்லாட்சி ஏற்பட்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றனர். கிழக்கு ஆளுநரின் இவ்வாறான செயற்பாடுகள், நல்லாட்சியை கிழக்கில் வீழ்த்திவிடும் நிலையை உருவாகும்.

> கிழக்கு ஆளுநரின் இவ்வாறான செயற்பாடுகள், நல்லாட்சியை கிழக்கில் வீழ்த்திவிடும் நிலையை உருவாகும்.

கிழக்கின் அபிவிருத்திக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க ஆளுநர் முன்வர வேண்டும். ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் என்ற வகையில் நான் இந்த விடயத்தைத் தெரிவித்திருக்கிறேன் - என்றார். (ரி-5)

## வெள்ள உதவி வழங்குவதற்காக இந்தோனேசியாவிலிருந்து நிதி



கொழும்பு, ஜூன் 23

இந்தோனேசியாவின் சங்க தேரவாத அமைப்பும், பேராசிரியர் சங்கைக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரரும் இணைந்து, அன்பளிப்புச் செய்த நிவாரண நிதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் சங்க தேரவாத அமைப்பால் 25 லட்சத்து 6 ஆயிரம் ரூபாவும், சங்கைக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரரால் 5 லட்ச ரூபாவும் அன்பளிப்புச் செய் யப்பட்டது.

நிதியை பேராசிரியர் சங்கைக்குரிய பெல்லன்வில விமலரத்ன தேரர் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தார். (ரி-ஐ-5)

## மகிந்த தலைமையில் புதிய கட்சி உள்ளூராட்சித் தேர்தல் களத்தில்

### கூட்டு எதிர்க் கட்சியின் உள்ளூராட்சி மன்ற தலைவர்களின் ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 23

மகிந்த ராஜபக்சவை தலைமைத்துவமாகக் கொண்ட புதிய அரசியல் கட்சிக்கான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன.

உள்ளூராட்சி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் போட்டியிடாமல் புதிய சின்னம் மற்றும் புதிய கட்சியில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லை - நெலும் வீதியில் அமைந்துள்ள நல்லாட்சி அரசின் எதிர்ப்புக் குழுவின் அலுவலகத்தில் ஊடகச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் இவ்வாறு கூறப்பட்டது.

சுதந்திரக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் ஐக்கிய தேசியக் கட்சியை போசிப்பதாக அமைந்துள்ளது. இதனை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. மக்கள் இதற்கான ஆணையை வழங்கவும் இல்லை. நல்லாட்சி அரசு என்ற போர்வையில் திட்டமிடப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் புதிய சின்னத்தில் தனித்து போட் டியிட திட்டமிட்டுள்ளோம். மகிந்த தலைமை தாங்கவுள்ளதுடன் பசில் ராஜபக்ச இரண்டாம் நிலையில் இருந்து, ஏனைய ஏற்பாடுகளை முன்னெடுப்பார். ராஜபக்சாக்கள் இல்லாது சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலம் இல்லை. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தற்போதைய அரசு அறிவித்தவுடனேயே புதிய கட்சி விவரங்களை வெளியிடுவோம்.

மகிந்த ராஜபக்ச மீதான அச்சம் காரணமாகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது அரசு பிற்போடுகின்றது. முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் என்று அரசுக்கு சவால் விடுக்கின்றோம். அமைச்சர் முதுகெலும்பற்றவராக உள்ளார். தேர்தலை நடத்த முடியாவிட்டால் அதிகாரத்தில் இருந்து என்ன பலன் ? விலகிச் செல்ல வேண்டும்.

அதேபோன்றுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதியும் உள்ளனர். நல்லாட்சி என்று கூறி, தேர்தலை நடத்தாது போலிக் காரணங்களைக் கூறுவதற்குப் பதிலாக ஆட்சியை மகிந்த ராஜபக்சவிடம் ஒப்படைத்து விட்டு வெளியேற வேண்டும்.

நாட்டில் சிவில் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன - என்று அங்கு கருத்துத் தெரிவித்த அத்தனகல்ல பிரதேச சபையின் முன்னாள் தலைவர் கூறினார். (ரி-5)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




## சு.பொ.நடராசா

(அதிபர் - அண்ணா தொழிலகம்)

திதி: சங்கடஹர சதுர்த்தி(23.06.2016)

ஓராண்டு கடந்தாலும் உங்கள்
ஆடம்பரமற்ற அன்பான பேச்சும் நடையும்
தொழிலாளரை இன்முகத்தோடு வழி நடத்தும்
பாங்கும் என்றும் எங்கள் மனங்களில்
அகலாது நிற்கிறது எங்கள் அதிபரே!
சகோதரங்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உங்களைத் தேடுகிறார்கள் ஐயா
உங்களின் நெறிமுறை தவறா வாழ்வும்
இறைபண்பும் என்றும் ஆண்டவனின்
பாதாரவிந்தத்தில் சங்கமித்திருப்பீர்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணா தொழிலக
ஊழியர்கள் இணுவில்.

(C-22076)
(32/16)


## வற் வரி அதிகரிப்பை எதிர்த்து கவனவீர்ப்பு

பெறுமதி சேர் வரி (வற்வரி) அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கம்பகா நகரின் வியாபாரிகள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இலங்கை அரசால் அண்மையில் வற் வரி அதிகரிப்புச் செய்யப்பட்டது. அதற்கு எதிராக நாட்டின் பல பகுதிகளிலும் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த வாரம் காலி, மகரகம நகரங்களில் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

அவற்றின் தொடர்ச்சியாக கம்பகாவில் நடத்தப்பட்டுள்ளது. நகரின் சகல வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன.

வற் வரியை உடனடியாக குறைக்க வேண்டும் என்ற கோரிக்கையே முன்வைக்கப்பட்டது. (ரி-5)

## உணவு வழங்காததால் தாயைக் கொன்ற மகன்

கொழும்பு, ஜூன் 23

பகல் உணவு வழங்கவில்லை என்பதால், கோபமடைந்த மகன் பெற்ற தாயை கொலை செய்தார். இந்தச் சம்பவம் மாவனல்லவில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

"பகல் உணவு வழங்காததால் மகன் தாயுடன் வாக்குவாதம் செய்தார். இந்த வாக்குவாதம் இறுதியில் கத்திக் குத்தாக மாறி, தாயின் உயிரைக் காவு கொண்டது." என்றனர் பொலிஸார்.

மாவனல்ல அம்புலுகல கந்தே தெனிய தோட்டத்தின் 7 ஆம் இலக்க லயன் அறையைச் சேர்ந்த 52 வயதான கந்தசாமி தேவானி என்ற பெண்ணே உயிரிழந்தார்.

கத்திக் குத்தை மேற்கொண்ட சந்தேகத்தில் 36 வயதான மகனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ரி-5)

## சுங்க கட்டளை சட்டத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 23

புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள சுங்க கட்டளைச் சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம் என்று இவ்வாறு சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த சட்டத்தை திருத்தஞ் செய்ய வேண்டிய எந்தவொரு அவசியமும் இல்லை. இவ்வாறு தொழிற்சங்க கூட்டமைப்பின் உப தலைவர் லால் வீரக்கோன் தெரிவித்தார்.

சிலரின் கோரிக்கைக்கு அமைய சுங்க கட்டளைச் சட்டத்தில் மாற்றத்தை மேற்கொள்ள தயாராகி வருகின்றனர் என்று தெரிவித்தார். (ரி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகதிகளின் பயண ஆவணங்களை கோருகின்றது இந்தோனேசிய அரசு

கொழும்பு, ஜூன் 23
44 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கும் பயண ஆவணங்களைப் பெற்றுக் கொடுங்கள் என்று இலங்கை மற்றும் இந்திய தூதரகங்களிடம் இந்தோனேசிய அரசு கோரியுள்ளது.
ஆஸ்திரேலியாவுக்குத் தமிழ் அகதிகள் 44 பேர் படகில் சென்றனர். அந்தப் படகு கடலில் பழுதடைந்தது. அவர்கள் இந்தோனேசியக் கரையில் படகைக் கரை சேர்த்தனர். படகிலிருந்து இலங்கைத் தமிழ் அகதிகளை கீழ் இறங்க இந்தோனேசிய அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. பன்னாட்டு அழுத்தம் அதிகரித்ததால் இந்தோனேசிய அதிகாரிகள் அகதிகளை கரை இறங்க அனுமதித்தனர்.
கடற்கரையில் 50 அடி நீளமுள்ள இராணுவக் கூடாரத்தில் அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அகதிகளை நாட்டை விட்டு வெளியேற்றுவதில் இந்தோனேசியா உறுதியாக உள்ளது. படகைப் பழுது பார்த்து அகதிகளை மீண்டும் பன்னாட்டுக் கடற் பரப்புக்கு அனுப்பும் திட்டம் வெற்றி பெறவில்லை. பெக்கோ இயந்திரத்தின் துணையுடன் படகை கடலுக்குள் தள்ளும் முயற்சி தோல்வியில் முடிந்தது.
படகு திருத்த முடியாத நிலையில் உள்ளது. அகதிகளை மீண்டும் பன்னாட்டு கடற்பரப்புக்கு அனுப்புவதற்கு சிறியளவிலான வாய்ப்பு மட்டுமே இருக்கின்றது.– என்று இந்தோனேசிய குடி வரவுப் பணியக பேச்சாளர் ஹெரு சான்ரோசோ தெரிவித்துள்ளார்.
அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான பன்னாட்டு அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள், அகதிகளைச் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அகதிகளுக்கு உதவுமாறு இந்தோனேசிய அரசு, பன்னாட்டு அமைப்புகளிடம் கோரியுள்ளது.
அகதிகளை தமது நாட்டுக் குடிமக்களா என்று உறுதிப்படுத்துமாறும் அதன் பின்னர் பயண ஆவணங்களை வழங்குமாறும் இந்தோனேசிய அரசு இலங்கை மற்றும் இந்தியத் தூதுரகங்களிடம் கோரியுள்ளது.
பயண ஆவணங்களைப் பெற்றால், அவர்கள் தமது நாடுகளுக்குத் திரும்ப முடியும். அகதிகள் என்றால் இங்கு தங்கியிருக்கலாம்.– என இந்தோனேசிய குடிவரவுப் பணியக பேச்சாளர் ஹெரு சான்ரோசோ தெரிவித்துள்ளார். இதற்குச் சாதகமான முறையில் இலங்கைத் தூதுரகம் பதிலளித்துள்ளது என்று தெரிகின்றது. (ற-5)

# உள்ளக விசாரணையே நடத்தப்பட வேண்டும்

## வலியுறுத்துகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 23
போர்க்குற்றங்களுக்கு விசாரணை அவசியம். அவை சர்வதேச விசாரணையாக அமையக் கூடாது. உள்ளக விசாரணையாகவே அமைய வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச விசாரணையைக் கோருவது மோசமானது.
இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

> " சர்வதேச விசாரணை மட்டுமே அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அதனைத்தான் வலியுறுத்துகின்றார். "

போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் தேவையா இல்லையா என்பது குறித்து அரசு தீர்மானம் எடுக்க வேண்டும். அரசு என்ன தீர்மானம் எடுக்கின்றது என்பது எமக்குத் தெரியாது. ஆனால் விசாரணைகள் நடக்க வேண்டும். உண்மைகளைக் கண்டறிய விசாரணைகள் நடத்தினால் மாத்திரமே சாத்தியமாகும் என்று அந்தக் கட்சியின் பொது செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது–
உள்ளக விசாரணையாக மட்டுமே அமைய வேண்டும். எமது நிலைப்பாடு ஆரம்பத்திலிருந்து இவ்வாறுதான் உள்ளது. நாம் இந்த விடயத்தில் நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. சுயாதீன செயற்பாடுகளை பலப்படுத்த வேண்டும்.
இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் சர்வதேச அழுத்தங்களில் இருந்து நாட்டை மீட்டனர் என்று கூறினார்கள். இலங்கையின் சுயாதீனத்தைப் பாதுகாத்து அதற்கு அமையவே செயற்பட வேண்டும்.
சர்வதேச விசாரணை மட்டுமே அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கின்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அதனைத்தான் வலியுறுத்துகின்றார். இவர்கள் சர்வதேச விசாரணையைக் கோருவதன் நோக்கம் நன்றாகத் தெரியும்.
புலம்பெயர் அமைப்புக்களின் தேவையையும் சர்வதேச தரப்பின் தேவைகளையும் பூர்த்தி செய்யவே இவர்கள் முயற்சிக்கின்றார்கள். இவர்களின் இந்த செயற்பாடுகள் நாட்டுக்குப் பெரிய விளைவுகளை ஏற்படுத்தும். அதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.
சர்வதேச விசாரணையின் ஊடாக தமிழ் மக்களுக்கு நன்மை கிடைக்கப் போவதில்லை. தமிழர் தரப்பும் சிந்தித்து செயற்பட வேண்டும்– என்றார். (ற-5)

## இந்தியாவின் ராஜனைப் போன்று வெளியேற வேண்டும் மகேந்திரன்

### வலியுறுத்துகின்றார் பந்துல

கொழும்பு, ஜூன் 23
இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ராஜன் விமர்சனங்கள் காரணமாக பதவி விலகினார். இந்த முன்மாதிரியை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பின்பற்ற வேண்டும்.
இவ்வாறு கூட்டு எதிர்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
அதிக கடன் வட்டிகள், பொருளாதார ஸ்திரத் தன்மை மற்றும் பண வீக்கம் போன்ற குற்றச்சாட்டுக்களால் இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் பதவி விலகியுள்ளார். பகல் கொள்ளை இடம்பெற்றுள்ள போதும் மகேந்திரன் பதவி விலக மறுத்து வருகிறார்.
அவரின் முகாமைத்துவமின்மை காரணமாக சர்வதேச நாணய நிதியம் குற்றச்சாட்டுக்களை முன் வைத்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் எதிர்மறையில் உள்ளது.
இந்தியாவின் மத்திய வங்கி ஆளுநர் விலகியதைப் போன்று இலங்கை மத்திய வங்கிஆளுநரும்வெளியேற வேண்டும்.– என்று அவர் கூறினார். (ற-5)

## விபத்தில் இருவர் காயம்

அம்பாறை, ஜூன் 23
அம்பாறை தமன–கலாஹேன மலையடிப் பாலத்தின் கீழ் கார் ஒன்று ஏரியில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. அதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.
நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் விபத்து இடம் பெற்றுள்ளது. இந்த விபத்தில் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களே உயிரிழந்துள்ளனர்.(ற)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





தோற்றம்
19.10.1937

மறைவு
05.07.2015

அமரர் திரு.கு.பொ.நடராசா
(அதிபர் - அண்ணா தொழிலகம்)

திதி: சங்கடஹர சதுர்த்தி
சுந்தர வதனம் தன்னில்
சுடர்விடும் அன்பு கொஞ்சும்
வந்தனை சொல்லி எல்லோர் வாழ்த்தினைப் பெற்றீர் - என்றும்
பந்தங்கள் சூழ வாழ்ந்தே பாசத்தைச் சொரிந்தீர் - எம்மை
நொந்திட வைத்து ஏனோ கந்தனின் பாதம் சென்றீர்

' அண்ணா இல்லம் '

(C 22032)
(14,17,18)

குடும்பத்தினர்.
அண்ணா தொழிலகம்,
இணுவில்.

# மாணவர் பலத்தை அடக்கவே அரசு பகிடிவதையை கையிலெடுக்கிறது

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23
இலங்கை அரசால் மிக நீண்ட காலமாக மாணவர் ஒடுக்குமுறை முன்னெடுக்கப்படுகின்றது. இதன் புதிய ஓர் ஆயுதமாக பகிடிவதையைப் பயன்படுத்துகின்றனர். பகிடிவதையைத் தடுக்கின்ற சாக்கில் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைய முற்படுகின்றனர்.
இவ்வாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் லஹிரு வீரசேகர தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்துள்ளதாவது–
இணையம் மூலம் பகிடிவதை முறைபாடுகளைத் தெரிவிக்கலாம். இவ்வாறு உயர் கல்வி அமைச்சு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. இந்த ஏற்பாடானது மாணவர்களை ஒடுக்கும் ஒரு முன்னெச்சரிக்கை நடவடிக்கை.
பகிடிவதையானது முற்றாக நாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டும். அதற்கு இணையம் மூலமாக மாத்திரமின்றி விசேட தொலைபேசி இலக்கத்தையும் அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு சமூகத் தலைவர்கள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.
இலங்கை அரசால் மிக நீண்ட காலமாக மாணவர் ஒடுக்கு முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன் புதிய ஓர் ஆயுதமாக பகிடிவதையைப் பயன்படுத்துகின்றனர். பகிடிவதையை தடுக்கின்ற சாக்கில் பல்கலைக் கழகங்களுக்குள் நுழைய முற்படுகின்றனர்.
பகிடிவதையைத் தடுப்பது அரசின் நோக்கமல்ல. மாணவர்கள் மீது கொண்ட அனுதாபத்தால் இவை மேற்கொள்ளப்பட வில்லை. அரசின் உண்மையான நோக்கம், அரசை விட மாணவர் இயக்கம் பெரிதாக உள்ளது. பலமாக உள்ள மாணவர் இயக்கத்தை அடக்க வேண்டும். இந்த எண்ணத்தில்தான் பல்கலைக் கழகத்துக்குள் நுழைய முயல்கின்றனர் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மருத்துவத்தின் பெறுமதியை கெடுக்க செயற்படுவது தகுமா...?

மருந்து வகைகளின் விலைகள், சிறிய சிறிய இடைவெளிகளில் எகிறிச் செல்கின்றன. அதனால் நோயாளிகளில் பலர், மருத்துவர்கள் குறித்துரைக்கும் மருந்துகளை வாங்குவதற்கு இயலாத நிலையில் அல்லாடுகிறார்கள். அதன் விளைவு அவர்கள் நோயாளிகளாகவே உயிர் துறக்கும் பொல்லாத தன்மை உயர்ந்து வருகிறது.

இந்த நிலையை நீக்குவதன் தேவையை, சுகாதார அமைச்சர் மருத்துவர் ராஜித சேனாரத்ன, விஸ்தாரமாக எடுத்து உரைத்துள்ளார். அத்தோடு தரிக்காமல், மக்களை நோகடிக்காத வகையில், மருந்துகளின் விலைகளைக் குறைப்பதற்கான செயற்பாட்டை உடனடியாக மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

ஆகக் கூடியது மூன்று மாத இடைவெளிக்குள், வருமானம் குன்றிய நோயாளர்கள் பாதிப்புறாத வகையில் மருந்துகளின் விலைகள் குறைக்கப்பட்டாக வேண்டும் என்று வழிகாட்டல் குறிப்பின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் இயங்கும், பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில், அண்மையில் காலமான அரசியல் பிரமுகர் ஒருவரின், இரண்டு நாள் மருத்துவச் செலவுக்கு ஒன்பது லட்சம் ரூபா அறவிடப்பட்ட ''கொள்ளை அடிப்பை'' அமைச்சர் பிரத்தியேகமாக வெளிப்படுத்தி உள்ளார்.

இந்த நிலையில், தனியார் மருத்துவ மனைகளை பணவசதி குறைந்த நோயாளர்கள் எட்டிப் பார்க்கவேனும் இயலுமா...?

மருந்து சம்பந்தப்பட்ட தேசியக் கொள்கை குறித்து நோயாளர்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற நியதி கிடையாது. அவர்கள் தரம் கூடிய மருந்து வகைகளை உட்கொள்வதன் மூலம், விரைவாகக் குணம் அடையலாம் என்ற பெரும் நம்பிக்கையுடனேயே, தனியார் மருத்துவ மனைகளை நாடி, ஓடிப்போய்ச் சேருகிறார்கள்.

அவர்களிடம், மருத்துவத்தின் பெயரால் கொள்ளை அடிக்கலாமா? அது தகுமா என்பதை அரசும் அதன் அமைச்சரும் இதுவரை நினைத்தும் பார்க்காதது ஏன்? அது பென்னம்பெரு வினாவாக உயர்ந்து, எழுந்து நிற்கிறது!

தேசிய மருந்துக் கொள்கை, மருந்து வகைகள் மற்றும் வியாபார மற்றும் மருத்துவக் கருவிகள் குறித்து நோயாளர்கள், மருத்துவமனையில் சேர்வதற்கு முன்னர் அலசி ஆராய்ந்து செல்ல முடியுமா..? இல்லையே!

அதனை அவர்களின் பலவீனமாக்கி, மருத்துவச் செலவு என்ற பெயரில் கொள்ளை அடிக்கலாகாது என்று அமைச்சர் வற்புறுத்தி உள்ளமை நூறு வீதம் நோயாளர் நலன் நாடிய நற்செயற்பாடே.

மருத்துவக் கட்டணம் என்ற வகையில் பணத்தைத், நோயாளர்களிடம் கொள்ளை அடிப்பதற்காக, அபகரிப்பதற்காக, உறிஞ்சுவதற்காகப் பல தனியார்துறை மருத்துவமனைகள் செயற்படுவது, சமபந்தப்படுவோரை நரகத்துக்கே இட்டுச் செல்லும். அதன் வினைப்பயன், சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து பாவவினைகளையே அள்ளித் தரும்.

நன்றும் தீதும் பிறர்தர வருவதில்லையே. அதனை நம்பாவிடில் நரக வாழ்வே என்று எமது முந்தையர்கள் கூறிப்போனதை, தொட்டுக் காட்டுவதை விடவும், வேறென்ன சொல்ல...??

## ஜனாதிபதிக் கனவைக் கைவிடாதவரை

# மகிந்தவால் தலை தூக்க முடியாது

சிங்கள மூலம்.மவ்பிம
தமிழில்- வீ.எஸ்.ரீ

1977 பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி ஆட்சி அதிகார வாய்ப்பை ஐ.தே. கட்சியிடம் பறிகொடுத்தது. கட்சித் தலைவி சிறிமாவோ வெறுமனே நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பதவியுடன் மட்டுமே நாடாளுமன்றத்தில் செயற்பட நேர்ந்தது. இருந்த போதிலும் ஜே.ஆரின் ஐ.தே. கட்சி அரசுக்குச் சவால் விடுக்கும் விதத்தில் துணிச்சலுடன் செயற்பட அவரால் முடிந்தது.

### எதற்கும் மசியாத சிறிமாவோ

ஜே.ஆரின் அரசில் அமைச்சர்களாகச் செயற்பட்ட ரொனி டிமெல், பிரேமதாச ஆகியோர் நாடாளுமன்றத்தில் சிறிமாவோவை வார்த்தைகளால் சீண்டப்போய், சிறிமாவோவின், சொல்லம்புகளுக்குத் தாக்குப் பிடிக்க இயலாது தடுமாறியதுண்டு. அந்தவேளையிலேயே, ஜே.ஆரால் நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, சிறிமாவோவுக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரணை செய்தது. அந்த வேளையில் தமது பிரஜா உரிமையைப் பறிக்க ஜே.ஆர் மேற்கொண்ட முயற்சியைத் தடுத்து நிறுத்த சிறிமாவோவுக்கு அரசியல் மற்றும் உறவு முறை வாய்ப்பு இருந்த போதிலும், சிறிமாவோ அதனை விரும்பவில்லை. பிரஜா உரிமையைப் பறிக்கும் முயற்சியை விலக்கிக் கொள்ளுமாறு எந்தவொரு தரப்பின் மூலமும் ஜே.ஆருக்கு அவர் அழுத்தம் கொடுக்க விரும்பியதில்லை.

அதே போன்று, இன்று மகிந்தவும் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து நாடாளுமன்றத்தில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தாததேன்? அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களிக்காமல் ஜப்பானுக்கான பயணத்தை அந்த வேளையில் மேற்கொண்டதேன்? போன்ற கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்புத் தினத்தன்று நாடாளுமன்றத்துக்கு வந்து நல்லாட்சி அரசைப் பாதுகாப்பதற்கு ஆர்வம் காட்டிச் செயற்பட்டார். அதே போன்று மகிந்தவும் நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஆதரவு தேட முயன்றிருக்கின்றமல்லவா? அரசில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள், ரணிலுடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ள ஐ.தே.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் ஆகியோரை தனிப் பட்ட முறையில் தொடர்பு கொண்டு முயற்சித்து இருக்கலா மல்லவா? எதையும் மகிந்த செய்யவில்லை.

### உறுதியான நிலைப்பாடற்ற மகிந்த

அரச தரப்பு பலமாயுள்ளதொரு நிலையில், அரசுக்கு எதிராகவோ, அமைச்சரொருவருக்கு எதிராகவோ நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது மடைத்தனமானதொன்று அல்லவா? உண்மையில் பொது எதிரணித்தரப்பு, குறித்த பிரேரணையைக் கொண்டு வந்ததன் நோக்கமே அரசில் செயற்படும் சுதந்திரக் கட்சி அமைச்சர்களைப் பிளவுபடுத்துவதற்காகும்.



அந்த வகையில், ஒன்றில் மகிந்த இவை குறித்து ஏற்கனவே தெரிந்து வைத்திருந்துள்ளார் எனக் கொள்ளமுடியும். இல்லையேல் குறித்த இந்தப் பிரேரணை இன்றைய அரசியல் நிலையில் ஓர் எதிர்பாராத மாற்றத்தை உருவாக்குமென சோதிடர் எவராவது கொடுத்த கயிறை மகிந்த விழுங்கியிருக்கலாம் எனக் கொள்ள இயலும். அப்படியும் இல்லையாயின் இந்த விடயத்தில் மகிந்தவுக்கு, ஜனாதிபதி அல்லது பிரதமருடன் இது குறித்து இணக்கப்பா டேதும் ஏற்பட்டிருந்திருக்கக் கூடும்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரான மகிந்த அந்தப் பதவிக்குரிய நடைமுறையையே கைக்கொள்வது அவசியமாகும். முன்னாள் ஜனாதிபதி என்ற 'லேபிள்' அவருக்கு எந்த விடயத்திலும் பயன் தரப்போவதில்லை. இல்லையேல் முன்னாள் ஜனாதிபதி என்ற கௌரவத்தைக் காத்துக் கொண்டு அவர் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்வதே பொருத்தமானதாகும். ஆனால் ஜனாதிபதிப் பதவியை இழந்த போதிலும், இதுவரை காலமும் தாம் அனுபவித்த அந்த பதவிக்குரிய வாய்ப்பு, வசதிகளைத் தொடர்ந்தும் அனுபவிக்கவே மகிந்த பெரிதும் விரும்புகின்றார். அந்த வகையில் மகிந்த தாம் தற்போதும் இந்த நாட்டின் ஜனாதிபதியே என்ற எண்ணத்துடன் தான் செயற்பட விழைகிறார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை எதிர்த்து அரசுக்கு ஆதரவளிப்பதைத் தவிர்த்துக் கொண்டமை நல்லாட்சி அரசுக்கு அது விடுத்துள்ள அபாய சமிக்ஞையாகக் கொள்ளத்தக்கது. ஜே.வி.பி குறித்த தீர்மானத்தை ஆதரித்ததும் அரசுக்கு அத்தனை தூரம் நல்லதல்ல.

அவ்வாறானால் அரசைப் பதவியில் இருந்து அகற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை எவ்வாறு மகிந்த தரப்பினரால் பெற்றுக் கொள்ள இயலும் என்ற கேள்வி எழுகிறது.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குப் புலி இலச்சினை பொறிப்பவர்கள் மகிந்த தரப்பினர்களே. அதேவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவின்றி அரசை வீழ்த்தவும் இயலாது. ஜனாதிபதித் தேர்தலானால்கூட கூட்டமைப்பின் ஆதரவு வெற்றிக்கு இன்றியமையாதது. அதேவேளை ஜே.வி.பி யினருடன் மகிந்த தரப்பினர் சுமுகமான உறவில் இல்லை.

இவையெல்லாவற்றையும் மகிந்த சீர்தூக்கி அலசிப் பார்த்துச் செயற்பட விளைவதாகத் தோன்றவில்லை. அரசியல் என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா.பிரம்மா

# இராணுவத்தை நிலைநிறுத்த நொண்டிச் சாட்டுக்கள்



நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று கூற முடியாது. மகிந்த ஆதரவு அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டு. பொறுப்பான அந்தப் பதவிக்குப் பொறுத்தமானவர்களைத் தெரிந்தெடுக்கத் தவறும் பட்சத்தில், பொறுப்புச் சொல்ல முடியாத மக்கள் பிரதிநிதிகள் உருவெடுக்கின்றனர்.

நாடாளுமன்றத்தில் மக்கள் நலன்சார் விடயங்களை முன்வைப்பதை விடுத்து, எந்தப் பிரதேசத்தில் சன அடர்த்தி குறைந்திருக்கிறதோ, அங்கு ஆயுதங்களை களஞ்சியப்படுத்த வேண்டுமென்று கருத்தைக் கண்டுபிடிப்புக்களாக அவர்கள் வெளியிடக் கூடாது. ஓர் அரசு, தனது நாட்டு மக்களையும் அவர்களின் சொத்துக்களையும் அழித்து சன அடர்த்தியையும் குறையச் செய்து, அவர்களை நலிவுபடுத்தப் பயன்படுத்திய ஆயுதங்களை மீண்டும் அள்ளிக் குவித்து வைக்க வேண்டியதன் அவசியம்தான் என்ன? இந்தக் கீழ்த்தரமான செயற்பாட்டை நியாயப்படுத்த உதய கம்மன்பில பத்து என்ன, பத்தாயிரம் காரணங்களையும் முன் வைக்கலாம்.

இன்றைய நிலையில் ஒழுக்கம் என்றால் என்னவென்றே தெரியாத இராணுவத்தினர் அரசின் கூலிப்படைகளாக, ஏவற் படைகளாகவே தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர். இந்த நாட்டு மக்களின் ஒரு பகுதியினரைக் கொன்று குவித்த பின்னர் எஞ்சிய ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்த இவர்களுக்குப் பொருத்தமான இடம் வடமாகாணமாம். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என போரை முன்னெடுத்து வடபகுதி மக்களில் பலரை வெளியேற்றி விட்டு சன அடர்த்தி குறைந்த இடமென்று வடபகுதியைச் சுட்டிக் காட்டிப் பேசி அரசியல் நாடகம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

வடக்கில் இருந்து இராணுவ வாடை அகலும் வரை வடக்கு மக்கள் தமது அரசியல் நடவடிக்கைகளில் பல்வேறு மாற்று வடிவங்களைக் கையாள்வர். எந்த வழி தேவையோ அதைக் கையாளத் தயாராகி இயங்கிய வண்ணமே இருப்பார்கள்.

இதனைக் காரணமாகக் கற்பித்து வடக்கில் இருந்து இராணுவத்தையும் அவர்களின் காவல் அரண்களையும் அகற்றக் கூடாது என்பதற்கு உதய கம்மன்பில கூறிய பத்துக் காரணங்களும் வேடிக்கையானவை.

01.இறுதிப்போரில் சரணடைந்த பன்னிராயிரம் புலிகளுக்கு மிகக் குறுகிய காலத்தில் 3 வருட புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தியதாக கூறியிருக்கிறார். புனர்வாழ்வு என்ற போர்வையில் வலிமையான தூணையொத்த தோள்களையுடையவர்கள் வலுவற்றவர்களாகக் கப்பட்டனர். பிணிசேர்த்து விடப்பட்டனர். அவர்களைத்தொடர்ந்து கண்காணிக்க இலங்கை இராணுவம் வடபகுதியில் இருக்க வேண்டுமாம்.

02. தப்பியோடிய புலிகள் இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களாம். அவர்கள் ஆயுதத் தீர்வை நம்புவதால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள வடபகுதியில் இராணுவம் நிலைநிறுத்தப்படுவது அவசியயமாம். எனவே சந்தேகத்தின் பேரில் படையினரை நிலை நிறுத்த வேண்டிய கட்டாயம் கம்மன்பிலவுக்கு.

03.வடபகுதியில் வெடி குண்டுகளும் தற்கொலை அங்கிகளும் மீட்கப்பட்டதால், அவை குறித்து மேலும் தேடுதல் மேற் கொண்டு அவற்றைக் கண்டு பிடிக்க இராணுவம் வடக்கில் இருக்கும்.

04.இரண்டாயிரத்து 600 வருட கால வரலாற்றில், வடபகுதியில் இருந்தே ஆக்கிரமிப்புக்கள் இடம் பெற்றுள்ளதாக ஒரு பெரிய கண்டுபிடிப்பு. இலங்கையின் வரலாற்றையே திரிபுபடுத்தி தென்பகுதியின் ஓர் தொடர்ச்சியான புனைகதைச் சித்திரிப்பாக மகாவம்சத்தின் ஒரு சில பக்கங்களையாவது சொல்லக் கேட்டு இப்படியான ஏமாற்றுக் கதைகளை நவீன காலத்திலும் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. உரிமைகள் தொடர்ச்சியாகப் பறிக்கப்படும் போதெல்லாம் அந்நிய தேசம் சென்று நீதிக்காக போராடுபவன்தான் நாடிநரம்பு ஒழுங்காக முறுக்கேறிய மனிதன். அப்படியான மனிதர்கள் நிறைந்துவாழும் இடம் தான் நாட்டின் வடபகுதி. அவர்கள் பல்லாயிரமாண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு வாழ்வது பெருமைதான்.

05.வடபகுதி இந்தியாவுக்கு அருகில் இருப்பது சரிதான். இந்திய மீனவர்கள் கடலில் எல்லை மீறுகின்றனரென கல்லால் அடிப்பதும் அவர்களோடு நிராயுத பாணிகளான தொழிலாளர்களோடு மல்லுக்கட்டவுமே வடக்கில் கடற்படை நிலைகொள்ளும்.

06.வடக்கில் போரால் வீழ்ந்து போன அரசுப் பொறிமுறை மீண்டும் வலுப்பெறவில்லை. கொத்துக் குண்டான ஜனாதிபதி அதிகாரத்தில் இருந்து வெடித்துச் சிதறிய ஆளுநர் பதவி இருக்கும்வரை அரசு பொறிமுறை ஒருபோதும் வலுப்பெறாது. வடக்கில் சட்டமும் ஒழுங்கும் நீதியும் வலுப்பெறமுடியாமல் இருக்க இராணுவம் தான் காரணம் என்ற இந்த சிறிய தத்துவம் கூடவா தெரியவில்லை கம்மன்பிலவுக்கு?

07.வெறும் காணிகள் அதிகம் உள்ள இடம் வடபகுதி என கண்டுபிடித்த இவரின் நிலை கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போக நினைப்பதுபோல உள்ளது. இவை அத்தனையும் வடக்கு அரசின் விவசாய நிலங்கள். அங்குவாழ்ந்து காணாமல் போனோரைக் கண்டு பிடிக்க நாங்கள் ஐ.நா.சபையை உதவிக்கு அழைத்திருக்கும் நேரத்தில் வாங்கிய ஆயுதங்களையும் இந்த மண்ணில் களஞ்சியப்படுத்த தரிசு நிலம் தேடுகின்றீர்களே.

08.இலங்கையின் பாதுகாப்புச் செலவினம் அதிகரித்துள்ளமையால் வரவுசெலவுத் திட்ட அறிக்கைகள் வெளியாகியுள்ளன. இலங்கையின் ஒரு பிரஜைக்கு 5 இராணுவம் என்ற அடிப்படையில் இருந்தால் என்னவாகும் நிதிக் கருவூலம். வடபகுதியின் நூல் நிலையங்களும், பாடசாலைகளும், பல்கலைக்கழகங்களும், கல்வி நிறுவனங்களும், தேவாலயங்களும், கோயில்களும் தென்பகுதி அரசுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. அதனால் வடபகுதியில் இராணுவம் நிலைகொள்ளும்.

09. நாடுகடந்த தமிழீழம் தெற்கு அரசுக்கு மிகப்பெரும் சவால். எனவே வடக்கில் இராணுவம் இருக்கும்.

10.நாடுகடந்த தமிழீழ அரசு உருவாக்கப்பட்டு வரும் நிலையில் பிறநாட்டு ஆதரவோடு இலங்கையை ஆக்கிரமிக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே தென்னிலங்கை அரசின் மக்கள் பிரதிநிதிகள் வாழ்கின்றனர்.

எனவே உதய கம்மன்பிலவின் இந்தப் பத்துக் கண்டுபிடிப்புக்களும் இவர்களின் பதற்றத்தையே தெளிவுபடுத்துகின்றது. இவை நல்லாட்சித் தத்துவத்துக்கு உகந்ததாகா. மக்கள் பிரதிநிதிகள் இத்தகைய கண்டுபிடிப்புக்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தால் இன நல்லிணக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை. மகிந்த அணியின் கூட்டுக்குள், இது போன்ற கண்டுபிடிப்புக் கள் தொடர்ந்து இடம்பெறும் என்று நம்பலாம். ஆகவே வடக்கு அரசில் அறிவாளிகள் உருவெடுக்கின்றனர். தெற்கில் இவர்களை அழிக்க இராணுவத்தினர் உருவாகின்றனர். இதுதான் வரலாற்று உண்மை.

## யானைகளால் ஏற்படும் பாதிப்பைத் தடுக்க மாற்று வழி

இந்தப் பாதிப்புப் பற்றிப் பத்திரிகைகளில் பல முறை செய்திகள் வந்திருக்கின்றன. இந்தப் பாதிப்புக்கள் அனேகமாக வன்னி, கிழக்கு மாகாண படுவான்கரைப் பகுதி உட்பட தென்மாகாணங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. எனவே காட்டு யானைகள் எல்லாவற்றையும் அழிக்க முடியாது.

மின்சார வேலிகளினால் யானைகள் இறந்தமை பற்றியும் பத்திரிகைகளின் மூலம் அறிய முடிந்தது. எனவே இதற்கு எதிரான நடவடிக்கையாக யானைகள் அதிகமாக வாழும் காடுகள் மனிதர்களால் அழிக்கப்படுவதை நிறுத்த வேண்டும்.

மேலும் யானைகளைப் பயமுறுத்தி திரும்பி ஓட்டம் எடுக்க வைக்கச் சிறந்த வழி ஒன்று உண்டு. அதனைத் தாம் வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்த்ததாக வன்னேரிக்குளப் பகுதியில் விவசாயம் செய்த ஒருவர் கூறக் கேட்டுள்ளேன்.

வனவிலங்குப் பகுதியினருக்கு அறிவித்தால் அவர்கள் உடன் குறித்த இடத்துக்கு வருவது கஷ்டம். அவர்களும் வன இலாகாவினால் வழங்கப்படும் பெரிய வெடிகளைக் கொடுப்பார்கள். இந்த வெடிகளை விடக் கூடிய பயனைத் தரக்கூடியதான சிறந்த வழியாக, தீயுடன் தீப்பொறி பல தரம் பாயும் (ஏவுகணை போன்ற) மிகப்பெரிய சீறுவானத்தைப் பயன்படுத்தி யானைகளை விரட்டலாம்.

– வன்னேரி மைந்தன்

## தலைவர்கள் எதன் மீது நின்றார்கள்?

துரையப்பா விளையாட்டரங்கில் 1999 ஆம் ஆண்டளவில் பல மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவை தொடர்பாக முறையான நீதிவிசாரணை முற்றுப்பெறவில்லை. சரியான முறையில் தடயங்கள் கண்டறியப்படவில்லை. இவை இலங்கை – இந்திய இராணுவத் தரப்புகளாலும் அவர்களின் கூலிப்படைகளாலும் கடத்தப்பட்டு காணாமற்போன தமிழ் இளைஞர்களுடையதாக இருக்கும் என்ற அச்சம் புதைகுழிகள் தோண்டப்பட்ட காலத்தில் எழுந்தது.

ஆனால், அவற்றுக்கு இன்னமும் விடை காணப்படவில்லை. காலம் கடந்து விட்டது. பிள்ளைகளைப் பறிகொடுத்தோர் தமது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் கண்ணீருடன் ஏங்குகின்றனர். இந்தச் சந்தர்ப்பத்தில் பழையவற்றை மறந்தும், மறைத்தும் துரையப்பா விளையாட்டரங்கின் மேற்றரைக்கு மெழுகிட்டு திறந்து வைத்துள்ளமை ஓர் இனப்படுகொலையை மூடிமறைக்கும் போலி நல்லிணக்க முகங்களின் செயற்பாடாகவே கொள்ளத்தக்கது.

விளையாட்டரங்கத்தைத் திறந்தபோது தலைவர்களுக்குத் தாம் மனிதப் புதைகுழியின் மீது நிற்கின்றோம் என்ற உணர்வு இருந்ததா?

பரதன், யாழ்ப்பாணம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விபரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விபரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சர்வதேச யோகா தின நிகழ்வுகள் உலகின் பல பகுதிகளிலும் நடைபெற்றன. சீனாவில் அமைக்கப்பட்டுள்ள உயரமான கண்ணாடிப் பாலத்தில் யோகா செய்யும் காட்சி. (ற-ரி4)

## ஜப்பானில் தொடர் மழை 6 பேர் சாவு

டோக்கியோ, ஜூன் 23

தென்மேற்கு ஜப்பானில் பெய்து வரும் தொடர் மழையால் 6 பேர் இறந்துள்ளனர். ஒருவர் காணாமற்போயுள்ளார்.

வெள்ளப் பெருக்கெடுப்பால் நிலச்சரிவுகளும் ஏற்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான மக்கள் அதிகாரிகளின் அறிவுறுத்தல்களின்படி இடம்பெயர்ந்துள்ளனர்.

குமாமோடோ பகுதியில் ஒரு மணி நேரத்தில் 4 அங்குல மழைவீழ்ச்சி பெறப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் இரு மாதங்களுக்கு முன்னர் நில அதிர்வு ஏற்பட்டது. அதில் 49 பேர் உயிரிழந்தனர்.

(ற-ரி4)

## ஐ.எஸ்ஸை சேர்ந்த 200 பேர் சாவு

சேட் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்த 200 பேர் கொல்லப்பட்டனர் என்று லிபிய இராணுவம் தெரிவித்துள்ளது. லிபியத் துணைப் படையினர் 34 பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சேட் பகுதியை மீட்பதற்கான தாக்குதல் பெருமெடுப்பில் நடத்தப்படுகின்றது என்று இராணுவம் தெரிவித்தது. ஐ.எஸ். அமைப்பும் கடும் எதிர்த் தாக்குதலை நடத்துகின்றது.

கராபுலி பகுதியில் உள்ள ஆயுதக் கிடங்கு ஒன்று வெடித்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அதில் இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று கூறப்படுகின்றது.

(ற-ரி4)

## மிரட்டுகின்றது வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

பியாங்யாங், ஜூன் 23

வடகொரியா நேற்று இரு ஏவுகணைச் சோதனைகளை நடத்தியுள்ளது. இந்தத் தகவலை தென்கொரியா, அமெரிக்க அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

வடகொரியாவின் வொன்சன் நகரில் முசுதான் இடைநிலை தூர ஏவுகணை சோதிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய ஊடகப் பேச்சாளர் கூறினார்.

இந்த ஏவுகணை 3 ஆயிரம் கிலோமீற்றர் முதல் 5 ஆயிரத்து 500 கிலோமீற்றர் தூரம் சென்று இலக்குகளைத் தாக்கக் கூடியது.

இரு தடவைகள் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இவை ஜப்பான் கடற்பரப்பிலேயே சோதிக்கப்பட்டன என்று அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகாலை 5.58 மணியளவில் முதல் ஏவுகணை சோதனை செய்யப்பட்டது. 2 மணித்தியாலங்கள் கழித்து மு.ப. 8.05 மணியளவில் இரண்டாவது சோதனை நடத்தப்பட்டது.- என்று ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வடகொரியாவின் நடவடிக்கைக்கு அமெரிக்க கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது குறித்து எச்சரிக்கையாக இருக்கின்றோம். பிராந்திய நட்பு நாடுகளுடன் இணைந்து அங்குள்ள நிலைமைகள் குறித்து அவதானிக்கின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டாம் என்று அந்த நாட்டுக்கு முன்னரே அறிவுறுத்தியிருந்தோம். எமது பாதுகாப்பில் நாம் பெரிதும் அக்கறை செலுத்தியுள்ளோம்.- என்று அமெரிக்கச் செயலகத்தின் பேச்சாளர் ஜோன் கெர்பி கூறினார்.

ஐ.நாவின் எச்சரிக்கையையும் மீறி வடகொரியா ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளால் வடகொரியா உலகில் இருந்து தனிமைப்படுத்தப்படும்.- என்று தென்கொரியா கூறியுள்ளது.

இந்த ஆண்டில் மட்டும் வடகொரியா கண்டம் விட்டுக் கண்டம் பாயும் 4 ஏவுகணைகளைச் சோதித்துள்ளது. 2007ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 30 ஏவுகணைகளை வடகொரியா சோதனை செய்துள்ளது. அணு ஆயுத சோதனையும் நடத்தியுள்ளது. அதனால் ஐ.நா. அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

(ற-ரி4)



## ஒலிம்பிக் சுடர் ஏற்றும்போது சீறிப் பாய்ந்தது சிறுத்தை

### கட்டுப்படுத்த முடியாது சுடப்பட்டது

மன்னாவுஸ், ஜூன் 23

பிரேசிலில் ஒலிம்பிக் சுடரேற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிறுத்தை ஒன்று சுட்டுக் கொல்லப்பட்டது. மன்னாவுஸ் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

பிரேசிலில் தொடர் ஓட்டம் மூலம் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. மன்னாவுஸ் நகரிலும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்வுக்கு வன விலங்குக் காப்பகத்தில் இருந்த சிறுத்தை ஒன்றும் பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டிருந்தது.

இரும்புச் சங்கிலிகளால் கட்டப்பட்டு சிறுத்தை நிகழ்வு இருந்த இடத்துக்கு அழைத்து வரப்பட்டது. திடீரென சிறுத்தை அதிகாரிகளின் பிடியில் இருந்து நழுவியது. அங்கிருந்த இராணுவத்தினர், கால்நடை மருத்துவர்கள் எவ்வளவு முயன்றும் அதைப் பிடிக்க முடியவில்லை. அங்கிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் மீது சிறுத்தை பாய்ந்துள்ளது. அதையடுத்து அதன் மீது சூடு நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தால் ஒலிம்பிக் தொடர் ஓட்ட நிகழ்வு நிறுத்தப்பட்டது. சிப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவத்துக்கு றியோ ஒலிம்பிக் சபை மன்னிப்புக் கோரியுள்ளது.

சுடரேற்றும் நிகழ்வுக்கு விலங்கை அனுமதித்தது எமது தவறே. காட்டு விலங்குகளை இணைத்து நிகழ்வை நடத்துவதன் மூலம் ஒற்றுமையைப் புலப்படுத்த எண்ணினோம். - என்று ஒலிம்பிக் சபை தெரிவித்துள்ளது.

சிறுத்தை சுட்டுக் கொல்லப்பட்டமைக்குக் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. (ற-ரி4)

## நாய் இறைச்சித் திருவிழா எதிர்ப்பை மீறி ஆரம்பம்

பீஜிங், ஜூன் 23

கடும் எதிர்ப்புகளையும் மீறி சீனாவில் நாய் இறைச்சித் திருவிழா ஆரம்பமாகியுள்ளது. யூலின் நகரில் 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. அதில் சுமார் 10 ஆயிரம் நாய்கள், பூனைகள் கொல்லப்படும் என்று கூறப்படுகின்றது.

இந்தத் திருவிழாவுக்கு உலக அளவில் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. 11 மில்லியன் கையெழுத்துக்கள் பெறப்பட்டு இந்தத் திருவிழாவை நிறுத்துமாறு வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும் இது அரச சார்பற்ற விழா என்றும், உள்ளூர் வர்த்தகர்களே நடத்துகின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.



தற்போது ஆரம்பமாகியுள்ள திருவிழாவுக்கு சீனாவின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் வருகின்றனர். சீனாவில் 500 ஆண்டுகளாக நாய் இறைச்சி உண்ணும் கலாசாரம் காணப்படுகின்றது. நாய் இறைச்சி உடல் சூட்டைத் தணிக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது. யுலின் நகர மக்கள் நாய்கள் துன்புறுத்தப்படாது சரியான விதத்திலேயே கொல்லப்படுகின்றன என்று கூறுகின்றனர்.

இந்தத் திருவிழாவுக்காக வளர்ப்பு நாய்கள் திருடப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. கூண்டுகளில் அடைக்கப்பட்டிருக்கும் நாய்கள் கழுத்துப் பட்டியுடன் உள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சீனாவில் வருடாந்தம் 10 மில்லியன் நாய்கள் இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. சீனாவில் நாய் இறைச்சி விற்பனை சட்டபூர்வமானது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை

## பிறந்த எண்ணின் பலன்கள்

## 7

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 7 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இவர்களில் பெரும்பாலோர் நல்ல எழுத்தாளராகவோ, ஓவியர்களாகவோ, கவிஞர்களாகவோ ஆகுகின்றனர். சிறந்த நடிகர்கள், இசைக்கலைஞர்கள், கவிஞர்கள் எல்லாம் இவர்களே. 2 ஆம் எண்ணின் மறுபக்கம் இந்த எண்ணாகும். இவர்கள் தாங்கள் செய்யும் தொழிலில் எப்போதும் மிகுந்த ஈடுபாட்டோடும், நேரம் பார்க்காமலும் தொடர்ந்து ஈடுபடுவார்கள். குடும்பம் என்பது இரண்டாம் பட்சம்தான். பணம்,தொழில் என்று எப்போதும் சுற்றுவார்கள். தர்ம ஸ்தானங்களுக்கும். தெய்வத் திருப்பணிகளுக்கும் செலவிடத் தயங்க மாட்டார்கள்.

7 ஆம் எண்காரர்கள் வியாபாரத்தில் சிறந்து விளங்குவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி செய்பவர்களாகப் புகழ் பெறுவார்கள். தங்களது மதங்களில் தீவிரமாக நாட்டம் கொள்வார்கள். வழக்கமான பாதையில் செல்வது இவர்களுக்குப் பிடிக்காது.

எனவே, மக்களின் சீர்திருத்தத்துக்காகப் போராடுவார்கள். இவர்களுக்குப் பிரபஞ்ச இரகசியங்கள் எல்லாம் எளிதில் கிடைத்துவிடும். இவர்களின் கனவுகள், எண்ணம் ஆசை போன்றவை நிறைவேறும். ஐம்புலன்களுக்கும் எட்டாத அரிய செயல்களையும் இயற்கையிலேயே உள்ளுணர்வாக அறிவார்கள்.

இவர்களிடம் பிறரை வசியப்படுத்தும் சக்தியுண்டு. மிக எளிதாக எவரையும் இவர்கள் வசியப்படுத்தி விடுவார்கள். கடுமையான உழைப்பும், எதையும் ஒழுங்காகவும், சரியாகவும் செய்து முடிக்கும் இயல்பும் இவர்களை வெற்றிப் பாதையில் ஏற்றிவிடும். இராஜ யோகம், மந்திரம், தியானம் ஆகியவற்றில் மிகுந்த நம்பிக்கை உடையவர்கள். முழுமனதுடன் அவைகளை நேசிப்பார்கள். இவர்கள் சுத்தமான ஆடைகளையே விரும்பி அணிவார்கள்.

இல்லறத் துறவிகளாகவே பெரும்பாலோர் இருப்பார்கள். வார்த்தைகளை இவர்கள் நிதானமாகவே பேசுவார்கள். எவரிடமும் கலகலப்பாக இருக்கமாட்டார்கள்.

ஏதோ சிந்தனையில் இருப்பதுபோல் தோன்றுவார்கள். ஒரு பெரிய காரியத்தை எடுத்துக்கொண்டு, மிகுந்த பொறுமையுடன் செயலாற்றி, வெற்றி பெற்றும் விடுவார்கள்.

இவர்களுக்கு இளவயதில் பல தடைகளும் கசப்பான அனுபவங்களும் ஏற்படும். திருமணம் அமைவதில் தாமதமாகும். திருமண வாழ்விலும் பல தடைகள் உண்டு; வேலை விடயமாகவோ, அல்லது வேறு பிரச்சினைகள் காரணமாகவோ, அடிக்கடி மனைவி, குழந்தைகளை விட்டுப் பிரிய நேரிடும். கேதுவின் ஆதிக்கம் குறைந்தால், கெட்ட காரியங்களிலும் துணிந்து ஈடுபடுவார்கள்.

இவர்களது முயற்சிகளெல்லாம், ஏதாவது ஒருகாரணத்தால், கடைசி நேரத்தில் பாதிக்கப்படும். மகிழ்ச்சியில்லாத வாழ்க்கை பலபேருக்கு அமையும். சிறுவயதுமுதலே,தன்னம்பிக்கைதான் இவர்களது முதல் நண்பன். 7 ஆம் எண்காரர்கள் பிறக்கும் போது, அவர்கள் குடும்பத்துக்குப் பல சோதனைகளும், விரயங்களும் ஏற்படும்.

இளம் வயதுக்குப் பின்புதான் (25 வயதிற்குப்பின்பு) இவர்களது வாழ்க்கையில் அதிர்ஷ்டத் திருப்பங்கள் ஏற்படும். இவர்கள் பெரிய மதத் தலைவராகவோ, கலைஞராகவோ, தொழிலதிபர்களாகவோ முன்னேறிப் பெரும் பணம், புகழ் குவிக்கும் யோகம் உண்டு.

தங்களுக்கு வரும் இடையூறுகளைக் கண்டு கலங்கமாட்டார்கள். உடல், பொருள், ஆவி மூன்றையுமே பொது வாழ்க்கைக்கென அர்ப்பணம் செய்வார்கள். எவ்வளவு துன்பம் வந்த போதிலும், தங்களது இலட்சியத்தைக் கைவிடாமல், பிடிவாதத்துடன் செயலாற்றி, வெற்றி அடைவார்கள்.

(தொடரும்)

# வெடிகுண்டுச் சிதறல்களும்

## அவற்றுக்கான சிகிச்சை முறைகளும்

மருத்துவர் யமுனாநந்தா

பிரதமர், வடபகுதியில் வெடிக்குண்டுச் சிதறல்களால் பாதிக்கப்பட்டவர்களின் விவரம் தரப்படும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பதாக நாடாளுமன்றில் உறுதியளித்துள்ளார்.

வெடிகுண்டுச் சிதறல்கள் எமது மக்களிடையேகாணப்படுகின்றன. அதற்கு உரிய முறையாக சிகிச்சை வழி காட்டல்கள் சுகாதாரத் திணைக்களத்தினால் உருவாக்கப்படவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களிடம் பெரிய பதற்றம் காணப்படுகிறது. குண்டுச் சிதறல்களால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பல மடங்காகக் காணப்படுமாயின் அவர்கள் அனைவருக்கும் சிகிச்சை அளிப்பது கடினம். எனவே குண்டுச் சிதறல்களின் பாதிப்புகளை வகைப்படுத்தல் வேண்டும். அடுத்து சிகிச்சைக்கான வரையறையையும் உருவாக்க வேண்டும்.

விமானக்குண்டுச் சிதறல்கள், எறிகணைக் குண்டுச் சிதறல்கள், துப்பாக்கிச் சன்னங்கள் என இவை பலவாறாக அமைகின்றன. இவற்றுடன் பிளாஸ்ரிக் துகள்கள் உலோகத் துகள்கள் சேதனத்துகள்கள் மண் துகள்கள் ஆகியனவும் சேர்ந்துள்ளன. குண்டுச் சிதறலின் பருமனின் அடிப்படையில் மூன்று வகையாகப் பாதிக்கப்பட்டவர்களை வகைப்படுத்தலாம். அவையாவன:

1. பெரும் துகள்களால் பாதிக்கப் பட்டவர்கள் (1 செ.மீ மேற்பட்ட துகள்கள்)

சிறுதுகள்களால் பாதிக்கப்பட்டவர்கள் (1 செ.மீ உட்பட்ட)

நுண்துகள்களால் பாதிக்கப்பட்டவர்கள் (1 மைக்குறேன் 05 மைக்குறோன்)

பெரும் துகள்களும் சிறுதுகள்களும் உடலில் தாக்கிய பகுதியைப் பொறுத்து, அதன் பாதிப்புக் காணப்படும் சில சந்தர்ப்பங்களில் இவை குருதிக்குழாய் நரம்புக்களுக்கு அருகில் மூளையில் காணப்படும். இவற்றை அகற்றுவது சிலவேளைகளில் உயிராபத்தாகவும் அமையலாம். அல்லது சில பாதிப்புக்களை அதிகம் உருவாக்கலாம்.

ஒரு மைக்குறோன் தொடக்கம் 5 மைக்குறோன் வரையான நுண் துகள்கள் சுவாசப் பாதையூடான உடலைத் தாக்கும். இவை சுவாசச் சுற்றுச் சவ்வில் திண் குழியங்களால் உள்ளெடுக்கப்பட்டுக் காணப்படும். ஆரம்ப சுகாதார சேவையிலேயே வெடிகுண்டுச் சிதறல்களால் பாதிக்கப்பட்டவர்களை பதிவு செய்யலாம். பெரும்துகள் சிறுதுகள் பாதிப்புடையவர்கள் காயமடைந்தவர்களாகக் காணப்படுவர்.

நுண்துகளால் பாதிப்படைந்தவர்கள் வெடிகுண்டுப் புகையைச் சுவாசித்தவர்களாகக் காணப்படுவர். இவ்வாறு பாதிப்புக்கு உள்ளானவர்களின் தகவல்களை புள்ளிவிவர அடிப்படையில் ஆராயலாம். இதில் பின்வருவன கவனிக்கப்படும்.

1. வயது வேறுபாடு
2. பால் வேறுபாடு
3. பிரதேச வேறுபாடு
4. கால வேறுபாடு

பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ ஆலோசனை வழங்கல், பாதிப்பின் அளவை அளவிட்டு சிகிச்சை வழங்கல் என்பன முறைப்படுத்தப்பட வேண்டும்.

இதற்கு நோயாளியிடம் சரிதம் எடுக்கப்படும். உடற்பரிசோதனை செய்யப்படும். ஆய்வுப்பரி சோதனைகளில் எக்ஸ் கதிர் சிரி ஸ்கான் என்பன அவசியமானதாகும்.

நுண்துகள்களால் ஏற்பட்ட பாதிப்பை அறிய சுவாசப்பையின் HRCT உம் pleural biopdy உம் அவசியமானவை, குருதியில் இவற்றின் பாதிப்பை அறிய Reactive pro toin Quanti feron Level என்பன முக்கியமானவை Electron Microscopic Studies Nano Technological Investigation என்பனவும் நுண்துகள் பாதிப்பின் துல்லியத்தை எமக்கு எடுத்துக்காட்டும். வெடிகுண்டுச் சிதறல் பாதிப்பு விழிப்புணர்வின் சமூக மருத்துவ முக்கியத்துவம். வெடிகுண்டுச் சிதறல் பாதிப்புப் பற்றிய விழிப்புணர்வு நோயாளிகளை இனம் காணவும், சிகிச்சை அளிக்கவும் உறுதுணையாக அமையும். இதன்மூலம் வேதனையுடன் உள்ள பலரைச் சிகிச்சை மூலம் குணப்படுத்தமுடியும். அடுத்து உளவளத்துணை தேவைப்படுவோருக்கு வேண்டிய ஆற்றுப்படுத்தலை நல்கலாம். சத்திரசிகிச்சை தேவைப்படுவோருக்கு அதற்குரிய நிபுணத்துவ சேவைக்கு வழிகாட்டலாம்.

அடுத்து பாதிப்படைந்தவர்களுக்கான சட்ட மருத்துவ ஆலோசனை முக்கியமானது. Forensic Histo pathologist நிபுணத்துவம் இங்கு முக்கியமானது. பாதிக்கப்பட்டவர்கள் எந்தவகையான குண்டுகளால் பாதிக்கப்பட்டார்கள், அதில் உள்ள நச்சுகள் எவை, எந்த நாட்டில் இருந்து எப்போது தயாரிக்கப்பட்டது என்பனவற்றை. consultant Forensic Histopathologist இனால் கண்டறிய முடியும்.

அடுத்து குண்டு வெடிப்பு நிகழ்ந்த காலம் பருமன் என்பவற்றையும் அதன் மூலம் அளவிட முடியும். இவையாவும் சமூக அடிப்படையில் பாதிப்படைந்த மக்கள் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளவும், சட்ட நடவடிக்கை எடுக்கவும் உதவும்.

அடுத்து நுண்துகளின் பாதிப்புக்களால் உடலில் Quantiferon C குறைவடையும். இதனால் உடலில் பல நோய்கள் ஏற்படலாம். இதற்கு இயற்கை மருந்துகளாக மஞ்சள் நெல்லிக் கனிபோன்ற Antioxidants அதிகம் உள்ள உணவுகளை உபயோகிக்க, ஊக்குவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான சட்ட ஏற்பாடுகள்

சி.சந்திரகுமார்

இலங்கையின் முதலாவது ஜனநாயகச் சோசலிஸக் குடியரசின் அரசமைப்பில் (1972) முதன் முறையாக அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியமை இது தொடர்பாக எடுக்கப்பட்ட முக்கியமான நடவடிக்கையாகக் கருதப்படுகின்றது. இந்த அரசமைப்பின் 18 ஆவது உறுப்புரையில் அடிப்படை உரிமைகள் தொடர்பான விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. எனினும் இந்த அரசமைப்பில் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் மற்றும் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகள் தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லை என்ற விமர்சனம் இந்த அரசியல் திட்டம் மீது முன்வைக்கப்படுகின்றது.

அடுத்து இலங்கையின் இரண்டாம் குடியரசு யாப்பில் (1978) 3 ஆவது அத்தியாயத்தின் 10 தொடக்கம் 14 ஆவது உறுப்புரைகளில் அடிப்படை உரிமைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அந்த அடிப்படை உரிமைகள் பின்வருமாறு:

**உறுப்புரை 10**

ஒவ்வொருவரும் தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரம், சிந்தனை செய்யும் சுதந்திரம் உட்பட மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**உறுப்புரை 11**

ஒவ்வொருவரும் சித்திரவதை அல்லது கொடூரமான மனதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்துதலுக்கு அல்லது தண்டனைக்கு உட்படலாகாது.

**உறுப்புரை 12**

சட்டத்தின் முன் சகலரும் சமமானவர்கள் அத்துடன் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள். எந்தவொரு நபரும் இனம்,மதம், மொழி, சாதி, பால், அரசியல் கொள்கை பிறப்பிட ரீதியாக வேறுபடுத்தப்படக் கூடாது.

**உறுப்புரை 13**

ஒவ்வொருவரும் தனது நாட்டில் தனக்கு எதிராகப் புரியப்பட்ட சித்திரவதை தொடர்பாக முறைப்பாடு செய்ய உரித்துடையவராவதுடன் அத்தகை முறைப்பாட்டாளர் குறித்த முறைப்பாட்டால் அல்லது கொடுக்கப்பட்ட சான்றினால் அச்சுறுத்தல் அல்லது தவறாக நடத்தப்படாமல் இருப்பதை அரசு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**உறுப்புரை 14**

ஒவ்வொரு பிரஜையும் தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து பகிரங்கமாகவேனும் அந்தரங்கமாகவேனும் தனது மதத்தையோ அல்லது நம்பிக்கையையோ வழிபாட்டிலும் போதனையிலும் அனுசரிப்பிலும் வெளிக்காட்டுவதற்கான சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், தொழிற்சங்கத்தை அமைக்கும் சுதந்திரம், மதவழிபாட்டில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், சொந்த கலாசாரத்தையும் மொழியையும் பயன்படுத்துவதற்கான சுதந்திரம், சட்டமுறையான தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், இலங்கைக்கு திரும்பி வருவதற்கான சுதந்திரம் ஆகியவற்றுக்கு எல்லாப் பிரசைகளும் உரித்துடையவர்கள் என இந்த அடிப்படை உரிமைகள் குறிப்பிடுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள் பற்றிய அறிவு எம் அனைவருக்கும் இருக்க வேண்டியது அவசியமானது.

**அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் 17 மற்றும் 126ஆவது உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகார



அல்லது நிர்வாக செயற்பாடுகள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் அது தொடர்பாக உயர்நீதிமன்றத்துக்கு மனுத்தாக்கல் செய்யும் உரிமை உண்டு.

அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

நிர்வாக செயற்பாட்டின் மூலம் அடிப்படை உரிமை மீறப்படுமாயின் நிர்வாகத்திற்கான நாடாளுமன்ற ஆணையாளரிடம் (குறைகேள் அதிகாரி அல்லது ஓம்புட்ஸ்மன்) முறைப்பாடு செய்யலாம்.

நாம் மேலே கலந்துரையாடிய குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான முதலாவது சமவாய விருப்பு உடன்படிக்கையில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளதால், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அதன் தீர்ப்புகள், தேசிய ரீதியாக இடம்பெறும் விடயங்கள் தொடர்பாக திருப்தி அடையாதபோது சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறையீடு செய்யலாம் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கையில் மனித உரிமைகள் அனுபவிப்பது தொடர்பான தற்போதைய நிலையை ஆராயும் போது.

ஒரு பிரசைக்கு உரித்தாகும் ஓர் அடிப்படை உரிமை ஏதேனும் ஓர் அதிகாரம் அல்லது நிர்வாகச் செயற்பாடு மூலம் மீறப்படுதல் அல்லது மீற முயற்சித்தலின்போது, உதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அல்லது அது சம்பந்தமாக பரிகாரம் பெற்றுக் கொடுக்கும்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வதற்கும் இலங்கை நீதிமன்றம் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்பது இலங்கைப் பிரஜைகள் யாவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய விடயமாகும். இவ்வாறு ஒருவர் மனுத்தாக்கல் செய்கையில் வழக்கு விசாரணையின் போது பொருத்தமான தீர்ப்பை வழங்குவதற்காகவும், உரிய முறையில் செயற்படுவதற்காகவும் நீதிமன்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் பிரசைகளது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இத்தோடு அரச அலுவல்கள் மூலம் அரச திணைக்களங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் வேறு நிறுவனங்களின் அதிகாரிகள் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது, அது தொடர்பான முறைப்பாடுகளை சட்டத்தின் விதிமுறை

> மனித உரிமைகளை அனுபவிக்கும் போது ஒருசில எல்லைகளுக்குட்பட்டு அவற்றை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இன்னுமொருவரது உரிமைகளுக்குத் தடையேற்படும் வண்ணம் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை.

களுக்கு இணங்கப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்படும் அதிகாரம் ஒம்புட்ஸ்மனுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதனையும் பொதுத்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் யாவரும் தெரிந்திருக்க வேண்டிய விடயமாகும்.

அத்தோடு அடிப்படை உரிமைகள் மீறுவது தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதற்கும் பிரசைகளுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் தொடர்பான முறைப்பாட்டைப் பரிசீலனை செய்து நியாயமான தீர்ப்பை பரிந்துரை செய்வதற்கு மனித உரிமை ஆணைக் குழுவுக்கு முடியும் என்பதனையும் இலங்கைப் பிரசைகளாகிய நாம் அறிந்திருக்க வேண்டும்.

மேலும் இலங்கைப் பிரசைகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் விழிப்புணர்வூட்டுவதற்காகவும் அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகளாக பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடலாம்.

1. தேசிய கல்வி நிறுவகம் மூலம் பாடசாலை மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரிகளது பாடத்திட்டங்களில் மனித உரிமைகள் தொடர்பான அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளமை.
2. பல்கலைக்கழகங்கள் மற் றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் பாடநெறிகளினூடாகவும் மனித உரிமைகள் தொடர்பாக மாணவரை அறிவூட்டுவதற்குத் தேவை யான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துடன் நீதி, சமாதானம் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்புத் தொடர்பாகச் செயற்படும் அதிகாரிகள் மற்றும் அரச துறைகளில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பான அறிவை வழங்குவதற்கும் நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு மனித உரிமைகள் அனுபவிப்பது தொடர்பாக இலங்கை அரசமைப்பின் ஊடாக சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறான மனித உரிமைகளை வெளிப்படுத்தி விளக்கும் சட்ட ஏற்பாடுகள், இந்த மனித உரிமைகளை அனுபவிப்பதில் உள்ள சில வரையறைகளையும் குறிப்பிடுகின்றன. அதாவது மனித உரிமைகளை அனுபவிக்கும்போது ஒருசில எல்லைகளுக்குட்பட்டு அவற்றை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இன்னுமொருவரது உரிமைகளுக்குத் தடையேற்படும் வண்ணம் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை. இதனை அரசியல் அறிஞரான பேராசிரியர் ஹரல்ட் ஜே லஸ்கி என்பவர் குறிப்பிடுகையில் மனிதன் தன் சுதந்திரத்துடன் தன் பாதையில் பயணம் செய்ய முடியும் . ஆனால் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுனி வரை மட்டுமே ஆகும் என்பதற்கிணங்க இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசமைப்பின் 15 வது உறுப்புரையில் அடிப்படை உரிமைகளை அனுபவிப்பது தொடர்பாக வரையறைகள் விதிக்கப்பட்டுள்ளன.

இவ்வகையில் தேசியப் பாதுகாப்பு, இன மற்றும் சமய ஒற்றுமையை மேம்படுத்தல், தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாத்தல், பொதுமக்களது சுகாதாரம் பண்பாடு ஏனையோரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மதித்தல். போன்றன தொடர்பாக உரிமைகளை அனுபவிப்பதற்கான எல்லைகளை வகிக்கும் அதிகாரம் தொடர்பாக அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தோடு நாட்டில் போர் அல்லது சிவில் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது பொது நலனைக் கருத்திற் கொண்டு ஊடக தணிக்கையை மேற்கொள்வதற்கு அரசுக்கு உரிமை உண்டு. ஆகவே இலங்கைப் பிரசைகளாகிய நாம் எமது அடிப்படை உரிமைகள் பற்றிய பூரண விளக்கத்துடனும் அவை மீறப்படும் போது ஏற்படுத்தப்பட்டுள்ள சட்ட பரிகார முறைகள் பற்றியும் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகும். இத்தோடு இந்த மனித உரிமைகள் சட்டத்தின் எல்லைக்குள் இருந்தே அனுபவிக்க வேண்டும் என்பதை விளங்கிக் கொண்டால் இன்று எமது யாழ். குடாநாட்டில் இடம் பெறும் பல பிரச்சனைகள் சட்டவிளக்கமின்மையால் இடம்பெறுகின்றன என்பதை நாம் அனைவரும் விளங்கிக்கொள்ள முடியும்.

*கட்டுரையாளர் : ஆசிரியர்*
*யாழ் மத்திய கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடனைப் பிடித்த தந்திரம்

ஓர் ஊரில் பலசரக்குக் கடை வைத்திருந்தார் ஒரு செட்டியார். ஒருநாள் அவர் வியாபாரத்தை முடித்து விட்டு, இரவு வீட்டுக்கு வந்தார். ஒரு குவளையில் தண்ணீர் மொண்டு வீட்டின் பின் புறத்தில் கை, கால், முகத்தைக் கழுவினார். அப்பொழுது ஒரு திருடன் செடி மறைவில் ஒளிந்திருந்தான். அதைக் கவனித்தவர் கவனியாதவர்போல் வாய் கொப்பளித்து செடி மீது துப்புவதுபோல் திருடன் மீது துப்பினார். திருடனோ அசையாமல் அப்படியே இருந்தான். ஒரு குவளை தீர்ந்தது. இன்னுமொரு குவளை தண்ணீர் மொண்டு துப்பினார். மீண்டும் ஒரு குடம்தண்ணீரை மனைவி யைக் கொண்டு வரச்சொல்லி, வாய் கொப்பளித்துத் துப்பிக் கொண்டே இருந்தார். ஒரு குடம் தண்ணீரும் காலி யாகி விட்டது. இவ்வளவு தண்ணீரும் தன் மீது விழுந்தும் திருடன் அசையவில்லை.



"உங்களுக்கு என்ன பைத்தியமா? இப்படி வாய் கொப்பளித்துத் துப்பிக் கொண்டிருக்கிறீர்களே? கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பவளுக்குத்தானே கஷ்டம் தெரியும்!" என்றாள் செட்டியாரின் மனைவி.

செட்டியார் அதற்குப் பதில் கூறாமல் அவள் மீது ஒரு வாய் துப்பினார். கணவன் தன்மீது துப்பியதும் மனைவி ஓடிப்போய் பக்கத்து வீட்டாரிடம்போய் கணவனின் செயலைக்கூறி அவர்களைக் கூட்டி வந்து விட்டாள்.

"செட்டியாரே! ஏன் இப்படிச் செய்தீர்?" என்று கேட்டனர் அடுத்த வீட்டுக்காரர்கள்.

அதற்குச் செட்டியார், "ஐயா, கட்டிய கணவன், இருபது வருடங்களாகக் காப்பாற்றி வருபவன். ஆடை அணிகலன் அளித்து சுகபோகமாக இருக்க வைத்திருப்பவன் ஒரு வாய் தண்ணீரை அவள் மீது துப்புவதற்கு உரிமை இல்லையா? அதற்காக உங்களை எல்லாம் கூட்டி வந்து விட்டாளே! இதோ பாருங்கள்! செடி மறைவில் இருக்கும் முன்பின் தெரியாதவன் மீது ஒரு குடம் தண்ணீருக்கு மேல் துப்பியும், அந்த மனிதன் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கிறான். ஒரு வார்த்தை என்னைக் கேட்பானா? அவனையேகேட்டுப்பாருங்கள்" என்றுகூறிசெடிமறைவில் இருந்த திருடனைச் சுட்டிக் காண்பித்தார் செட்டியார். உடனே அடுத்த வீட்டுக் காரர்கள் திருடனைப் பிடித்துக் கிராம அதிகாரியிடம் ஒப்படைத்ததுடன் செட்டியாரின் தந்திரத்தையும் பாராட்டினார்கள்.

# உலகில் புகழ் பெற்ற பேருரைகள்

## மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (1869 –1948)

*(கடந்த வியாழன் வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)*

என் நிலையை நான் தெளிவாக எடுத்துச்சொல்லி விடுகிறேன். அகிம்சை என்கிற விலைமதிப்பு இல்லாத அன்பளிப்பை என்னிடம் அருட்கொடையாக ஆண்டவர் அளித்துள்ளார். இன்று நானும் என் அகிம்சையும் தோல்வி முகத்தில் இருக்கிறோம். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அகிம்சையின் சுவாலையால் தீண்டப்பட்டு சுட்டெரிக்கப்படும் உலகம் மீட்சி வேண்டி கதறுகையில் எனக்கு இறைவன் அளித்த ஆற்றலை நான் உபயோகிக்கத் தவறினால், அரிய அன்பளிப்பை நான் முறை தவறிப் பெற்று விட்டேன் என்று தீர்ப்பை அளித்து, ஆண்டவர் என்னை மன்னிக் மாட்டார். ஆகையால் இப்போது நான் செயலாற்ற வேண்டும். ரஷ்யா மற்றும் சீன அச்சுறுத்தப்படும் சமயம் நான் வாளாவிருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டு இருத்தல் என்பது நடைபெறாது இருக்கட்டும்.



நம்முடையது, ஆட்சி அதிகாரம் வேண்டிய வேட்கை அல்ல; இந்திய சுதந்திரம் வேண்டி நிற்கும் வன்முறை அல்லாத ஒரு தூய்மையான போராட்டம். வன்முறைப் போராட்டங்களில் ஒரு வெற்றிகரமான இராணுவ அதிகாரி இராணுவக் கிளர்ச்சி மூலம் சர்வாதிகாரத்தை நிறுவுகிறார். ஆனால், காங்கிரஸ் செயற்றிட்டத்தின்படி அத்தியாவசியமாக வன்முறை அற்றதாக உள்ள நிலையில் இங்கே சர்வாதிகாரம் என்பதற்கு இடமில்லை. வன்முறை அற்ற சுதந்திர வீரன் தனக்கு என்று எதையும் அபகரித்திடமாட்டான். அவன் தன் நாட்டின் சுதந்திரம் வேண்டி மட்டும் போராடுவான்.


சுதந்திரம் பெற்ற பிறகு எவர் ஆட்சி செலுத்துவது என்பது குறித்து காங்கிரஸ் அக்கறை கொள்ளவில்லை. அதிகாரம், வரும்போது இந்திய மக்களுக்கு அது உரிமையாய் இருக்கும்.. ஆகவே அவர்களே எவரை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திப் பொறுப்பை அளிப்பது என்று முடிவு செய்வார்கள். ஒருவேளை லகான் பார்சிகள் கைகளில் அளிக்கப்படலாம், ஒரு உதாரணம் இது - அதையே காண நான் விரும்புகிறேன் - அல்லது இன்றைய காங்கிரசில் சொல்லப்படாத பிறர்களின் பெயர்களாகவும் இருக்கலாம். அப்படியெனில் எதிர்ப்புத் தெரிவித்து உங்களால் இப்படிக் கூறிட முடியாது. " அந்தச் சமூகம் கடுகு போல் சிறியது. சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் தங்களுக்குரிய ஸ்தாபித்த காலம் தொடங்கி மதவாத சாயத்தில் இருந்து காங்கிரஸ் தன்னை உஷாராகப் பாதுகாத்துத் தனித்துள்ளது. நேசம் முழுவதும் முழுமை என்று எண்ணிச் செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

*(முற்றும்)*



# வரலாற்றில் இன்றைய தினம்

1532 - இங்கிலாந்தின் 8ஆம் ஹென்றி மன்னனும் பிரான்சின் முதலாம் பிரான்சும் உரோமன் பேரரசர் ஐந்தாம் சாள்ஸ்ஸுக்கு எதிராக, இரகசிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.
1794 - ரஷ்ய அரசி இரண்டாம் கதரீன், யூதர்களை யிவ் பகுதியில் குடியமர அனுமதித்தார்.
1848 - பிரான்சின் பாரிசில் ஜூன் எழுச்சி தினம் தொடங்கியது.
1868 - 'டைப் றைற்றர்' (தட்டச்சு) எனும் கண்டு பிடிப்புக்கு கிறிஸ்டோபர் லதம் ஷோல்ஸ் காப்புரிமம் பெற்றுக் கொண்டார்.
1913 - டொய்றன் போரில் கிரேக்க பல்கேரியாவை தோற்கடித்தது.
1940 - ஜேர்மன் தலைவர் அடொல்ப் ஹிட்லர் தம்மால் புதிதாகத் தோற்கடிக்கப்பட்ட பாரிஸ் நகரைப் பார்வையிட்டார்.
1942 - இரண்டாம் உலக மகா போர் : ஓஸ்விற்ச் நச்சு வாயு அறையுள் கொண்டு செல்வதற்கான முதலாவது தேர்வு பாரிசிலிருந்து புகையிரதம் மூலம் கொண்டுவரப்பட்ட யூதர்களிடம் மேற்கொள்ளப்பட்டது.
1967 - அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி ஜோன்சனும் சோவியத் பிரதமர் அலெக்ஸி கொசியின்னும் 3 நாள் உச்சி மாநாட்டுக்காக நியூயோர்சி கிளாஸ்பறோவில் கூடினர்.
1969 - நவீன மென்பொருள் கைத்தொழில் உருவாக்கத்துக்கான படிக்கட்டாக ஐபிஎம் 1970 ஜனவரியிலிருந்து மென்பொருள் மற்றும் சேவைகள் தனியாகவும் வன்பொருள் வேறாகவும் விலை நிர்ணயம் செய்யப்படும் என அறிவித்தது.
1985 - ஏயார் இந்திய 182 விமானத்தில் இடம்பெற்ற பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலில் அயர்லாந்து கடற்பரப்பில் அந்த போயிங் 747 விமானம் வீழ்ந்து, அதிலிருந்து 327 பேரும் உயிரிழந்தனர்.
1992 - முல்லை இராணுவ முகாமிலிருந்து நகைகள், பணம் மாயம். இது தொடர்பாக 2 லெப்டினன்ட் தர அதிகாரிகள், 8 சிப்பாய்கள் கைது.
1992 - இனப் பிரச்சினைக்கு மத்தியஸ்தம் தொடர்பாக சுவிடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷோக் அரச பிரமுகர்களுடன் பேச்சு.
2001 - நில நடுக்கத்தால் வடக்கு பெருவில், சுனாமி இடர் ஏற்பட்டு 74பேர் உயிரிழப்பு, 2,687 பேருக்குக் காயம்.
2004 - ஐ.தே.க. தலைமையைக் காப்பாற்ற நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார் அலிஸாஹிர்.
2013 - கிறான்ட் கனியன் பள்ளத்தை குறுக்காக இறுக இணைக்கப்பட்ட கயிற்றின் மீது நடந்து சென்ற முதலாவது சாதனையாளர் ஆனார் நிக்வலன்டா. இது 1500 அடி (460 மீற்றர்)ஆழமான பள்ளமாகும்.
2014 - சிரியா தனது கைவசமிருப்பதாகக் கூறிய கடைசித் தொகுதி, இரசாயன ஆயுதத் தொகுதியும், அழித்தொழிக்கப்படுவதற்காகக் கப்பலேற்றப்பட்டது.





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள் சிந்திக்க வேண்டிய

# தருணமிது!

நயினாதீவுக் கடலில் குளிக்கச் சென்ற மூன்று தமிழ் இளைஞர்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்துக் குரியது.

நீண்டகாலமாக இடம்பெற்ற போர் காரணமாக பல்லாயிரக்கணக்கான இளம் சந்ததியினரை நாம் இழந்து தவிக்கின்றோம். போரில் இறந்தவர்கள்போக, பெருமளவு இளவயதினர் புலம்பெயர்ந்தும் வாழ்கின்றனர். இவர்கள் இனிமேல் தமது தாயகத்துக்குத் திரும்பிவரப் போவதில்லை. தற்போது அவர்கள் வாழுகின்ற நாடுகளிலேயே நிரந்தரமாகத் தங்கிவிடப்போகின்றனர். இந்த நிலையில் இங்குள்ள தமிழ் இளைஞர்கள் வீதி விபத்துக்கள், குழு மோதல்கள் ஆகியவற்றில் சிக்கி தினம் தினம் உயிரை இழந்து வருகின்றனர். இதைவிட ஏதோ அசட்டுத் தைரியத்தில் நீர் நிலைகளில் இறங்கித் தமது உயிர்களை இழந்து வருபவர்களையும் காண முடிகின்றது.

இந்த நாட்டின் இரண்டாவது இனமாக உள்ள இலங்கைத் தமிழர்கள் விரைவில் 3 ஆவது இனமாகி விடுவார்கள் என்ற எச்சரிக்கை மணியோசையும் விடுக்கப்பட்டுள்ளது. இதை நாம் அலட்சியம் செய்து விட முடியாது. உண்மை நிலையே இதுதான். கிழக்கில் தமது ஆதிக்கத்தை இழந்த தமிழர்கள் வடக்கில் அதைப் பேணிக் காப்பதற்குப் படாதபாடுபட வேண்டியுள்ளது. திட்டமிடப்பட்ட வகையில் இடம்பெறுகின்ற குடியேற்றங்களால் சில ஆண்டுகளில் வடக்கிலும் தமிழரின் இருப்பு கேள்விக் குறியாக மாறி விடப்போகின்றது.

நாடாளுமன்ற அங்கத்துவத்தில்கூட தமிழர்கள் பெரும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றனர். யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களைப் பொறுத்தவரையில், சமீப காலம் வரை ஒன்பதாக இருந்தது. இப்போது ஏழாக குறைந்து, தற்போது ஆறில் வந்து நிற்கின்றது. உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதைபோன்று இது காணப்படுகின்றது.

தமிழர்கள் எதிலும் திட்டமிட்டுச் செயற்படுபவர்கள் என்ற பெயரைத் தம்முடன் கொண்டிருப்பவர்கள். பிள்ளைகளைப் பெறுவதிலும் அவர்கள் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றனர். ஒன்று அல்லது இரண்டுக்கு மேல் இப்போது இல்லை. குடும்பப் பொருளாதாரத்துக்கும், பிள்ளைகளின் கல்வி மற்றும் இதர தேவைகளுக்கும் இது உதவலாம். ஆனால், தமிழர்களின் எதிர்கால இருப்புக்கு இது உதவுமா?

ஒருபோதுமே உதவப் போவதில்லை. ஏற்கனவே சிறுபான்மை இனம் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ள நிலையில், தமிழர்கள் எதிர்கொள்கின்ற இன்னல்கள் சொல்லில் அடங்காதன. இந்த நிலையில் சிறுபான்மையில், சிறுபான்மையாகத் தமிழர்கள் வாழப்போவதால் ஏற்படப்போகும் இடர்கள் மோசமாகவே இருக்கப் போகின்றன.

ஓர் இனத்துக்கு அதன் எண்ணிக்கையே பெரிய பலமாக அமைந்து விடுகின்றது. தமிழ் நாட்டில் ஏழுகோடி தமிழர்கள் வாழ்வதால் அங்கு நாடாளுமன்றத்தில் மட்டுமல்லாது ஏனைய இடங்களிலும் கௌரவமானதொரு இடத்தை வகிக்க முடிகின்றது. உலகத் தமிழர்களின் தாய் வீடாகவும் தமிழ்நாடு விளங்குகின்றது. ஆனால், இங்கு எமது நிலை என்ன? உள்ளதையும் இழந்து, எண்ணிக்கையில் வீழ்ச்சி கண்டு இழிநிலை நோக்கிச்சென்று கொண்டிருக்கின்றோம்.

இந்த நிலை நீடிக்குமாயின் தமிழர்கள் என்ற பாரம்பரிய பெருமை எம்மை விட்டு விலகிவிடும். இதைக் கண்டும் காணாதவர்கள்போன்று இனியும் நாம் இருக்கப் போகின்றோமா?

அறிவுள்ள தமிழர்களே ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் என்ன?




உங்களுக்காக இல்லாவிட்டாலும் எதிர்காலச் சந்ததியின் இருப்புக்காகவேனும் நீங்கள் சிந்தித்துத்தானாக வேண்டும். இதை நீங்கள் இன்று தவறிவிடுவீர்களாயின் எதிர்கால வரலாறு உங்களை ஒருபோதுமே மன்னிக்காது. அது மட்டுமல்ல தமிழ் இனத்துக்குத் துரோகமிழைத்த வர்களாகவே நீங்கள் கருதப்படுவீர்கள்.

# உலகத்துக்கு தந்தை ஒருவர் தேவை

சாமுவேல் டேவிட்ராஜ்

யார் தந்தை? எத்தகையோர் தந்தை? என்பதை முதற்கண் தெளிவுறுதியுடன் வரையறை செய்தல் அவசர அவசியமாம். வெறும் பிறப்புரிமையை மட்டுமே வைத்து, ஒருவரைத் தந்தையாக வரித்திடமுடியாது. உலகப் பொதுவான உயர் எண்ணங்களோடு, தன்னைச் சூழவுள்ள அனைவரையும் அரவணைத்துப்போகும் திண்ணிய மனப்பான்மைகொண்டவனே, உண்மையான தந்தை ஆவான்.

ஆக, தந்தை என்பவன், "தாயுமானவன் ஆக இருப்பதே சாலச் சிறந்தது. பாவேந்தன் பாரதிதாசன் முழுங்கியதுபோல, தன் பெண்டு, தன்பிள்ளை, தன்வீடு என்றிருக்கும் சின்னதொரு கடுகு உள்ளம்..." கொண்டவனாக இருப்பவன் என்றைக்குமே உண்மைத் தந்தையாகவே முடியாது. தனிப்பெருங் கருணை தாராள மனத்தெளிவு, நன்னடத்தை, ஒழுக்கப் பண்பு ஆகியமுப்பெரும் தகுதிகளும் உலகளாவிய தந்தையரின் உயர் தனிப் பெரும் அடையாளங்களாம்.



### தந்தையர் பின்னணி வரலாறு

அமெரிக்க நாட்டில் வாழ்ந்த சிறந்த இராணுவ வீரனான வில்லியம் ஆறு குழந்தைகளின் தந்தையாவார். பிள்ளைகளின் சிறுவயதிலேயே தன் மனைவியை இழந்தார். பிள்ளைகள் தந்தையின் அரவணைப்பில் கடுமையான சிரமங்களுக்கிடையில் பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்டனர். கிராம ரீதியான வை.எம்.சி.ஏ.சங்கம் குழந்தைகளுக்கான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்கியது.

1909ஆம் ஆண்டில் சொனாரா லூயிஸ் ஸ்மார்ட்டாட் என்ற இளம் பெண்ணின் தந்தையான வில்லியம் தாயின் கடமைகளையும் தன்னுடைய கடமைகளையும், தங்களிடம் வைத்திருந்த பாச உணர்வுகளையும் மிக சிரமத்துடன் நிறைவேற்றி வருவதை உணர்ந்த சொனாரா லூயிஸ் ஸ்மார்டாட், அன்னையர் தினம் கொண்டாடப்படுவது போல் தந்தையர் தினமும் கொண்டாடப் பட வேண்டும் என்ற அவசியத்தை முன் வைத்தபோது, அவளது முன் மொழிவு ஒரு கேலியாக உணரப்பட்டது. தொடர்ந்தும் அவள் தனது முயற்சியைக் கைவிடவில்லை. இந்த முயற்சியின் பயனாக 1910ஆம் ஆண்டில் முதன் முதலில் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது.

1972இல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ரிச்சர்ட் நிக்ஸனால் அந்த நாட்டின் அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை தினமாக தந்தையர் தினம் அறிவிக்கப்பட்டது. தந்தையர் தினம் கொண்டாடப்படும் திகதி நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இந்தியா உட்பட உலகின் 52 நாடுகளில் ஜூன் மாதத்தின் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை தந்தையர் தினம் கொண்டாடப்படுகின்றது.

### அடையாளத்தின் ஒளி தந்தை

ஒரு சமூகத்தில் ஒரு சந்ததியின் அடையாளத்தை பிரதிபலிக்கும் ஒளி விளக்கு தந்தையாவார். தனது பிள்ளைகளுக்கு தன் கடந்த காலத்தை ஆராய்ந்தறிந்து அவர்களின் வாழ்வுக்குரிய பண்பாடு, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், விதிமுறைகள், சமயம், தேசியம் போன்ற பண்பாட்டுக் கூறுகளை விழுமியங்களாகக் கற்றுக்கொடுக்கும் நல்லாசானே ஒரு சிறந்த அடையாளத்தின் தந்தையாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றார். எனினும் தந்தைவழி சமூக அடையாளமே இன்று பல சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சமூக அடையாளமாகக் காணப்படுகிறன.

### ஒரு தந்தையின் பாதுகாப்பு

வாழ்க்கையெனும் படகு எதிர்ப்பலைகளால் அமிழ்ந்து விடாதபடி ஒரு சுக்கானாகச் செயற்பட்டு எமது வாழ்க்கைப் பயணத்தை அமைதிப்படுத்தும் கருணை கொண்ட தன்னலமற்ற சேவையாளனே தந்தையென்ற பதத்துக்கு உரித்துடையவர். எமது வாழ்க்கைப் பயணம் சீர்குலைந்து விடாதபடிக்கு சிறந்த உறைவிடம், ஆகாரம், பொருளாதாரப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, அரசியல் பாதுகாப்பு, சமூகத்தைப் புரிந்து கொள்ளும் ஆற்றல், அனுபவங்கள், ஒழுக்கம், நன்மதிப்பு, தெரிவுசெய்யும் ஆற்றல் பயணிக்க வேண்டிய நேர்மையான பாதை, அன்பு நிறைந்த சூழலை உரு வாக்குதல், அதனைத் தொடர்ந்து பாது காக்கும் திறன், உணர்வுகளின் உறுதி நிலை, செவிமடுக்கும்திறன், சரீரப் பாதுகாப்பு, சரியான உளநிலையை மேம்படுத்தல், நெருங்கிய சுகாதாரமான தொடர்பாடல், உள்ளார்ந்த சுகம், குடும்ப ஐக்கியம் போன்ற சாராம் சங்களை ஒருங்கிணைத்த ஒரு பாதுகாப்பை வழங்குகின்றவர் ஒரு தந்தையாவார்.

### ஒரு தந்தையின் பராமரிப்பு

அழகானதொரு குடும்ப அலகின் பாதுகாவலனாகவும், பராமரிப்பாளனாகவும் குடும்பத்தை மகிழ்ச்சிப்படுத்தி சகிப்புத் தன்மையுடனும், புரிந்துணர்வுடனும் சமுதாயமயப்படுத்தப்பட்ட வெற்றியுள்ள நபர்களாகவும் நீண்டகால நெருங்கிய உறவு கொண்ட ஆதரவு மிக்க சமூகத்துடன் இணைந்தவர்களாகவும் நீண்டகாலமாக திருமணப் பந்தத்தில் வெற்றிவாகை சூடுகின்றவர்களாகவும் தங்கள் துணையுடன் காதல் பங்காளிகளாக திருப்தியடைவர். இவர்கள் நெருக்கமான உறவைப் பேணுவதிலும் வெற்றி கண்டுள்ளதோடு "உள்ளான தார்மீக நியாயம்" தார்மீக மதிப்புக்கள் வல்லமை படைத்த உணர்வுகளோடு கடவுளது படைப்பின் இரகசியத்தை பேணுகின்ற வர்களாகவும் ஒரு சிறந்த தந்தையின் அரவணைப்பில் ஒரு சந்ததி வடிவமைக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர்.

### அறிவைப் புகட்டும் நல்லாசான்

ஒருதாயின் கருவறை முதல் இவ்வுலகில் வாழும் கால எல்லை வரைக்கும் ஒரு தந்தை நல்லாசானாக தன் பிள்ளைகளுக்கும் தன் சந்ததிக்கும் ஒரு அறிவுப் பாலமாக மிளிர்கின்றார். அதாவது "தாயிற் சிறந்த கோயிலும் இல்லை", "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்ற ஔவையாரின் அமுத மொழியும் அன்னையிடம் நீ அன்பை வாங்கலாம், தந்தையிடம் நீ அறிவை வாங்கலாம் என்ற பாடல் வரிகளும் தந்தை அறிவார்ந்த நல்லாசான் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. புறநானூற்றுப் பாடல் வரியான ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே... என்பதனூடாக தந்தையின் அறிவின் முதன்மைத்தத்துவத்தை அறியலாம்.

*கட்டுரையாளர்: யாழ்ப்பாணக் கல்லூரியின் வரலாற்றுத்துறை ஆசிரியர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** உங்களுக்கு தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். அனுபவசாலிகளின் ஆலோசனை தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியை உருவாக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**இடபம்:** பிறர் மனம் சங்கடப்படாத அளவில் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட பணிகள் தாமதமாகலாம். சேமித்த பணத்தை செலவுக்கு எடுக்க வேண்டி வரும். வாகனம் இயக்கும் போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** புகழ்ச்சிக்கு மயங்காமல் பணிபுரிவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் கேட்ட சலுகை ஒன்று கிடைக்கும். புத்திரர்கள் படிப்பில் முன்னேற, தேவை யான உதவி புரிவீர்கள்.

**கடகம்:** மனதில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, சில புதிய திட்டங்களை வகுப்பீர்கள். கொடுக்கல், வாங்கல் சீராக நடக்கும். குடும்ப பிரச்சினை ஒன்றில் சுமுக தீர்வு கிடைக்கும்.

**சிங்கம்:** உங்கள் திறமையை வெளிப்படுத்தி, பணிகளை சரிவரச் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். சேமித்த பணத்தை செலவுக்கு எடுக்க வேண்டி வரும். புத்திரர்களின் நற்செயல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். ஏராளமான பணம் சில வகைகளில் செலவாகும். உடல் நலத்துக்கு மருத்துவச் செலவு உயரும்.

**துலாம்:** எண்ணங்கள் நிறைவேற அனுகூலமான நல்லநாள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி செய்ய, தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**விருச்சிகம்:** வீண் பேச்சு பேசுபவர்களிடம் இருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிரமம் இருந்தாலும், அதை சரிசெய்ய, உரிய திட்டங்களை தீட்டி விடுவீர்கள். குடும்பச் செலவு அதிகரிக்கும்.

**தனுசு:** எந்த செயலையும் தீவிரமாக சிந்தித்தே நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று லாபம் அதிகரிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு உண்டாகும்.

**மகரம்:** சிலர் சொல்லும் அறிவுரை மனதுக்கு சங்கடம் தரும். தொழில், வியாபாரத்தில் சிக்கல் இருந்தாலும், ஓரளவு லாபம் கிடைக்கும். குடும்ப பிரச்சினைகளில் விட்டுக்கொடுத்து சென்றால், கருத்து வேறுபாட்டைத் தவிர்க்கலாம்.

**கும்பம்:** உழைப்பின் பலன் முழுவதுமாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து சாதனை படைக்கலாம். உடல்நிலை நன்றாக இருக்கும். புதிய சொத்து வாங்க அனுகூல சூழ்நிலை ஏற்படும்.

**மீனம்:** மனதில் நம்பிக்கையுடன் எல்லா பணிகளையும் செய்து முடிப்பீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, நண்பரின் உதவி கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருள் வாங்குவீர்கள்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | | | 8 | | | 1 | |
| 7 | | 3 | 6 | | | | | 4 |
| | 8 | | | 3 | | | | |
| | | | | | | 1 | | 7 |
| | | | 9 | | 5 | | | |
| 3 | | 7 | | | | | | |
| | | | | 2 | | | 4 | |
| 8 | | | | | 6 | 5 | | 3 |
| | 7 | | | 4 | | | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## தமிழுக்கு விடைகொடுக்கும் லட்சுமிராய்



லட்சுமிராய் தனது 50ஆவது படமாக 'ஜுலி 2' ஹிந்தி படத்தில் நடிக்கிறார். லோரன்ஸ் நடிக்கும் மொட்ட சிவா கெட்ட சிவா படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும் நடனம் ஆட ஒப்புக்கொண்டார். வேறு படம் எதையும் ஒப்புக்கொள்ளவில்லை. ஹிந்தியில் 'ஜுலி 2' படத்தில் முழுக் கவனத்தையும் திருப்பியுள்ளார். "இந்தியில் அறிமுக படம் மட்டுமல்ல, எல்லா மொழியையும் சேர்த்து நான் நடிக்கும் 50 ஆவது படமும் இதுவாகும். சில காட்சிகளில் எளிமையான தோற்றத்தில் பக்கத்து வீட்டு பெண் போல் நடிக்கிறேன்" என்கிறார். ஜுலி படத்தைத் தொடர்ந்து ஹிந்தியில் மேலும் சில படங்களில் நடிக்க லட்சுமிராய் முயன்று வருகிறார். இதனால் தமிழ் சினிமாவிலிருந்து அவர் விடைபெறவுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்றைய சுடோக்கின் தீர்வு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 9 | 8 | 2 | 7 | 5 | 3 | 6 |
| 2 | 3 | 8 | 1 | 5 | 6 | 7 | 9 | 4 |
| 7 | 5 | 6 | 4 | 3 | 9 | 2 | 8 | 1 |
| 5 | 6 | 4 | 7 | 9 | 2 | 8 | 1 | 3 |
| 3 | 7 | 1 | 5 | 4 | 8 | 9 | 6 | 2 |
| 9 | 8 | 2 | 3 | 6 | 1 | 4 | 5 | 7 |
| 4 | 9 | 7 | 6 | 1 | 5 | 3 | 2 | 8 |
| 8 | 1 | 5 | 2 | 7 | 3 | 6 | 4 | 9 |
| 6 | 2 | 3 | 9 | 8 | 4 | 1 | 7 | 5 |

WhatsApp



டாக்டர், எனக்கு உங்க ஆஸ்பத்திரியில 6 ஆம் நம்பர், 100 ஆம் நம்பர் தவிர எது வேணுமானாலும் கொடுங்க!'
ஏன்?....'
ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று சொல்றாங்களே!'
அதுதான் டாக்டர்.

ஆளே இல்லாத செவ்வாய்க் கிரகத்துக்கு ராக்கெட் விடுறீங்க சரிதான்



ஆள் இருக்கிற எங்க ஊருக்கு எப்ப ஐயா பஸ் விடுவீங்க...!

கல்யாணத்துக்குப் பின் பெண்கள் 'ஆன்ரி' ஆகிறார்கள்



ஆண்கள் 'ஆண்டி' ஆகிறார்கள்

HBD#நட்பு (மச்சான்) @SmmSelva · 2h
எத்தனை துன்பங்கள் எதிரே வந்தாலும், அதனை எதிர்த்துப் போரிட்டு வெற்றிகாணும் மனது, ஏனோ! நம் பின்னால் இருந்து தாக்கும் துரோகத்திடம் மட்டும் தோற்றுவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | 800 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 500 | 500 | 650 | 800 | 800 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 800 | 800 | 350 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 300 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 600 | – |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 250 | 370 |
| நகரை | 250 | 300 | – | 300 | 600 | – | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | 400 | 200 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 170 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | 400 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 300 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | 300 | – |

## பிளாஸ்ரிக் மக்



சிறுவர்களுக்கான பிளாஸ்ரிக் மக் அறிமுகமாகியுள்ளது. இறப்பரில் முப்பரிமாண வடிவங்களுடனும், கீழே விழுந்தாலும் நொறுங்காத வகையில் இவை உருவாக்கப்பட்டுள்ளன. 100 ரூபாவில் இருந்து 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

இது புதுசு

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 120 | 100 | 160 | 80 | 120 | – | 60 |
| கத்தரி | 120 | 80 | 70 | 200 | 80 | 200 | – | 80 |
| கரட் | 250 | 280 | 320 | 120 | 120–240 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 80 | 60–70 | 80 | – | 40 |
| பயிற்றை | 180 | 140 | 120 | 180 | 140–150 | 120 | – | 80 |
| பாகல் | 250 | 200 | 200 | 240 | 160–180 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 70 | 160 | 100–120 | – | – | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120–150 | 180 | 140 | 200 | – | 130 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 180 | 180 | 220 | 240 | 160 | 200 | – | 150 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 20–30 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 400 | 600 | 500–600 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 100 | 90 | 140 | 100 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 160 | 180 | 140 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 140 | 140 | 120 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 240 | 100–180 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 160 | 240 | 180 | 250 | – | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 20–30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 | 110–120 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 240 | 250 | 200 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 250 | 260 | 300 | 240 | 300–400 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 160 | – | 160 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 800–1000 | 240 | 800 | 300 | – | 400 |

## காய்கறி வடை



### செய்முறை

வேகவைத்த உருளைக்கிழங்கு -2
கரட் துருவல் - 2 கரண்டி
முட்டைகோஸ் துருவல் -2 கரண்டி
நறுக்கிய குடைமிளகாய் - 2 கரண்டி
கோதுமை மா -தலா 2 கரண்டி
மிளகாய்த்தூள் -கால் கரண்டி
இஞ்சி.பச்சை மிளகாய் சேர்த்து அரைத்த விழுது -1 கரண்டி
உப்பு எண்ணெய் -தேவையான அளவு



### செய்முறை

உருளைக்கிழங்கின் தோலை நீக்கி மசித்துக்கொள்ளவும். இதனுடன் கரட் துருவல், முட்டைக்கோஸ் துருவல், நறுக்கிய குடைமிளகாய், இஞ்சி, பச்சை மிளகாய், மிளகாய்த்தூள் கோதுமை மா, உப்பு போட்டு கலந்து பிசையவும். இந்தக் கலவையைப் பெரிய எலுமிச்சை அளவு உருட்டி வடையாகத் தட்டவும், சட்டியில் எண்ணெயை ஊற்றி கொதித்ததும் தட்டி வைத்துள்ள வடைகளைப் போட்டுப் பொன்னிறமாக வேக வைத்து எடுக்கவும். ஏதேனும் ஒரு சட்னி அல்லது சோஸுடன் பரிமாறவும்.

## சாப்பிட வேண்டிய உணவுகள்

**முட்டை**
முட்டையில் புரதச்சத்து நிறைந்து காணப்படுகிறது, தினமும் அதிகமாக உடல் உழைப்பு செய்பவர்கள் தினமும் ஒரு முட்டை சாப்பிடலாம். மற்றவர்கள் வாரம் மூன்று முட்டை சாப்பிடலாம். 100 கிராமில் 13 கிராம் புரதம் உள்ளது.

**அசைவ உணவுகள்**
கோழி இறைச்சி போன்ற அசைவ உணவுகளில் புரதச்சத்து அதிகமாக இருக்கிறது. கோழி இறைச்சியை எண்ணெயில் பொரித்துச் சாப்பிடக்கூடாது. 100 கிராம் கோழி இறைச்சியில் 27 கிராம் புரதம் உள்ளது.

**பருப்பு வகைகள்**
துவரம் பருப்பு, பாசி பருப்பு என பருப்பு வகைகள் அனைத்திலும் புரதச்சத்து நிறைந்திருக்கிறது. முளைக்கட்டிய பயிர்களில் புரதச்சத்து அதிகளவு உள்ளது. பச்சைப் பயிரில் மட்டும் 24 கிராம் அளவுக்குப் புரதம் உள்ளது.

**யோக்கட், சீஸ்**
யோக்கட் எனப்படும் தயிர், சீஸ் போன்றவற்றில் புரதச்சத்து நிறைந்துள்ளது. எனினும் இதில் கொழுப்புச்சத்தும் நிறைந்து காணப்படுவதால், இதனை அளவாகவே உண்ண வேண்டும்.

## நாளை

ஆனி-10
வெள்ளிக்கிழமை -24.06.2016
திதி: சதுர்த்தி பி.ப.04.19வரை
நட்சத்திரம்: திருவோணம் மு.ப.09.40 வரை
ராகுகாலம்: 10.25-11.55 வரை
சுபநேரம்: 05.55-07.25 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்

### 500 மில்லியன் பயனாளர் இன்ஸ்ராகிறாமில்



ஒளிப்படங்களை பகிர்ந்துக் கொள்ளும் வகையிலான இன்ஸ்ராகிறாமில் 500 மில்லியனுக்கும் அதிகமான செயல்திறன் மிக்க பயனர்கள் இணைந்துக் கொண்டுள்ளனர் என்று இன்ஸ்ராகிறாம் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் சுமார் 300 மில்லியனுக்கும் அதிகமான மக்கள், நாளொன்றுக்கு ஒரு தடவையேனும் குறித்த செயலியைப் பயன்படுத்துகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு பேஸ்புக் நிறுவனத்தால் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்யப்பட்டு, இன்று வரையான குறுகிய காலப் பகுதிக்குள் மக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றுள்ளது.

இதில் நாளொன்றுக்கு சராசரியாக 95 மில்லியன் ஒளிப்படங்கள் மற்றும் காணொளிகள் பதிவேற்றப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

### சிகாவைக் கண்டுபிடிக்க மைக்ரோசொப்ட் முயற்சி

நுளம்பால் பரவிவரும் சிகா வைரஸ் தொற்று பரவுவதை கண்டறியும் வகையிலான கருவியொன்றை தயாரிப்பது தொடர்பில் மைக்ரோசொப்ட் ஆராய்ச்சியாளர்கள் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மைக்ரோசொப்டின் முன்னெச்சரிக்கை ஆராய்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே குறித்த கருவி தயாரிக்கப்படவுள்ளது.

சிகா வைரஸ் தொற்று கடந்த ஆண்டு பிரேசிலில் கண்டறியப்பட்டது. இந்த தொற்றால் சுமார் ஆயிரத்து 400 பேர் பாதிக்கப்பட்டனர். சிகா அதன்பின்னர் இதுவரை சுமார் 39 நாடுகளில் பரவியுள்ளது.



CSE COLOMBO STOCK EXCHANGE

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 22/06/2016 | | | [illegible] | | | |
| www.cse.lk | | | [illegible] | TKL.N0000 | 36.5 | 5,337,527 | 
| ASPI | -26.08 | 6,420.80 | 6,446.88 | | | |
| S&P SL20 | -18.25 | 3,379.95 | 3,398.20 | | | |
| [illegible] | | 570,123,802 | 474,894,791 | | | |
| [illegible] | | 408,911,552 | 206,011,642 | | | |
| [illegible] | | 455,826,784 | 187,966,442 | | | |
| [illegible] | | 161,210,224 | 268,883,149 | | | |
| [illegible] | | 114,294,984 | 286,928,348 | | | |

| [illegible] | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | TKL.N0000 | 36.5 | 5,337,527 | 188,890,808.80 |
| [illegible] | COMB.N0000 | 125 | 1,098,275.00 | 136,409,714.70 |
| [illegible] | SPEN.N0000 | 75 | 352,786.00 | 25,477,150.00 |
| [illegible] | COMB.X0000 | 109 | 225,321.00 | 24,591,672.90 |
| [illegible] | SAMP.N0000 | 230.5 | 81,702.00 | 18,877,081.10 |
| [illegible] | KFP.N0000 | 167 | 80,462.00 | 13,437,066.00 |
| [illegible] | HNB.X0000 | 175 | 68,860.00 | 12,050,695.80 |
| [illegible] | HHL.N0000 | 87 | 111,906.00 | 9,717,443.90 |
| [illegible] | HNB.N0000 | 214 | 43,706.00 | 9,394,926.50 |
| [illegible] | JKH.N0000 | 137.9 | 50,546.00 | 7,988,747.90 |



| [illegible] | |
|---|---|
| [illegible] | 294 |
| [illegible] | 206 |
| [illegible] | 13.2 |
| [illegible] | 1.5 |
| [illegible] | 3 |

# சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையில் விரைவில் பணம் செலுத்தும் இயந்திரம்

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளையில் விரைவில் பணம் செலுத்தும் இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

38 வருட பழைமை வாய்ந்த சாவகச்சேரி கிளை முதற்றரக் கிளையாகும். வடபுலத்தில் யாழ்ப்பாணம் மேற்றரக் கிளை மற்றும் வவுனியா கிளை ஆகியவற்றுக்கு அடுத்த படியாக சாவகச்சேரிக் கிளையில் பணம் செலுத்தும் இயந்திரம் பொருத்தப்படவுள்ளது.

வங்கியின் சாவகச்சேரிக் கிளை சாவகச்சேரி நகரசபையின் பொன் விழா மண்டபத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. அதன் ஆரம்ப நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் எஸ்.சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரில் 36 வருடங்களாக வங்கிக் கிளை இயங்குகின்றது. பிரதேசத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் போதும் போர் வேளையிலும் வங்கி வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கியுள்ளது.

சிறப்பான பணிக்கு கிளையின் வாடிக்கையாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பே காரணமாக அமைந்துள்ளது. வங்கியில் பணியாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு அளப்பரிய சேவைகளை வழங்கியமையாலேயே வடபுலத்தில் இயங்கும் முதற்றரக் கிளைகளில் ஒன்றாக சாவகச்சேரி கிளை இயங்குகிறது.

**வணிகம்**

தற்போது மாறிவரும் தொழில்நுட்ப முறைக்கேற்ப மாறவேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு நாமும் தள்ளப்பட்டுள்ளோம். வங்கி வாடிக்கையாளர்களின் நலன் கருதி பல்வேறு தொழில்நுட்ப சேவைகளை வங்கி வழங்கி வருகிறது.

ஏ.ரி.எம். அட்டை, கடன் அட்டை, டெபிட் அட்டை போன்ற பல்வேறு சேவைகளை வழங்கியுள்ளது. விரைவில் வர்த்தகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் நலன் கருதி பணம் செலுத்தும் இயந்திரம் இந்தக் கிளையில் பொருத்தப்படவுள்ளது. வாடிக்கையாளர்கள் இந்த இயந்திரத்தில் தமது இலக்கத்தை அழுத்தி விட்டுப் பணத்தை வைப்பிலிட்டால் உடனடியாக அவர்களது கணக்கில் வரவு வைத்துப் பற்றுச் சீட்டு வழங்கும்.

தற்போது வங்கியால் அட்டைகள் வழங்கப்படுவதால் வாடிக்கையாளர்கள் பணம் கையாள்வதைத் தவிர்த்து தமது தேவைகளை நிறைவேற்ற முடியும் என்று அவர் குறிப்பிட்டார். (ந-9)







எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழா நாடெங்கும் உள்ள 146 கிளைகளிலும் கொண்டாடப்பட்டது. சாவகச்சேரி கிளையில் இடம்பெற்ற நிகழ்வில் வாடிக்கையாளர்களுக்கு (நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு, தங்கக் கடன்) பரிசில்கள் வழங்கப்பட்டன. (ந-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியையின் பிணை மனு நிராகரிப்பு

சாவகச்சேரி, ஜூன் 23
மாணவி மீது துர்நடத்தையில் ஈடுபட முற்பட்ட ஆசிரியருக்கு வக்காலத்து வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஆசிரியையும் முன்வைத்த பிணை விண்ணப்பத்தை சாவகச்சேரி நீதிவான் மன்றம் நிராகரித்தது.

தென்மராட்சிப் பிரதேச பாடசாலை ஒன்றில் மாணவி மீது துர்நடத்தையில் ஈடுபட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அத்துடன் குறித்த ஆசிரியர் மீதான குற்றச்சாட்டை மறைக்க முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் அந்தப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் 2 ஆசிரியைகளையும் கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த 5 பேரும் எதிர்வரும் முதலாம் திகதி வரை சாவகச்சேரி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் 5 சந்தேகநபர்களில் ஒருவரான ஆசிரியை, தனது குழந்தையின் நலனைக் கருத்திற்கொண்டு பிணை வழங்குமாறு கோரி சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா ஊடாக நேற்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்திருந்தார்.

எனினும் அவரின் விண்ணப்பத்தை பரிசீலித்த சாவகச்சேரி நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன், வழக்கு விசாரணைகளை பொலிஸார் தொடர்வதால், பிணை வழங்க முடியாது என கட்டளையிட்டார். (வ-9)

# ராணுவ முற்றுகைக்குள் நடேஸ்வரா நேரில் சென்று பார்த்தது அமெ. குழு

யாழ்ப்பாணம், ஜூன் 23
இராணுவத்தின் முற்றுகைக்குள் இயங்கிக் கொண்டிருக்கும் நடேஸ்வராக் கல்லூரியை அமெரிக்கக் குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

அமெரிக்காவின் தொழில்நுட்ப ஆய்வு கூட மிலேனிய எதிர்வு கூறல்களுக்கான அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகை தந்தது. இந்தக் குழுவினர் யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலருடன் கலந்துரையாடல் நடத்தினர். "யாழ். மாவட்டம் எதிர்நோக்கும் சவால்கள் குறித்து ஆராய்ந்தனர்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும் அமெரிக்கக் குழுவினர் சென்றனர். அங்கு பாடசாலையை முழுவதுமாகச் சுற்றிப் பார்வையிட்டனர். பாடசாலையைச் சுற்றி இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதை யும் அவர்கள் அவதானித்தனர். பாடசாலை அதிபருடன் கலந்துரையாடினர். "பாடசாலைக்கு விசேட பஸ் சேவை தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வாறில்லாமல் சாதாரணமாக சகல பஸ்களும் இங்கு வந்து செல்லக்கூடிய வாறான நிலைமை ஏற்படுத்தப்படவேண்டும். மேலும் பாடசாலையின் தேவைகள் குறித்தும் அவர்களுக்குத் தெரிவித்தோம்" என்று பாடசாலை அதிபர் குறிப்பிட்டார். (வ-5-106)

## கொத்துக்

முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று இடம்பெற்றது. இதன் போது கொத்துக்குண்டு விவகாரம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் ராஜித தெரிவித்ததாவது:
இதுபோன்ற பல ஒளிப்படங்கள் ஆரம்பத்திலிருந்து வந்துகொண்டு இருக்கின்றன. அத்தோடு, கொத்துக்குண்டுகள் இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கு ஆதாரம் உள்ளதா ? மீட்கப்பட்டதாகக் கூறப்படும் கொத்துக்குண்டுகளில் எங்கேயாவது இராணுவத்தின் அடையாளங்கள் உள்ளனவா ?

அப்படிப் பயன்படுத்தியிருந்தாலும் இராணுவத்தினர்தான் பயன்படுத்தியிருப்பார்கள் என்பதை எந்த அடிப்படையில் உறுதிசெய்ய முடியும் ? அதனை தமிழீழ விடுதலைப் புலிகளும் பயன்படுத்தியிருக்கலாம்தானே.

இலங்கையில் கண்ணிவெடி அகழ்வுகள் இடம்பெற்று ஆறு வருடங்களைக் கடந்து விட்டன. இந்த இடைப்பட்ட காலத்துக்குள் எதனையும் வெளியிடாமல் இப்போது மட்டும் ஏன் இவ்வாறான ஒளிப்படங்களை இலங்கைக்கு எதிராக வெளியிட வேண்டும்? இதனை நாம் எவ்வாறு முழுமையாக ஏற்றுக் கொள்வது? - என்றார்

குறுக்கிட்ட ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் கருணாசேன பரணவித்தாரண, கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற நபர்கள் அது பற்றிய தகவல்களை வெளியிடுவதே சட்டவிரோதமானது. ஜெனிவாவில் ஐ.நா. கூட்டத்தொடர் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இவ்வாறான தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதானது இலங்கையின் நற்பெயருக்கு சர்வதேச மட்டத்தில் குந்தகம் ஏற்படுத்தும் நோக்கம் என்றே நாம் கருதுகின்றோம் - என்று கூறினார். (வ-5)

## மங்கள

மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் ஒஸ்லோ வந்தடைந்தார். நோர்வே நாட்டின் பிரதமர் அல்னா சொல்பேர்க்கை முதலில் சந்தித்துப் பேச்சினார். இதன் பின்னர், ஒஸ்லோவில் ஆரம்பமான சாவுத் தண்டனைக்கு எதிரான உலக காங்கிரஸ் அமைப்பின் மாநாட்டில் பங்கேற்றார்.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசேனும் வந்திருந்தார். அவருடன் மங்கள சமரவீர பேச்சுக்கள் நடத்தினார். (வ-5)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை பரமேஸ்வரன்



யாழ் பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பரமேஸ்வரன் 20.06.2016 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கரத்தினம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் தயா (சுவிஸ்). நித்தியா(பிரான்ஸ்). திருமகள். நாமகள்( ஆசிரியர் - யா/ பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை). காலஞ்சென்ற இராதாகிருஷ்ணன் மற்றும் சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஸ்பநாதன்(சுவிஸ்). விவேகானந்தன் (பிரான்ஸ்) காலஞ்சென்ற கருணீசன் மற்றும் சாந்தாதேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் மைத்துனரும் சர்மிளா(சுவிஸ்). பார்கவி(சுவிஸ்). முகுந்தன்(பிரான்ஸ்)ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.
தகவல்:
குடும்பத்தினர்.

### கணபதி மார்க்கண்டு

(புதுத்தோட்டம், நெல்லியடி கிழக்கு)

பிறப்பு 28 . 11 . 1939



இறப்பு 21 . 06 . 2016

புதுத்தோட்டம், நெல்லியடி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி மார்க்கண்டு 21.06.2016 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும், ஆழ்வான் - தெய்வி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, நல்லதம்பி, தங்கவேல் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மதியழகன் (லண்டன்), அறிவழகன் (சமுர்த்தி வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கரவெட்டி), அன்பழகன் (இத்தாலி), விஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்மலிங்கம், ரேவதி (லண்டன்), ஸ்ரீரஜனி, மாதினி (ஜேர்மனி), கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் தவமணி, தேவராணி ஆகியோரின் மைத்துனரும், கர்சனா (லண்டன்), அஜிதா, அபிதா, அன்பேந்தினி (ஜேர்மனி), அனுசன் (ஜேர்மனி), துஷானி, சுஜிராஜ், தரன்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.30 மணியளவில் வேரொண்டை இந்து மாயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி 22079)
(13,18,22)
077 735 1318

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு

தோற்றம் 24.04.1934
மறைவு 04.07.2015



தோற்றம் 14.08.1937
மறைவு 21.04.2014

அமரர் கந்தையா அருணாசலம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

அமரர் கனகம்மா அருணாசலம்
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

வேளூடே நீர் சுரந்து விழுதுகளைத் தாங்கி நின்றீர்
வேண்டுவன எல்லாம் வேண்டாமலே விரும்பி ஈந்தீர்
அன்புக்குத் தெய்வமாகவும் அறிவுக்கு ஆசானாகவும் திகழ்ந்தீர்
பண்புடன் எம்மை வளர்த்து பாரினில் ஆளாக்கி
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்துச் சென்ற
அப்பா அம்மாவே ஆண்டுகள் பல சென்றாலும் மறையுமா உங்கள் நினைவு

பாலாவி தெற்கு, கொடிகாமம். (J 2236) (14,17,18) குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
# தர்மலிங்கம் வேலாயுதம்

பிறப்பு 31.05.1946
இறப்பு 04.07.2015



அப்பா ! எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயிலில் கொண்டு ஓராண்டு சென்றாலும்
உங்கள் பிரிவை எண்ணி என்றும் கண்ணீருடன் கலங்கி
நிற்கின்றோம் அப்பா நீங்கள் அங்கிருந்து எங்களைக்
காலமெல்லாம் நல்வழிகாட்டிக் காத்திடுவீர்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

59/5, சென்மேரிஸ்றோட்,
நீர்கொழும்பு.
(J 2198) (14,17,18)
பிள்ளைகள்.
077 338 0117

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்

தில் தேசிய நிகழ்வு இடம்பெற்றது. ஜனாதிபதி இதில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அங்குஅவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஐ.நா. சபையின் சாசனத்துக்கு அமைய செயற்படும் அரசாக நாங்கள் இருக்கின்றோம். அந்த வகையில் சிறுவர்களை பாதுகாத்து போசிப்பதற்கு அரசு பொறுப்புடன் செயற்படுகின்றது. சிறுவர் மீதான துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கு சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைய செயற்படுகின்றோம். சிறுவர்களின் உழைப்பைச் சுரண்டுவதற்குப் பொதுக் காரணமாக வறுமை அமைகின்றது. அதனை ஒழித்து நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்த அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது.

சிறுவர் துர்நடத்தைகள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்களில் இருந்து எமது பிள்ளைகளைப் பாதுகாக்கச் சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும். அதே நேரம் ஏற்கனவேயுள்ள சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும். சட்டத்தினால் மாத்திரம் இதனை நிறைவேற்ற முடியாது. சமூகத்தில் உள்ள அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" – என்றார்.

இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை ஒழித்துக் கட்டும் உறுதி மொழியில் கைச்சாத்திடும் நிகழ்வும் ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. சர்வதேச தொழில் நிறுவனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான பணிப்பாளர் டோங் லீன் லீயினால், இலங்கையை சிறுவர் தொழில் அற்ற ஒரு வலயமாக ஆக்குவதற்கான உறுதிமொழி ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டது. அதில் ஜனாதிபதி கைச்சாத்திட்டார்.

இலங்கையை சிறுவர் தொழிலற்ற ஒரு வலயமாக ஆக்குவதற்கான உறுதிமொழியை குறுஞ்செய்தியூடாக சமூகமயப்படுத்துவதையும் ஜனாதிபதி ஆரம்பித்தார். இதையடுத்து தொலைபேசி இணைப்புகள் ஊடாக எல்லோருக்கும் விழிப்புணர்வுக் குறுந்தகவல் அனுப்பப்பட்டது. (வ-5)

## பாலியல்

பாடசாலை மாணவர்கள் நேற்றுப் போராட்டம் நடத்தினர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் பிள்ளைகள் தெரிவிக்கும் போது பெற்றோர்கள், பாடசாலையைச் சேர்ந்தவர்கள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதைச் செய்ய நாம் தவறுகின்றோம்.

நகரப் பாடசாலையின் பிரச்சினையில் பிள்ளை சம்பவத்தை ஏற்கனவே தெரிவித்துள்ளது. அதனை ஏற்றுக் கொள்ளாமையினாலேயே பெரிய பிரச்சினையாகியுள் ளது.

இவ்வாறான சம்பவங்களை மறைக்க முற்படக் கூடாது. தொடர்புடையவர்களைக் காப்பாற்றமுனையக் கூடாது. பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இத்தகைய குற்றங்களைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்க அனைவரும் முன்வரவேண்டும்.

பாலியல் துர்நடத்தைக் குற்றங்களைத் தடுக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள உரிய அதிகாரிகளுடன் கதைத்த போதும் பலர் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

பாலியல் துர்நடத்தை தொடர்பில் இரகசியமான தகவல்கள் வழங்கப்பட்டால், அதனை உடனடியாகப் பொலிஸாருக்கு வழங்கி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு வலியுறுத்தி வருகின்றோம்.

இவ்வாறான சம்பவங்களினால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இதனை அறிந்தவர்கள் இரகசியமான முறையில் முறைப்பாடுகளையோ, தகவல்களையோ வழங்க முடியும். இந்த முறைப்பாடுகள் உரிய முறையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" – என்றார்.

(உ-வ-5-106)

## வற்

எடுத்துள்ள தீர்மானத்தை அனுமதிக்க முடியாதென்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அரசினால் மேட்கொள்ளப்பட்ட வரி அதிகரிப்பை எதிர்த்து கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தாக்கல் செய்த மனுவொன்றை ஆராய்ந்த போது பிரதம நீதியரசர் கே. ஸ்ரீபவன் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி பெறுமதி சேர் வரி அதிகரிப்பை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் சட்டவிரோதமானது. இந்த வரி விதிப்பை உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வேண்டுகோள்விடுத்தார்.

இந்த வரி அதிகரிப்பு சம்பந்தமாக எதிர்காலத்தில் நிதியமைச்சர் நாடாளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளார் என அரசதரப்பு சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி இவ்வாறு அதிகரிக்கப்பட்ட வரியை வசூலிக்க முடியாதென்று சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர், சட்டரீதியாக அனுமதியின்றி மக்களிடமிருந்து வரி அறவிடுவதை நீதிமன்றம் அனுமதிக்க முடியாதென்றும் தெரிவித்தார்.

(வ-5)

## தவறான

கொள்ளும் கலாசாரம் முடிவுக்கு கொண்டு வரப்படவில்லை. இதில் எந்த முன்னேற்றமும் காணப்படாமை குறித்து எமது ஆழ்ந்த கரிசனையை வெளிப்படுத்துகின் றோம்.

தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் கலாசாரம் காரணமாக இலங்கையில் மீண்டும் மீண்டும் வன்முறைகள் இடம்பெறுகின்றன. இந்தக் கலாசாரத்துக்கு முடிவு காணப்படாமல், நிலைமாறுகால மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைகள் வெற்றியளிப்பது கடினம்.

இலங்கை அரசு காணாமற்போனோர் அலுவலகத்தை அமைப்பதற்கு அவசர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. பெருமளவானோர் காணாமற்போயுள்ளமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு சுயாதீனமான – நம்பகத் தன்மை மிக்க அமைப்பு அவசியம். அதனை ஏற்றுக் கொள்கின்றோம்.

எனினும் இந்த முயற்சிகளில் அரசு வெளிப்படைத் தன்மையைப் பேணவில்லை. பொதுமக்கள் மற்றும் சிவில் சமூகத் தினருடன் கலந்தாலோசிக்காமல், இந்த விடயங்களை முன்னெடுப்பது குறித்து நாங்கள் ஏமாற்றமடைந்துள்ளோம்.

இலங்கை அரசு நிலைமாறுகால நீதி தொடர்பில் தவறான அணுகுமுறையைப் பின்பற்றுகின்றது. பொறுப்புக் கூறுவதற்கான பொறிமுறையைத் தாமதிக்கின்றது. ஆனால் உண்மை ஆணைக்குழுவை அமைப்பதற்கு முயன்று கொண்டிருக்கின்றது.

பொறுப்புக் கூறுதல் மற்றும் இழப்பீடுகள் தொடர்பில் அர்த்தபுஷ்டியான உத்தரவாதங்கள் எதுவும் இல்லை. இவ்வாறான நிலையில் இன்னொரு ஆணைக்குழுவை அமைப்பதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுகின்றது. அரசு தான் வழங்கிய உறுதிமொழிகள் குறித்து அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள நீதிப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான சட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதன்மூலமே இலங்கை அரசு நிலைமாறுகால நீதிக்கான தனது முழுமையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்த முடியும் – என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-5)

## கடத்தப்பட்ட

களை மேற்கொண்டு வந்தனர். இருப்பினும் வர்த்தகர் மீட்கப்படவில்லை. நேற்றுக் காலை வவுனியா பூவரசங்குளம் காட்டுப் பகுதியில் வைத்து கடத்தல்காரர்களினால் குறித்த வர்த்தகர் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கிருந்து வர்த்தகர் ஓட்டோ ஒன்றில் வவுனியாவை வந்தடைந்தார். இதனையடுத்து குறித்த வர்த்தகரை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இந்தக் கடத்தல் தொடர்பான தகவல்களை முழுமையான விசாரணைகளின் பின்னரே தெரிவிக்க்லாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல் தொடர்பில் குறித்த வர்த்தகரின் சகோதரன் தெரிவித்ததாவது:

நேற்றுமுன்தினம் இரவு வர்த்தக நிலையத்தில் இருந்து வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது வெள்ளைவானில் வந்த இனம்தெரியாதநபர்கள் துப்பாக்கியைக் காட்டியே எனது சகோதரனை கடத்தினர். பணம் கேட்டுத்தான் அவர்கள் அவரை கடத்தினார்கள் என சகோதரர் என்னிடம் தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் வவுனியா பொலிஸாரால் மேற்கொள்ளப்படுகின்றன. விசாரணைகள் முடிந்ததன் பின்னர்தான் முழுமையான விடயங்கள் தெரியவரும். எனது சகோதரர் நோய் வாய்ப்பட்டவர் என்பதால், அவரது உடல் நிலை தொடர்பாக வைத்தியசாலையில் பரிசோதிக்கப்பட்டது. தொடர்ச்சியாக அவர் பொலிஸ் நிலையத்தில் தான் உள்ளார் – என்றார்.

இதேவேளை, இந்த வர்த்தகர் கடத்தப்பட்டமையைக் கண்டித்தும் வவுனியா வர்த்தகர்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் வவுனியா வர்த்தகர் சங்கத்தால் நாளை வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முழுக்கத வடைப்புப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது என்று வர்த்தக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

(வ-21)

## காணாமற்

ஒரு மணிக்குக் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் கூடியது. பிரதமர் சட்டவரைவை முன்வைத்தார்.

"காணாமற்போனவர்களை தேடிக் கண்டு பிடிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். காணாமற்போன ஆள்களின் உறவினர்களுக்கு உதவி வழங்கவேண்டும். காணாமற்போனவர்கள் பற்றிய தரவு தளத்தை நிறுவ வேண்டும். இந்த விடயங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மேற்படி அலுவலகத்துக்கும் அதன் பணிகளுக்கும் ஏற்புடைய நடவடிக்கை முறைகளை எடுத்துக்கூற வேண்டும்.

இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்ட வரைவாக இதை முன்வைக்கின்றேன்" என்று தெரிவித்தார் பிரதமர்.

இந்தச் சட்ட வரைவு மீது பிறிதொரு நாளில் விவாதம் நடத்தப்படும். இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

காணாமற்போனோர் விவகாரத்தைக் கையாள்வதற்குத் தனி அலுவலகம் அமைக்கும் யோசனைக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(வ-5)


## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை இராஜகுலசிங்கம் (ராசன்)



யாழ்ப்பாணம், 7 ஆம் கட்டை சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இராஜகுலசிங்கம் (ராசன்) 21.06.2016 செவ்வாய்க் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் தினேஸ் (ஜேர்மனி), டர்சன்(டோகா), சஞ்ஜீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

உடுவில் வீதி,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

077 072 3090

### மனோன்மணி கனகலிங்கம்



காங்கேசன்துறை சோதி வீதியைப் பிறப்பிடமாகவும் குருசுமதவடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மனோன்மணி கனகலிங்கம் கடந்த (20.06.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் உசாந்தினி, கஜேந்தினி (லண்டன்) விதுர்ஷன், சுகிர்தன் கிருஷாளினி ஆகியோரின் அன்புத் தாயும், கிருபாகரன், லதீஸ்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், யாணுசன், பிரித்திப், துவாரகன், அகரன், இனியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குருசுமதவடி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகர் இரத்தினம்



மயிலணி வடக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த நாகர் இரத்தினம் 22.06.2016 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் தயாளன் (ஜேர்மனி), மைதிலி(ஆசிரியர் - யா/வயாவிளான் மத்தியகல்லூரி), சர்மினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுஜிதா(ஜேர்மனி) , ராமதாஸ் (ஆசிரியர் SLPS III கிளி/ கிளிநொச்சி இந்துக்கல்லூரி), சுவர்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்சயன், அஸ்விகா, அஸ்விகன், அபிஷாயினி, ஸ்ருதிகா, அஸ்வின், சாதுரியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.06.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5/4, மயிலணி வடக்கு,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 666 0389/ 077 182 9534


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா வைத்திருந்த இருவர் யாழ்.புறநகர் பகுதியில் கைது

126 கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவரிடம் நடத்திய முறையான விசாரணையின் மூலமாக 300 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் மற்றொருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
குருநகர் சவக்காலை சந்தியில் வைத்து, அதே இடத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞன் 126 கிராம் கேரளா கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன் தினம் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தின் பிரகாரம், சொலமன் வீதி கொய்யாத் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரைக் கைது செய்ததாகத் தெரிவித்த பொலிஸார் அவரிடமிருந்து 300 கிராம் கஞ்சா போதைப் பொருளை மீட்டதாகவும் குறிப்பிட்டனர்.
நேற்று முன்தினம் கைதான முதலாவது சந்தேகநபரை யாழ். நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்திய போது, எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
இரண்டாவது சந்தேகநபரிடம் விசாரணைகள் தொடர்வதால், அதன் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,106)

## விபத்தில் படுகாயமடைந்தவர் நேற்றுச் சாவு

வீதியை நடந்து கடக்க முற்பட்ட விவசாயியை மோட்டார் சைக்கிளில் சென்ற பாடசாலை அதிபர் மோதியதால் படுகாயமடைந்தவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சுன்னாகம் மதவடியில் கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் மயிலணி வடக்கு சுன்னாகத்தைச் சேர்ந்த நாகர் ரத்தினம் (வயது-73) என்பவரே நேற்று முற்பகல் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவத்தையடுத்து பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (வ-4)


## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின்
நிர்வாக உத்தியோகத்தர்
**திருமதி இராஜநாயகி திருச்செந்திநாதன்**
அவர்களின் திடீர் மறைவு எம்மையெல்லாம் ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.**

**பிரதேச செயலாளரும்,
நலன்புரி சங்க
அங்கத்தவர்கள் அனைவரும்.**

## நித்திய வாழ்வுக்குள் ஓர் ஆண்டு நிறைவு நினைவுகளுடன்

பூவுலகில் சங்கமம்
24 . 12 . 1952



நித்தியத்தின் சங்கமம்
24 . 06 . 2015

**எ.சூ.யா. இம்மானுவேல்**

உறவின் நிறைவே அண்ணா நீங்கள் வாழ்விலே காட்டிய வழிகள் எம் வாழ்வின் நிறைந்த பொக்கிஷம் உம் பாச நினைவுகளோடு புலர்கின்ற பொழுதுகள் சொல்கின்ற பாடங்கள் வரிகளில் வடித்திட முடியா வைரமுத்துக்கள் இமைக்கின்ற பொழுதெல்லாம் நன்றியால் சுமக்கின்றோம் தங்களை நிரந்தர வாழ்விலே நிறை இன்பம் காண்க என நிதமும் பரமபிதாவின் பாதங்கள் பணிகின்றோம்.

நாளை (24.06.2016) வெள்ளிக்கிழமை காலை 6.15 மணிக்கு கோப்பாய் புனித மரியன்னை ஆலயத்தில் நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்று இல்லத்தில் நடைபெறும் மதிய உணவு விருந்திற்கு அன்போடு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

**கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.**

**உம் உறவின் நிறைவில் வாழும்
குடும்ப உறவுகள்.**

## இதய அஞ்சலி



தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி
பழைய மாணவரும்
கல்லூரி பழைய மாணவர்
சங்கம், பாடசாலை
அபிவிருத்திக்குழு
ஆகியவற்றின் உறுப்பினரும்,
கல்லூரியின் துடுப்பாட்ட
அணிகளின் பிரதம
பயிற்றுவிப்பாளருமாகிய
**திரு. இ. சிறீதரன்**
அவர்களின்
அன்பு தந்தையார்

**கிருஷ்ணர் இராசா**

அவர்கள் காலமானதையிட்டு நாம் ஆழ்ந்த துயரடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

(C 22080)
(10.17)

**மகாஜனக் கல்லூரிச் சமூகம்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

உதிப்பு:
30 . 08 . 1950



உதிர்வு:
24 . 05 . 2016

**அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்**

கடந்த 24.05.2016 ஆம் திகதி சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.06.2016) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
இந்நிகழ்வுகளில் தாங்களும் கலந்துகொண்டு அவரின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

**மீசாலை வடக்கு, கொடிகாமம்.**

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் ஆன்ம ஈடேற்ற ஆராதனையும்

தோற்றம்
11 . 03 . 1938



மறைவு
25 . 05 . 2016

**அமரர் சின்னத்துரை சிவஞானம்**
(அல்லைப்பிட்டி, மண்டைதீவு, வட்டக்கச்சி)

25.05.2016 ஆம் திகதி இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர் தந்தையார் அமரர் சின்னத்துரை சிவஞானம் அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆன்ம ஈடேற்ற ஆராதனையும் நாளை (24.06.2016) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரின் சொந்த இல்லமான 882, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சியில் நடைபெறும். எம்மீது அன்பும், மதிப்பும் கொண்ட அனைவரையும் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று நடைபெறும் ஆராதனை நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.

**882, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
021 320 7584**

**குடும்பத்தினர் சார்பாக
சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கிளிநொச்சி.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் நல்லதம்பி கனகலிங்கம்**

தோற்றம்: 08-03-1951 மறைவு: 24-05-2016

வாழ்ந்து களித்தலே எமது வாழ்விற்குக் கொடுக்கும் மரியாதை. அதை நீங்கள் செவ்வனே ஆற்றினீர்கள். உங்கள் வாழ்வை ஒரு கொண்டாட்டமாய் வாழ்ந்தீர்கள். எமது குடும்பத்தினருடைய, உங்களுடைய உறவுகளினது, நண்பர்களினது மனதில் இடம்பிடிக்கும் வண்ணம் ஒரு சிறந்த ஆளுமையாய் வாழ்ந்து மறைந்து எம் மனங்களில் வாழ்கின்ற உங்களை எண்ணிப் பெருமைகொள்கிறோம்.

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

எதிர்வரும் சனிக்கிழமை(25-06-2016) மதியம் 12 மணிக்கு எமது வீட்டில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து கொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர் மற்றும் நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

சிவன் கோவிலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்

குடும்பத்தினர்
021 223 13 86


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தரப்புத் தொடர் இறுதியில் ஆஸி.

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் தீவுகளை வீழ்த்தியதன் மூலம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது ஆஸ்திரேலியா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஓட்டமெதனையும் பெறாதநிலையில் சாள்ஸை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் ஸ்ராக். பிளெச்சர், பிராவோ இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்த போதிலும் சாமுவேல்ஸ், ரம்டின் இணை நீண்டு நிலைபெற்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து சதத்தையும் நெருங்கிக் கொண்டிருந்தனர். 9 ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டார் ரம்டின். ஆனால் மறுமுனையில் சாமுவேல்ஸ் சதத்தை நிறைவுசெய்ய சரிவிலிருந்து மீண்டது தீவுகள். 125 ஓட்டங்களுடன் சாமுவேல்ஸை வீழ்த்தினார் பல்க்நெர். முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் 282-8.

பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக ஸ்ராக் 3 இலக்குகளையும், பல்க்நெர், போலண்ட் இருவரும் தலா இரு இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கு ஆரம்ப வீரர்களான கவாஜாவும் பின்ஞ்சும் ஏமாற்றவே செய்தனர். அணி 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இருவரும் களத்தில் இல்லை. சிமித், பெய்லி இணை நம்பிக்கை வழங்கியது. ஆஸ்திரேலியா 99 ஓட்டங்களைப் பெற்றிருந்த பொழுது 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பெய்லி. 78 ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் சிமித். மார்ஷ், மக்ஸ்வெல் இணை சராசரியையும் சரியாகக் கவனித்து வெற்றியை நோக்கி நடைபோட 8 பந்துகள் மீதமிருக்க தீவுகளை வீழ்த்தியது ஆஸ்திரேலியா. மார்ஷ் 79 ஓட்டங்களுடனும், மக்ஸ்வெல் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக கபிரியேல், பிரீத்வைட், பென் மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

**ஆஸி. - தெ.ஆபிரிக்கா இறுதியில்**

இந்த முத்தரப்புத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா மூன்று முறை மோத வேண்டும். ஆஸ்திரேலியா ஏற்கனவே இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றுவிட்ட நிலையில் தென்னாபிரிக்கா இறுதிக்குச் செல்லும் மற்றைய அணியாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்கா, தீவுகள் இரண்டும் தலா 5 ஆட்டங்களில் விளையாடியுள்ளன. தென்னாபிரிக்கா 12 புள்ளிகளையும், மேற்கிந்தியத் தீவுகள் 8 புள்ளிகளையும் பெற்றுள்ளன. லீக் சுற்றில் இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஆட்டமே எஞ்சியுள்ளது. தென்னாபிரிக்கா வெற்றி பெற்றால் அந்த அணி இறுதிக்குச் செல்வது உறுதி. தீவுகள் சாதாரணமான ஓர் வெற்றியைப் பதிவுசெய்தால் இரு அணிகளும் 12 புள்ளிகளையே பெறும். எனவே ரண்ரேட் அதிகம் வைத்துள்ள தென்னாபிரிக்கா இறுதிக்குச் செல்லும் வாய்ப்பு உள்ளது. (ம)







# இறுதிப் பந்தில் சிக்சருடன் சமன்செய்தது இங்கிலாந்து

## வெற்றியை நழுவவிட்டது இலங்கை

இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இறுதிப்பந்தில் சிக்சரை விளாசி சமன் செய்தது இங்கிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இலங்கையின் ஆரம்ப வீரர்களாக குணதிலக மற்றும் குசல் ஜெனித் பெரேரா. 9 ஓட்டங்களுடன் குணதிலகவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் வில்லி. அயர்லாந்துக்கு எதிராக சதம் கடந்த பெரேராவால் இங்கிலாந்துக்கு எதிராக முடிந்தது 24 ஓட்டங்களே. சந்திமல், மத்தியூஸ் இணை ஆட்டத்தில் அனுபவத்தன்மையை வெளிப்படுத்தியது. அதேநேரம் அளவுக்கு அதிகமாக நிதானிக்கவும் செய்தது. 60 என்ற சராசரியிலேயே இருவரதும் இன்னிங்ஸ் நகர்ந்தது. 83 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் மத்தியூஸ். 37 ஓட்டங்களுடன் இணைப்பாட்டத்தை குலைத்துச் சென்றார் சந்திமல். சந்திமல், மத்தியூஸால் வீணடிக்கப்பட்ட பந்துகளை விரைவான அரைச்சதம் மூலம் சரிசெய்தார் பிரசன்னா. 59 ஓட்டங்களுடன் (28 பந்துகளில்) பிரசன்னாவை வீழ்த்தினார் வோக்ஸ். 73 ஓட்டங்களுடன் மத்தியூஸின் இன்னிங்ஸும் முடிவுகண்டது. முடிவில் இலங்கை 286-9.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக வோக்ஸ், வில்லி, பிளங்கட் மூவரும் தலா இரு இலக்குகளையும், மொயின் அலி ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்துக்கு அடித்தளம் சிறப்பாக அமையவில்லை. றோய் 3 ஓட்டங்களுடனும், ரூட் 2 ஓட்டங்களுடனும் மத்தியூஸால் வீழ்த்தப்பட்டனர். ஹேல்ஸ் 4 ஓட்டங்களுடனும், பரிஸ்ரௌவ் 3 ஓட்டங்களுடனும் லக்மலால் வெளியேற்றப்பட்டனர். மோர்கன், பட்லர் இணை ஓரளவு தாக்குப்பிடித்தது. இருப்பினும் நீடிக்கவில்லை. மொயின் அலியை போல்ட் செய்தார் பிரதீப். தற்போது இங்கிலாந்து 82-6. பட்லருடன் இணைந்தார் வோக்ஸ். சுருட்டி வைக்கப்பட்ட இங்கிலாந்துக் கொடிகள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்தன. பவுண்டரிகளின் பலத்துடன் இங்கிலாந்தின் ஓட்டங்கள் எகிற ஆரம்பித்தன. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் பதிவுசெய்து பதற்றமில்லாது விளையாடிக் கொண்டிருந்தனர். இணைப்பாட்டமாக 138 ஓட்டங்கள் பகிரப்பட்ட வேளையில் 93 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பட்லர். வில்லி ஏமாற்றினா லும் வோக்ஸின் ஆட்டம் இலங்கையின் வயிற்றில் புளியைக் கரைத்தது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் 14 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்றிருந்தது. முதல் ஐந்து பந்துகளில் 7 ஓட்டங்களைப் பெற இறுதிப்பந்தில் 6 ஓட்டங்களைப் பெற்றால் இங்கிலாந்து ஆட்டத்தை சமன்செய்ய முடியும் என்ற நிலையில் சிக்சர் விளாசி சமன்செய்தார் பிளங்கட். 2 இலக்குகளையும் ஆட்டமிழக்காது 95 ஓட்டங்களையும் பெற்ற வோக்ஸ் ஆட்டநாயகனானார்.

பந்துவீச்சில் இலங்கை சார்பாக லக்மல், மத்தியூஸ், பிரதீப் மூவரும் தலா இரு இலக்குகளையும், மஹரூப், பிரசன்னா இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

## வீராங்கனையிடம் வழிப்பறி

பிரேஸிலின் ரியோடி ஜெனிரோ நகரில் இன்னும் சில வாரங்களில் ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்காக ஆஸ்திரேலியாவில் இருந்துசென்று தங்கியிருக்கும் படகோட்ட வீராங்கனையிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான படகோட்டப்போட்டியில் ஆஸ்திரேலியாவை பிரதிநிதித்துவம் செய்ய விருக்கும் லெய்சில் தெஸ், அணியின் உடற்கூற்று நிபுணரான சாரா றொஸ் இருவருமே இவ்வாறு வழிப்பறியில் சிக்கியுள்ளனர். சில தனிப்பட்ட தேவைகளுக்காகச் சென்று மீண்டும் விடுதிக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது அங்குவந்த இரு நபர்கள் குறித்த வீராங்கனையையும் உடற்கூற்று நிபுணரையும் துப்பாக்கி முனையில் மிரட்டி கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். எவ்வளவு பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன என்று இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. சம்பவத்தையடுத்து ஒலிம்பிக் தொடருக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப்படுத்த வேண்டுமென ஆஸ்திரேலியா கேட்டுள்ளது. (ம)



## விடைபெறுகிறார் இப்ராகிமோவிக்

ஸ்வீடன் அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான இப்ராகிமோவிக் நடைபெறுவரும் யூரோ கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நடப்பு வருட யூரோ கிண்ணத் தொடரில் ஸ்வீடன் இதுவரை அயர்லாந்து, இத்தாலி அணிகளை எதிர்கொண்டுள்ளது. இந்த இரண்டு ஆட்டங்களில் ஒரு கோலைக்கூட இப்ராகிமோவிக்கால் பதிவு செய்ய முடியவில்லை. இதனால் அவர்மீது அதிருப்தி தெரிவிக்கப்பட்டுவந்தநிலையில் தனது ஓய்வு முடிவை நேற்று அறிவித்தார். (ம)

# பிரேஸிலின் முகாமையாளராக ரைட்

பிரேஸில் தேசிய கால்பந்தாட்ட அணியின் முகாமையாளராக ரைட் நியமிக்கப்பட்டுள்ளார்.

கோப்பா அமெரிக்கா தொடரில் பிரேஸில் அணி லீக் சுற்றுடன் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து முகாமையாளர் டுங்காவை அதிரடியாக நீக்கியது. புதிய முகாமையாளராக பிரேஸிலின்



கொரிந்தியன்ஸ் கழகத்துக்காக சிறப்பாகச் செயற்பட்ட ரைட் வருவார் எனப் பரவலாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவரது நியமனம் நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், ரியோ ஒலிம்பிக் தொடருக்குப் பின்னரே தனது பதவியை அவர் ஏற்றுக் கொள்வார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழுகுகளின் கால்பந்தாட்டத் தொடரில் சென். மேரிஸை வீழ்த்தியது அன்ரனிஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 23
நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி வெற்றி பெற்றுள்ளது.

கழுகுகளின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இரணைமாதாநகர் சென். மேரிஸ் அணி மோதியது. ஆட்டத்தின் ஐந்தாவது நிமிடத்தில் அன்ரனிஸின் சார்பாக முதல் கோல் பதிவானது. 19 ஆவது நிமிடத்தில் பதிலடி கொடுத்தது சென். மேரிஸ். வேறெந்த கோல்களும் பதிவாகாத நிலையில் 1:1 என்று சமநிலை கண்டது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 54ஆவது நிமிடத்தில் டேமியனின் உதவியுடன் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தது சென். மேரிஸ். 75 ஆவது நிமிடத்தில் கலிஸ்ரஸின் உதவியுடன் பதிலடி கொடுத்தது சென். அன்ரனிஸ். தற்போது நிலமை 2:2. 77 ஆவது நிமிடத்தில் மற்றுமொரு கோலைப் பதிவுசெய்ய, முன்னிலை வகித்தது சென். அன்ரனிஸ். ஆட்டம் நிறைவடைய இரண்டு நிமிடங்கள் இருக்கையில் அஜித்குமார் கோலொன்றைப் பதிவுசெய்ய 4:2 என்ற கோல் கணக்கில் சென். மேரிஸை வீழ்த்தியது அன்ரனிஸ். (ம-23)




# இலங்கை கிரிக்கெட் சபை அணிக்கு தமிழ் வீரர்கள் இருவர் நுழைவு





யாழ்ப்பாணம், ஜூன் 23
இலங்கை கிரிக்கெட் சபையின் 19 வயதுப் பிரிவு அணிக்கு, சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஜெனிபிளமிங். கே.கபில்ராஜ் ஆகிய இரு வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்ட தென்னாபிரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தின்போது வெளிப்படுத்திய பெறுபேறுகளைத் தொடர்ந்தே அவர்கள் இருவரும் இலங்கை கிரிக்கெட் சபையின் 19 வயதுப் பிரிவு அணிக்கு தெரிவாகியுள்ளனர். (ம-23)

## விளை. அமைச்சரை சந்தித்தது வவுனியா கால்பந்தாட்டச் சங்கம்

வவுனியா, ஜூன் 23
வவுனியா மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகரவைச் சந்தித்து, வவுனியா மாவட்டத்தில் கால்பந்தாட்டத்தை வளர்க்க வேண்டிய செயற்பாடுகள் குறித்து கலந்தாலோசித்ததாக குறித்த கால்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் ஏ.நாகராஜன் தெரிவித்தார்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றதாகவும், சந்திப்பின்போது வவுனியா மாவட்டத்தில் கால்பந்தாட்டத்துக்கு என தனியான ஒரு விளையாட்டு மைதானம் இல்லாததையும், உள்ளக விளையாட்டு அரங்கு இல்லாததையும் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு வந்ததையடுத்து, வவுனியா நகர சபை மைதானத்தை மின்னொளி மூலமான மைதானமாக அமைத்து தருவதாகவும், குறித்த மைதானத்தில் அலுவலக வசதி செய்து தருவதாகவும் அமைச்சர் உறுதியளித்துள்ளதாக வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் தெரியப்படுத்தினார். குறித்த சந்திப்பில் வவுனியா மாவட்ட கால்பந்தாட்ட சங்கத் தலைவர் கே.ஜோன்சன், பொருளாளர் ஏ.ஆர். எம்.லறீப் ஆகியோரும் கலந்து கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-56)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான உடல்நல வலைத்திட்டப் போட்டியில் 17வயது பெண்கள் பிரிவில் இளவாலை கன்னியர்மட அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியும், மூன்றாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரி அணியும் பெற்றன. (ம-23-422)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

**யங்ஹென்றிஸ் வி.க. தொடர்**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் ஞானமுருகன் அணியை எதிர்த்து மன்னார் சென். லூட்சியா அணி மோதவுள்ளது.

**ஆவரங்கால் மத்தியின் தொடர்**

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து வழக்கம்பறை அம்பாள் அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் தமிழ்மதி அணியை எதிர்த்து மட்டுவில் ஞானதீபம் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதியின் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில், சென். லூட்ஸ் அணியை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணமட்ட உடற்பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 23
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட போட்டிகளின் ஓர் அங்கமான உடற்பயிற்சிப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. இன்றுடன் மாகாண மட்ட மூன்றாம் கட்டப்போட்டிகள் நிறைவுபெறுகின்றன.
(ம-23-422)

SAAMSON
Experts in English Training
மூன்றே மாதங்களில்
SPOKEN ENGLISH
ஷாம்சனிடம் பழகுங்கள்!
"குழந்தைகள் பேசப்பழகுவதை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட ஷாம்சனின் இப்பயிற்சியின் மூலம், வயதுவேறுபாடின்றி எவரும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்!"
2வது சனி, ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம்: 25.06.2016
பிரிவு1: 08.00-10.00 பிரிவு3: 01.00-03.00
பிரிவு2: 10.00-12.00 பிரிவு4: 03.00-05.00
ஒவ்வொரு பிரிவிலும் 20 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்!
பயிற்சிநெறிமுடிவில் டிப்ளோமா சான்றிதழ்.
ஷாம்சன் ஆசிரியரின் வாரநாள் வகுப்புகள் : 28.06.2016
பிரிவு 1: காலை-10.00 - 12.00 மாலை
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# ரி-20 தொடரையும் வென்றது இந்தியா
# சிம்பாப்வேயின் போராட்டம் வீணானது




இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் மூன்று ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்தியா 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தையும் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரர்களாக ராகுல் மற்றும் மன்டீப் சிங். ரி-20 ஆட்டங்களுக்கு உரிய விதத்தில் ஆரம்பம் அமையவில்லை. நான்கே ஓட்டங்களுடன் ரிபானோவிடம் சிக்கினார் மன்டீப். ராகுலை போல்ட் செய்தார் மட்சிபா. வந்த வேகத்தில் ரண் அவுட் செய்யப்பட்டார் பான்டே. இந்தியா 27-3. யாதேவ், ராயிடு இருவரும் இணைந்து அணியைப் பத்திரமாக மீட்டெடுத்தனர். இலக்குச் சரிவு ஏற்படாமல் தாக்குப்பிடித்தாலும் பந்துப் பரிமாற்றத்துக்கு ஆறு ஓட்டங்களுக்கும் குறைவான சராசரியே பேணப்பட்டது. இந்தியா 76 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கிரீமரிடம் வீழ்ந்தார் ராயிடு. அரைச்சதம் கடந்தார் யாதேவ். அக்சர் பட்டேலின் இறுதிக்கட்ட அதிரடி கைகொடுக்க முடிவில் இந்தியா 138-6.

பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக ரிபானோ 3 இலக்குகளையும், மட்சிபா, கிரீமர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது சிம்பாப்வே. இந்தியாவைப் போல் சிம்பாப்வேயின் ஆரம்பமும் எடுபடவில்லை. சிப்கபாவை 5 ஓட்டங்களுடன் வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் சரண். மசகட்சாவை பவிலியனுக்குத் திருப்பினார் அக்சர் பட்டேல். சிபன்டா, மூர் இருவரும் இணைந்து சில பவுண்டரிகளைப் பதிவு செய்து சிறிது போராட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த இருவரதும் ஆட்டத்தால் சிம்பாப்வே வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாகவே இருந்தது. சிபன்டா 28 ஓட்டங்களுடனும், மூர் 26 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்ததுதான் தாமதம் சிம்பாப்வேயின் சராசரி ஸ்தம்பிதமானது. வோலர், சிக்கும்புரா அளவுக்கு அதிகமான நிதானத்தை வெளிப்படுத்த இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் 21 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலை. பந்து சரணின் கைகளுக்குள் சென்றது. இரு சிக்சர்களை விளாசினார் மருமா. இறுதிப்பந்தில் 4 ஓட்டங்கள் தேவை என்றிருந்தபோது ஆட்டமிழந்தார் சிக்கும்புரா. மூன்று ஓட்டங்களால் வெற்றிபெற்று 2:1 என்ற கணக்கில் கிண்ணம் வென்றது இந்தியா.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக சரண், குல்கர்னி இருவரும் தலா இரு இலக்குகளையும், அக்சர் பட்டேல், சாகல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
(ம)

கொடையாளருக்கு எமது
மனமார்ந்த வாழ்த்துக்கள்



உயர்திரு. இராசையா
குவேந்திரநாதன்
ராஜா பிளாசா மாதிரிக் கிராம
15 வீட்டுத்திட்டத்தை நன்கொடையாகக்
கையளிக்கும் இந் நாளில் அவரை
வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்

Best Wishes

இருப்பவர் எல்லோருக்கும் கொடுக்கும்வரம்
கிடைப்பதில்லை ஆனால்
இந்த ராஜாவிற்கு கொடுக்கும் வரத்தைக்
கொடுத்த இறைவனை சிரம்தாழ்த்தி
வணங்குவதோடு இந்த ராஜா
பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களுடனும்
வாழ வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர் :
உரிமையாளர் குடும்பத்தினர், ஊழியர்கள்.
ஐங்கரன் களஞ்சியம்
இல.06, பலாலி வீதி, திருநெல்வேலி.

## இன்றைய பலப்பரீட்சை

வித்தியானந்தக் கல்லூரியின் முன்னாள் அதிபர் தங்கராசா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக முள்ளியவளை வித்தியா வி. கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடர் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று பி.ப. 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வற்றாப்பளை தென்றல் அணியை எதிர்த்து அளம்பில் இளந்தென்றல் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் அணியை எதிர்த்து சிலாவத்தை இளம் பறவை அணி மோதவுள்ளது. (ம-102)

உ
சிவமயம்
திறப்பு விழா அழைப்பு
நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷம் ஆனி மாதம்
09 ஆம் நாள் (23.06.2016)
வியாழக்கிழமை முற்பகல் 11.55 மணி முதல்
ஒருமணி வரையுள்ள கன்னி லக்கினமும் திருவோண
நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில்
எம்மால் புதிதாக அமைக்கப்பட்ட
"ஸ்ரீ லலிதா பெஷன்"
புதுக்கடையை இறைவன் திருவருள் துணைகொண்டு
திறப்பு விழா செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம்
தாங்களும்தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து ஆசீர்வதிக்கும்
வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்
165, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தங்கள் நல்வரவை விரும்பும்
திரு.க.சிறிகந்தராசா
திரு.சி.வசிதரன்

வீடு வாடகைக்கு
திருநெல்வேலிக்கு அண்மையில் சிறிய குடும்பத்துக்கு ஏற்ற வீடு உடன் வாடகைக்கு உண்டு. குளியலறை இணைப்பு வசதி இல்லை. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம்.
தொடர்புகளுக்கு: 076 981 0316

பொருளியல் கருத்தரங்கு
க.பொ.த.உயர்தரம்
எதிர்பார்க்கை விடயங்கள்
புள்ளித்திட்ட முறை
ஆரம்பம் : 26.06.2016 ஞாயிறு 1.00 மணி
ஆசிரியர்
திரு. S. ஜெயகுமார்
(B.A (Hons) Eco Spl,MA (Econ) PGDE)
இடம்: D.C.M யாழ் நகர்
தொடர்புகளுக்கு
0777 238 597/ 077 9565 245
வெளி மாணவர்களும் பங்குபற்றமுடியும்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27, 28 / 04 /